465

465

ILANGO
TAMIL READER

BOOK III For FORM III

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 DEC 1942
MADRAS

Vidwan M. RAJAMANIKKAM, B.O.L.,
Tamil Pandit, Muthialpet High School, Madras.

AND

Vidwan M. V. RAGHAVAN,
Tamil Pandit, Ramakrishnah School, Madras.

THE MODEL PUBLICATIONS
Theagarayanagar :: Madras.

இளங்கோ தமிழ் வாசகம்

எட்டாம் புத்தகம்

494.81186

899

ஆக்கியோர் :

வித்வான் மா. இராசமாணிக்கம், B.O.L.

தமிழாசிரியர், முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளி, சென்னை.

வித்வான் ம. வி. இராகவன்

தமிழாசிரியர், இராமகிருஷ்ணர் உயர்நிலைப் பள்ளி, சென்னை.

மாடல் பப்ளிகேஷன்ஸ்

தியாகராய நகர் :: சென்னை

பதிப்புரிமை] 1942 [விலை அணா 9

P31,9

KABEER PRINTING WORKS.
195, HIGH ROAD, TRIPLICANE.

முகவுரை

இளங்கோ வாசகம் என்னும் பெயர்கொண்ட இத் தமிழ்ப் பாட வரிசை, கல்வித் துறையினர் 1939-ல் வெளியிட்ட **பாட இயல்** (Syllabus) படி அமைந்ததாகும். அப் பாட இயலிற் கண்டுள்ள **ஒவ்வொரு குறிப்பும்**, இத்தொகுதிக்கண் சிறப்பிடம் பெற்றுள்ளது.

தமிழ் மாணவர் தம்மளவில் உலகச் செய்திகளை அறிதற்கு வேண்டும் அளவு பிழையறப் பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றிற்கு வேண்டும் தமிழ் அறிவையும், பொது அறிவையும் பெறச் செய்தலே புதிய பாட இயலின் நன்னோக்கமாகும். இந் நோக்கத்தை இத் தொகுதி தன் அகத்தே பெற்றுள்ளது என்பதை இதனைக் கண்ணுறும் அறிஞர் அறிதல் கூடும்.

மொழி, வரலாறு, விஞ்ஞானம், கூட்டுறவு, கைத்தொழில், பத்திரிகைப் படிப்பு, நூல் நிலையம், சுகாதாரம், உழவுத்தொழில், இலக்கியச் செய்திகள், **புதைபொருள் ஆராய்ச்சி**, பண்டைத் தமிழர் நாகரிகம்—வாணிபம்—அரசியல், நாடகம் இன்ன பிறவும் இத் தொகுதியில் இடம் பெற்றுள்ளன. வகுப்புக்கு ஏற்றவாறு அம்மானை, பள்ளு, குறம், கண்ணி முதலிய பழைய பாடல்களும், புதிய பாடல்களும், நீதி, கதை இவை பற்றிய பாடல்களும் செய்யுட் பகுதிகளில் இடம் பெற்றுள்ளன.

ஒவ்வொரு பாடத்தின் ஈற்றிலும் **(1) அரும்பொருள் (2) கேள்விகள் (3) இலக்கணம் (4) பயிற்சி** என்னும் நான்கும்

முறையே தரப்பட்டுள்ளன. **மௌன வாசிப்பின்** அவசியம் ஆங்காங்கு வற்புறுத்தப்பட்டுள்ளது. பலவகைக் **கடிதங்கள், அழைப்பு இதழ்கள், கட்டுரை** முதலியன எழுத மாதிரிகளும் பயிற்சிகளும் இப்பாடவரிசையில் இடம் பெற்றுள்ளன.

சுருங்கக் கூறின், **இளங்கோ வாசக வரிசை**—என்னும் இச் செந்தமிழ்ச் சோலை, மாணவராகிய வண்டுகளுக்குத் தமிழ்த்தேன் நல்கும் மாண்புடையது என்னல் மிகையாகாது. இதனை அறிஞர் உலகம் ஆதரிக்குமென்று நம்புகின்றோம்.

செந்தமிழ் அகம்,
சென்னை.

மா. இராசமாணிக்கம்
ம. வி. இராகவன்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 DEC 1942
MADRAS

பொருளடக்கம்

உரைநடை

எண்	பொருள்		பக்கம்
1.	தமிழ் நூல்கள்	...	1
2.	கண்ணைக் கவரும் காஷ்மீரம்	...	8
3.	சேக்கிழார்	...	15
4.	பயிர்த் தொழில்	...	24
5.	அழைப்பு இதழ்கள்	...	30
6.	பேய் மீன்	...	34
7.	ஆகாய விமானம்	...	39
8.	தளவாய் அரியநாத முதலியார்	...	48
9.	சேரன் – செங்குட்டுவன்	...	57
10.	மேட்டூர் அணை	...	64
11.	திருவள்ளுவர்	...	71
12.	புதைந்த நகரங்கள்	...	78
13.	நான் பார்த்த பள்ளிக்கூடம்	...	87
14.	இராமகிருஷ்ணர் அறவுரை	...	93
15.	ஓவியமும் சிற்பமும்	...	98
16.	இந்தியாவும் கைத்தொழிலும்	...	107
17.	வள்ளல் ஆய் - அண்டிரன்	...	114

செய்யுள்

எண்	பொருள்		பக்கம்
I.	வாழ்த்து		
1.	கடவுள் வாழ்த்து	...	123
2.	தமிழ்த் தாய் வாழ்த்து	...	123
II.	நீதி		
1.	திருக்குறள்	...	125
2.	நாலடியார்	...	129
3.	பழமொழி	...	132
4.	அறநெறிச்சாரம்	...	136
III.	கதை		
	குசேல உபாக்கியானம்	...	138
IV.	பலசுவைப் பகுதி		
1.	தனிப்பாடல் திரட்டு	...	143
2.	கலிங்கத்துப் பரணி	...	144
3.	கம்ப ராமாயணம்	...	145
4.	புறநானூறு	...	145

இளங்கோ வாசகம்

எட்டாம் புத்தகம்

1. தமிழ் நூல்கள்

தமிழ் நாட்டை ஆண்ட சேர, சோழ, பாண்டியர் பல நூற்றாண்டுகளாகத் தாய்மொழி ஆகிய தமிழைப் பெரிதும் போற்றி வளர்த்தனர். ஆயினும், கண்களை இமைகள் காப்பது போலத் தமிழைப் பெரிதும் பேணி வளர்த்த பெருமை பாண்டியர்க்கே உரியது. பாண்டியரே மூன்று தமிழ்ச் சங்கங்களைக் கூட்டித் தமிழ் நூல்களைப் பெருக்கியவர் ஆவர்.

முதல் சங்கத்து நூல்கள் இப்பொழுது இல்லை. இடைச் சங்கத்து நூல்களிற் சிறந்த **தொல்காப்பியம்** என்னும் இலக்கண நூல் ஒன்றே இப்பொழுது இருக்கின்றது; ஏனையவை அழிந்துவிட்டன. கடைச் சங்க நூல்களே இப்பொழுது இருப்பவை. அவற்றின் காலம் ஏறக்குறைய கி. மு. 400 முதல் கி. பி. 200 என ஆராய்ச்சிவல்லார் அறைகின்றனர். தொல்காப்பியத்தின் காலம் சுமார் கி. மு. 500 எனக் கூறலாம். எனவே, கி. மு. 500 முதல் கி. பி. 200 வரை எழுதப்பட்டவை அனைத்தும் **சங்க நூல்கள்** எனப்படும். கி. பி. 200 முதல் இன்றுவரை எழுதப்பட்டுள்ளவற்றில் பல **சமய நூல்களே** ஆகும்; சில நீதி நூல்கள் ஆகும்.

சங்க நூல்கள்

தொல்காப்பியம் :—இது 'எழுத்து, சொல், யாப்பு, அணி' என்னும் மொழி பற்றிய இலக்கணத்தையும், **'பொருள்'** என்

னும் மக்கள் வாழ்க்கை விவரங்களையும் கூறுவது; ஆகவே, இது மொழிக்கும் அதனைப் பேசும் மக்களது வாழ்க்கைக்கும் இலக்கணம் இன்புறக் கூறும் சீரிய நூல் ஆகும். இப் 'பொருள் இலக்கணம்' வேறு எம்மொழி இலக்கண நூலிலும் காணுதல் அருமை! இத் தனிச் சிறப்புத் தமிழ் ஒன்றிற்கே உரியது. இஃது ஏறக்குறைய 1600 சூத்திரங்களைக் கொண்ட நூல். இந்நூல் ஆராய்ச்சியால், (1) இந் நூலுக்கு முன் தமிழில் பல இலக்கண நூல்கள் இருந்தன; (2) புலவர் பலர் இருந்தனர்; (3) இலக்கிய நூல்கள் பல இருந்தன; (4) தமிழர் நாகரிகம்-முதலியன இனிது விளங்கும். இந் நூலுக்கு நச்சினார்க்கு இனியர், சேனாவரையர், இளம்பூரணர், பேராசிரியர், கல்லாடர், தெய்வச்சிலையார் முதலிய பலர் உரை எழுதி இருக்கின்றனர்.

புறநானூறு :—இஃது அறம், பொருள், வீடு என்னும் மூன்று பேறுகளைப்பற்றிய நானூறு பாக்களைக் கொண்ட அழகிய நூல். இஃது ஒருவர் பாடியதன்று. இதில் உள்ள பாக்கள் பல்வேறு காலத்தவை; புலவர் பல்வேறு காலத்தவர்; பாடிய அரசரும் பாடப்பட்ட அரசரும் வள்ளல்களும் பிறரும் பல்வேறு காலத்தவர். இதில் உள்ள பாடல்கள் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர், பாணர், மறவர் முதலிய எல்லா வகுப்பு ஆடவராலும் பெண்டிராலும் பாடப்பட்டவை. இவ்வரிய நூலால், (1) பண்டைத் தமிழ் அரசர் போர் முறை, வீரம், நீதி, அரசியல், (2) பழந் தமிழர் நாகரிகம், (3) பழம் புலவர், அரசர், வள்ளல்கள் இவர்தம் வரலாறுகள் முதலியவற்றை நன்கறியலாம்.

அகநானூறு :—இஃது, இல்லற இன்பம் பற்றிய நானூறு பாக்களைக் கொண்ட நூல். அகம் - இல்லற இன்பம். இதுவும் முன்னதைப் போன்ற தொகை நூலே ஆகும். இந்நூலால் (1) பழந் தமிழர் மணம், இல்லற வாழ்க்கை முதலியனவும், (2) மோரியர் தமிழ் நாட்டின் மீது படை

யெடுத்தது, பாடலிபுரத்துச் சிறப்பு, நந்தர்கள் கங்கை யாற்றுக்கு அடியில் தம் செல்வத்தைப் புதைத்து வைத்தமை முதலிய சரித்திரக் குறிப்புகளும் பிறவும் அறியலாம்.

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை என்பனவும் அகத்தைப்பற்றிக் கூறும் தொகை நூல்களே ஆகும். இவற்றில் உள்ள பாடல்களும் பல்வேறு காலத்தவை; பல்வேறு புலவருடையவை. **பரிபாடல்** என்பது அகமும் புறமும் பற்றிய பாடல்களைக் கொண்ட நூல். இதில் திருமால், முருகன் பற்றிய பாடல்களும் வையைச் சிறப்பைக் கூறும் பாடல்களும் அழகியவை. இந்நூலால் (1) ஆற்றில் புது வெள்ளம் வரும்பொழுது பண்டைத் தமிழர் அணியணியாகச் சென்று நீராடுதல், பொன், வெள்ளி இவற்றாற் செய்த மீன், நண்டு, இறால் முதலியவற்றை ஆற்றில் இடுதல், ஆற்றைப் பூசித்தல், அவரவர் தகுதிக்கேற்ற ஊர்திகளில் நீராடச் செல்லுதல், (2) சத்தியம் செய்யும் முறை, (3) திருமால் - முருகன் சிறப்புகள் முதலியன நன்கு விளக்கமாகும். இந்நூலுள் அழிந்தன போக இன்று இருப்பவை 22 பாடல்களே ஆகும்.

பதிற்றுப் பத்து :—இதுவும் தொகை நூலே ஆகும். இதில் பத்துப் புலவர் பாடிய பாக்கள் இருந்தன. ஒவ்வொரு புலவரும் பத்துப் பாடல்கள் பாடியுள்ளார். எல்லாப் பாடல்களும் சேர வேந்தர் சிறப்புகளையே பேசுவன. இப்பொழுது இருப்பவை 80 பாடல்கள் ஆகும். இதுபோலச் சோழ பாண்டியர் சிறப்பைக் கூறும் தனி நூல்கள் இல்லை. இந்நூல் ஆராய்ச்சியால், (1) சேர வேந்தர் இமயம் வரை இருந்த நாடுகளை வென்றமையும், (2) சில காலங்களில் சோழ பாண்டியரை அடக்கினமையும், (3) பிற சிற்றரசரை வென்று அடிப்படுத்தினமையும், (4) கப்பல்களைக் கடலிற் செலுத்தி அரபிக் கடலில் இருந்த தீவுகளைப் பிடித்தமையும், (5) சேரர் அரசாட்சி முறையும், (6) தமிழையும் தமிழ்ப் புலவரையும்

போற்றி வளர்த்த சிறப்பும் பிறவும் நன்கு விளங்கும். இந்நூலில் இப்பொழுது இருப்பவை 80 பாடல்களே ஆகும்.

இதுவரை கூறிய புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை என்னும் எட்டும் **எட்டுத்தொகை நூல்கள்** எனப் பெயர் பெறும்.

திருக்குறள் :— இது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகைப் பேறுகளைப் பற்றியும் விளக்குவது. இது 1330 குறள் வெண்பாக்களை உடையது. இதனை எல்லாச் சங்க நூல்களும் பிற்கால நூல்களும் எடுத்தாள்கின்றன. இதன் ஒப்புயர்வற்ற தன்மையை நோக்கித் தமிழர் இதனைத் **தமிழ் மறை** என்று பாராட்டுகின்றனர். இஃது ஒவ்வொரு தமிழரிடத்தும் இருக்கத்தக்க சிறப்பு நூலாகும். இது இன்று ஜெர்மன், ஆங்கிலம், பிரஞ்சு, வங்காளி, பாரசீகம், ஹிந்தி, சம்ஸ்கிருதம் முதலிய மொழிகளில் பெயர்க்கப் பட்டுள்ளது.

சிலப்பதிகாரம் :— இது வரலாற்று வடிவில் இருப்பது. இது கோவலன் கண்ணகி வரலாற்றைக் கூறுவது. இவ்வரலாறு மூன்று தமிழ் நாடுகளையும் மூன்று தலை நகரங்களையும் பற்றியது. இது (1) அரசன் செங்கோலனாக இருத்தல் வேண்டும், (2) பத்தினியை யாவரும் போற்றுவர், (3) ஊழ்வினை விடாது என்னும் மூன்று உண்மைகளை விளக்குவது; **இயல், இசை, நாடகம்** என்னும் தமிழின் மூன்று பிரிவுகளையும் தன் அகத்தே கொண்ட நிகரற்ற நூல். இதன் ஆராய்ச்சியால், (1) பண்டைக் காலத் தமிழர் நாகரிகம், (2) இறை வழிபாடு, (3) அரசர் ஒழுக்கம், (4) நகர அமைப்பு முறை, (5) தமிழர் போர்த் திறமை முதலியன நன்கு விளங்கும். இது கி. பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இதனைப் பாடியவர் சமணத் துறவியும் சேரன்-செங்குட்டுவன் இளவலும் ஆகிய **இளங்கோ அடிகள்** என்பவர்.

மணிமேகலை:—இது கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த **மணிமேகலை** என்னும் பெண்ணைப்பற்றிய வரலாறு. இது பௌத்த சமயக் கொள்கைகளைக் கூறுவது. இதன் கண் பிற சமயக் கொள்கைகளும் விளக்கப்பட்டுள்ளன. மணிமேகலை பௌத்தப் பெரியார்கள் அருளைப் பெற்றுப் பல நற்செயல்களைச் செய்தமையும், தமிழ் நாட்டுச் சிறந்த நகரங்களான புகார், வஞ்சி, காஞ்சி இவற்றின் வருணனையும் காரைத்தீவு, ஜாவாத்தீவு பற்றிய செய்திகளும் பிறவும் இதன் கண் இடம் பெற்றுள்ளன. இந்நூலைப் பாடியவர் மதுரைக் கூலவாணிகன் **சாத்தனூர்** என்பவர். இவர் முன்னிலையில் சிலப்பதிகாரம் அரங்கேற்றப்பட்டது. இளங்கோ அடிகள் முன்பு மணிமேகலை அரங்கேற்றம் பெற்றது. இவ்விரு நூல்களும் ஒரே குடும்ப வரலாற்றைக் கூறலால் **இரட்டை நூல்கள்** எனப் பெயர் பெறும்.

பிற்கால நூல்கள்

கி. பி. மூன்றும் நூற்றுண்டு முதல் தோன்றிய தேவாரத் திருமுறைகள், புராணங்கள், காவியங்கள், வைணவ நூல்கள், மருத்துவ நூல்கள், சிறு பிரபந்தங்கள், நன்னூல், யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கல விருத்தி, நேமி நாதம், இலக்கணக் கொத்து, இலக்கண விளக்கம் முதலிய இலக்கண நூல்கள், எண்ணிறந்த ஸ்தல புராணங்கள் முதலிய எல்லாம் **பிற்கால நூல்கள்** எனப்படும். பிற்கால இலக்கியங்களில் மிகச் சிறந்தவை தேவாரத் திருமுறைகள், நாலாயிரப் பிரபந்தம், கம்ப ராமாயணம், பெரிய புராணம் என்பன; இலக்கண நூல்களில் நன்னூலும் யாப்பருங்கலக் காரிகையும் சிறப்புடையன.

பிள்ளைகளே, தமிழில் நூற்றுக் கணக்கான நூல்கள் இருக்கின்றன. இவற்றை அறியாமலே பலர் 'தமிழில் போதுமான நூல்களே இல்லை' எனக் கூறுதல் வழக்கம். அஃது பொய்க்கூற்று ஆகும். இலக்கண – இலக்கிய நூல்கள், சமய நூல்கள், வைத்தியம், யோகம், ஞானம்

பற்றிய பல துறை நூல்கள் ஆகிய இவற்றைக் குறை வறப் பெற்றுள்ளது நமது தமிழ் மொழி. இப்பெருமை மிக்க மொழியை நாம் நமது உயிரினும் மேலதாகக் கருத வேண்டும்; பழந் தமிழ் நூல்களை நன்குகப் படித்து, நமது பழைய வரலாற்றை உள்ளவாறு உணரவேண்டும்; உணர்ந்து, தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பாடு படுதல் வேண்டும்.

தமிழ் வாழ்க! தமிழ் நூல்கள் வாழ்க!

அரும்பொருள்

யாப்பு - செய்யுள். அணி - அலங்காரம், உவமை, உருவகம் முதலிய அணிகள் பற்றிய இலக்கண நூல். பேறு - புருஷார்த்தம். பாணர் - பாடுவோர். மறவர் - வீரர். தொகை நூல் - தொகுக்கப் பெற்ற நூல். அணி அணியாக - அடுக்குத் தொடர். இமயம் வரை வென்ற சேரன் - **இமயவரம்பன்** நெடுஞ்சேரலாதன். குறள் வெண்பா - இரண்டு அடிப்பாட்டு. மறை - வேதம். பல நற் செயல்கள் - சாவகம் சென்று ஆபுத்திரனுக்குப் பழம்பிறப்பை உணர்த்தியது, காஞ்சியில் அறச்சாலை வைத்தது, புகாரில் சிறைக் கோட்டத்தை அறக்கோட்டம் ஆக்கியது முதலியன. காரைத்தீவு - 'மணிபல்லவம்' என்று மணிமேகலையில் வழங்கும். ஜாவா - சாவகம். கூலவாணிகன் - நெல், சோளம் முதலிய கூல வகைகளை விற்பவர். அரங்கு ஏற்றம் - சபைகூடி நூலைப் படித்து ஆமோதித்தல். மருத்துவ நூல்கள் - பதினெண் சித்தர்கள் பாடிய வைத்திய வாத யோக ஞான சாத்திரத் திரட்டு. யாப்பருங்கலம், காரிகை - இவை செய்யுள் இலக்கணம் கூறும் நூல்கள். இலக்கணக் கொத்து, இலக்கண விளக்கம் - இவை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணமும் கூறும் நூல்கள்.

கேள்விகள்

1. சங்க நூல்களின் காலம் என்ன?
2. தொல்காப்பியச் சிறப்பு யாது?
3. புறநானூறு—பொருள் யாது?
4. எட்டுத் தொகை நூல்கள்—எவை?
5. 'தொகை' என்பதால் அறியப்படுவது யாது?
6. பரிபாடல் கூறும் செய்திகள் எவை?

7. எட்டுத் தொகையுள் அகம்பற்றிய நூல்கள் எவை? புறம்பற்றிய நூல்கள் எவை?
8. சேரர்க்கே உரிய சிறப்பு நூல் யாது?
9. திருக்குறளின் சிறப்பு யாது?
10. இரட்டை நூல்கள்—எவை? அவை ஏன் அப்பெயர் பெற்றன?
11. சிலப்பதிகாரம்—இதன் தனிச் சிறப்பு யாது?
12. பிற்கால நூல்கள் எவை?
13. 'அஃது பொய்க்கூற்று'—எது?
14. நமது கடமை யாது?

இலக்கணம்

தொழிற் பெயர்

தொழிற் பெயர்களுள் விகுதி பெற்ற தொழிற் பெயர், முதனிலைத் தொழிற் பெயர், முதனிலை திரிந்த தொழிற் பெயர், முதனிலை திரிந்து விகுதி பெற்ற தொழிற் பெயர் என நான்கு வகைகள் உண்டு. விகுதி பெற்ற தொழிற் பெயர் முன் புத்தகத்தில் விளக்கப்பட்டது.

(i) ஓர் **அடி** அடித்தான். (ii) பிடித்த **பிடி** விடான்.
(iii) மின்னுமல் **இடி** இடித்தது. (iv) நாய்க் **கடி** கொடிது.

இவற்றுள் அடி, பிடி, இடி, கடி என்னும் முதனிலை களே (பகுதிகளே) விகுதியின்றித் தொழிற் பெயராக அமைந்துள்ளன. ஆகவே இவை **முதனிலைத் தொழிற் பெயர்கள்** எனப்படும். மேல் வரும் பாடங்களில் இத்தகைய தொழிற் பெயர்களைக் கண்டு குறித்துக்கொள்க.

வீடு, பேறு—இவை முறையே **விடு, பெறு** என்னும் முதனிலைகள் (பகுதிகள்) திரிந்து விகுதிபெருமல் தொழிற் பெயராகியுள்ளன. ஆகவே இவை **முதனிலை திரிந்த தொழிற் பெயர்கள்** ஆகும். **சூடு, கேடு, கோள், ஊண்** என்பனவும் முதனிலை திரிந்த தொழிற் பெயர்களேயாகும்.

கோடல், கோறல், வேறல்—இவை முறையே கொள், கொல், வெல் என்னும் முதனிலைகள் திரிந்து விகுதியும் பெற்றுத் தொழிற் பெயராகியுள்ளன. ஆகவே இவை

முதனிலை திரிந்து விகுதி பெற்ற தொழிற் பெயர்களாகும். இத்தகைய தொழிற் பெயர்கள் மேற் பாடங்களில் வருமேல் அவற்றைக் குறித்து வைத்துக்கொள்க.

பயிற்சி

1. இப்பாடத்திலிருந்து பொருள் முதல் ஆறு பெயர்கட்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.

2. இப்பாடத்தில் வந்துள்ள வினையாலணையும் பெயர்களை எடுத்தெழுதுக.

3. இப்பாடத்தில் வந்துள்ள விகுதி பெற்ற தொழிற் பெயர்களை எடுத்து எழுதி விகுதி பிரித்துக் காட்டுக.

4. இப்பாடத்தில் வந்துள்ள முதனிலை திரிந்த தொழிற் பெயர்களை எடுத்து எழுதுக.

5. அருமை, இல்லறம், தொகை, அகம், குறைவு—இவற்றிற்கு எதிர்மொழிகள் கூறுக.

6. ஏறக்குறைய, நிகரற்ற, ஒப்புயர்வற்ற, அணி அணியாக—இவற்றை வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

7. தடித்த சொற்களுக்குச் சொல்லிலக்கணம் கூறுக :

(1) **தமிழர் இதனைத்** தமிழ்மறை என்று **பாராட்டுகின்றனர்.**

(2) **தமிழில்** பல இலக்கண **நூல்கள் இருந்தன.**

(3) பத்துப் **புலவர் பாடிய** பாக்கள் இருந்தன.

(4) **கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த** மணிமேகலை.

8. இலக்கணம்—இலக்கியம்—சங்க காலத்துத் தோன்றியவை—பிற்காலத்துத் தோன்றியவை—அவை கூறும் பொருள்—அவற்றின் சிறப்பு—நமது கடமை—இக் குறிப்புகளைக்கொண்டு தமிழ் நூல்களைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

2. கண்ணைக் கவரும் காஷ்மீரம்

'இப் பூவுலகில் துறக்கம் ஒன்று இருப்பதாகக் கூறின், அது காஷ்மீரமாகவே இருத்தல் வேண்டும்' என்று **அக்பர்** சக்கரவர்த்தி கூறியதை ஒப்பக் காஷ்மீரம் பூலோக சுவர்க்கம் என்றே கூறுதல் வேண்டும். காஷ்மீரம் இந்தியாவின் வட கோடியில் இருக்கும் ஒரு



காஷ்மீரத்துக் கோட்டை

சுயாட்சி நாடாகும். இது கிழக்கே சீனம், திபேத் நாடுகளாலும், மேற்கே ஆப்கானிஸ்தானத்தாலும், வடக்கே இரஷியாவினாலும், தெற்கே பிரிட்டிஷ் இந்தியாவினாலும் சூழப்பட்டு இருக்கின்றது.

காஷ்மீரம் மலைகளாலும் குன்றுகளாலும் ஏரி-குளங்களாலும், ஆறு-ஓடைகளாலும் நிரம்பப் பெற்று வனப்புடையதாக விளங்குகிறது. இதன் பரப்புச் சுமார் 84,000 சதுரக் கற்கள் ஆகும். இதன் நடு இடத்தில் இமயத்தினின்றும் தோன்றி வெள்ளப் பெருக்கெடுத்து வரும் **ஜீலம்** யாறு பாய்ந்து, நாட்டை வளம் படுத்திச் சிந்து யாற்றுடன் கலக்கின்றது. காஷ்மீரத்தில் உள்ள நீர் நிலைகளில் எஞ்ஞான்றும் நீர் நிறைந்தே இருக்கும்.

வரலாறு கண்ட அளவில், காஷ்மீரம் **அசோகரால்** ஆளப்பட்டு வந்தது தெரிகிறது. பின்னர்க் கி. பி. 13-ஆம் நூற்றுண்டில் இது மொகலாயர் ஆட்சிக்கு உட்பட்டது. மொகலாய மன்னருள் சிறந்த **அக்பர்** பேரரசர், பல வளங்களிலும் பண்புற்று விளங்கிய காஷ்மீரத்தை நேரே கண்டு களித்தார். அவர் மைந்தரான **ஜஹாங்கீர்** என்பவர் காஷ்மீரத்தின் தலைநகரான ஸ்ரீ நகரில், புத்துயிர் அளிக்கும் பூம்பொழில்கள் மூன்றை அமைத்தார். அவற்றிற் சிறந்தது **நிஷாத்பாத்** என்பது. இதற்கு ஒப்பாகவோ, உவமையாகவோ கூறத்தக்க பூம்பொழில் உலகத்திலே இல்லையாம். இதன் நடுவில் சலவைக் கல் மண்டபம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. தண்ணீர், சலவைக் கல் ஓடைகளின் வழியே எப்பொழுதும் இன்பமாக ஓடிக்கொண்டு இருக்கும். தோட்டத்தின் ஒரு புறத்தே உள்ள மாளிகைகளில் தங்கி யிருப்போர் வசதிக்காக அமைக்கப்பட்டுள்ள சலவைக் கல் நீர்த் தொட்டிகளில் எப்போதும் தூய தண்ணீர் இருந்தபடி இருக்கும்.

பூம்பொழிலில் நடு நாயகமாக இருப்பது சலவைக் கல் ஓடை. அதைச் சுற்றிலும் செயற்கைச் சிற்றருவிகள் ஓயாமல் தூவானம் பொழிந்துகொண்டே இருக்கும்.

ஓடையின் இரு பக்கங்களிலிருந்து சிறிய ஓடைகள் பல சென்று, குறிப்பிட்ட இடங்களில் நீரைப் பாய்ச்சுகின்றன. தோட்டத்தின் நடுவில் அமைந்துள்ள சலவைக் கல் மண்டபத்தில் குளிர்ந்த காற்று எப்பொழுதும் வீசிக் கொண்டு இருக்கும். அரச மங்கையர் அங்குப் பொழுது போக்குவது அக் கால வழக்கமாக இருந்தது.

பொழிலின் எப் பக்கம் நோக்கினும், கண்ணைக் கவரும் களங்கமற்ற சலவைக் கற்களே காட்சியாக நிற்கின்றன. காற்றால் அலைப்புண்டு அசைந்து ஊசலாடி, விநாடிக்கு ஒருமுறை குமிழிகளும் சுழிகளும் தோற்றி நடனம் புரியும். தூய தண்ணீரிடையே மாசற்ற மதில்களும் படிகம் போன்ற தூண்களும், வான் அளாவிய மேல் தளங்களும் தம் உருக் காட்டும் காட்சி - மனத்தை ஒரு வழிப் படுத்தும் ஓவியமாகத் திகழ்கின்றது. சலவைக் கல் மண்டபங்களைச் சுற்றி ஆங்காங்குத் துவண்டு காற்றால் அசைந்தாடும் பசுந் தழைகளும் சிறு செடிகளும் கொடிகளும் அவற்றின்மேல் அசைந்தாடும் காட்சி கண்டு கண்டு களிக்கத் தக்கது.

இங்ஙனம், மொகலாய அரசர் தம் இன்ப நுகர்ச்சிக்காக அமைத்த பூம்பொழில்கள் அழகிய ஓவியங்களாக அமைந்தன. அப் பேரரசர் இவற்றை அமைக்கச் செலவிட்ட பணம் அளவிடப் படுமோ? அம்மம்ம! இப் பேரின்பக் காட்சிக்கு எவ்வளவு செல்வம் செலவழித்தாலும் தகும் அன்றே?

மொகலாய மன்னர்க்குப் பின்னர், காஷ்மீரம் சீக்கியர் வசம் ஆயிற்று. காஷ்மீரத்தை இப்பொழுது ஆள்பவர் **ஹரிசிங்கு** மன்னர் ஆவர்.

காஷ்மீரத்தைச் சிறப்பித்துப் பாடாத கவியே இல்லை என்னலாம். வடமொழிப் பெரும் புலவரான **காளிதாசர்** காஷ்மீரத்தைக் ‘கண் கொள்ளாக் காட்சி தரும் கந்தருவ நாடு’ என்று கூறி, இதன் இயற்கை அழகைச் சிறப்பித்துச் செப்பியுள்ளார்.

காஷ்மீரத்தின் மக்கள் தொகை ஏறக்குறைய முப்பது லக்ஷம் ஆகும். அங்குள்ளவர் இந்துக்களும் முஸ்லிம்களுமே ஆவர். அவருட் பெரும் பகுதியினர் பின்னவரே ஆவர். காஷ்மீர வாசிகள் மன அமைதியான வாழ்க்கையை நடத்துபவர். கதிரவன் மேல் திசையில் மறையும் மாலைப் போதில் ஆடவரும் பெண்டிரும் தம் படகுகளில் ஏறி, குயிலினும் இனிய குரலில் பாடிக் களிப்பது கண்ணுக்கு இனிய காட்சியாகும்—செவிக்கு இனிய விருந்தாகும்.

காஷ்மீரத்தில் **அன்ஜி** என்றொரு முஸ்லிம் வகுப்பினர் உளர். அவ் வகுப்பார் படகுகளிலேயே வீடுகளை அமைத்துக்கொண்டு உறைவர். இப் படகு இல்லங்கள் பகலில் கரை ஓரத்தில் இருக்கும்; இரவில் இன்பமாகப் பிரயாணம் செய்யும். மிகப் பெரிய ஏரிகளைக் கடப்பவரையும் உல்லாஸ ஏரிப் பிரயாணத்தை விரும்புபவரையும் ஏற்றிச் செல்வதே அன்ஜியர் தொழில் ஆகும்.

காஷ்மீரத்தில் உள்ள பெரும்பாலான கட்டடங்கள் சாய்வாகவே கட்டப்பட்டுள்ளன. அங்கு மாடி வீடுகளே பல. காஷ்மீர மக்கள் கோடையில் மேற் கூடங்களில் இருப்பர்; அவர்தம் கால் நடைகள் கீழ்க் கூடத்தில் இருக்கும். மாரியில் பின்னவை மேல் கூடத்தில் இருக்கும்; முன்னவர் கீழ்க் கூடத்தில் இருப்பர். இதனால், அம் மக்கள் தம் கால் நடைகளை எவ்வளவு அன்பாக வளர்த்து வருகின்றனர் என்பது புலனாகிறதன்றோ?

காஷ்மீரம் கம்பளம் செய்தலிற் பெயர் பெற்றது. அங்குப் பழ வகைகள் பலவாகக் கிடைக்கின்றன. காடுகள் மிக்கிருப்பதால், மரத் தொழில் அங்கு நடைபெறுகின்றது. சுருங்கக் கூறின், காஷ்மீரம் காணத்தக்க இன்ப இடங்களில் ஒன்றாகும் என்பதில் ஐயம் இல்லை.

அரும்பொருள்

துறக்கம் - மோக்ஷம். எஞ்ஞான்றும் - எப்பொழுதும். வரலாறு - சரித்திரம். பேரரசர் - சக்கரவர்த்தி. நடுநாயகம் - நடு இடத்தில் சிறந்தது. பொழில் - சோலை. தோற்றி - தோன்றச்

செய்து. கண்டு கண்டு - அடுக்குத் தொடர். வாணாள் - வாழ் + நாள். கவி - புலவன். காளிதாசர் - வடமொழியிற் சிறந்த புலவர். களிப்பது - மகிழ்வது.

கேள்விகள்

1. காஷ்மீர நாட்டு எல்லைகள் எவை?
2. மொகலாயர் காலத்துக் காஷ்மீரத்தின் சிறப்பியல்புகள் எவை?
3. காஷ்மீர நாட்டு இயற்கை அழகு யாது?
4. 'நிஷாத்பாத்'தின் சிறப்பு யாது?
5. காஷ்மீரத்தைப் பற்றிக் காளிதாசரும் அக்பரும் என்ன கூறியிருக்கின்றனர்?
6. 'அன்ஜி' வகுப்பார் யாவர்? அவர்தம் வாழ்க்கை யாது?
7. காஷ்மீரத்து வீடுகள் எத்தகைய அமைப்புடையவை? அவற்றில் மக்கள் எப்படி வாழ்கின்றனர்?
8. காஷ்மீரத்தில் நடைபெறும் தொழில்கள் எவை?

இலக்கணம்

உறுப்பு இலக்கணம்

பதங்கள் பகாப்பதம், பகுபதம் என இரு வகைப்படும்.

நாடு, கண், காண், செய், கூறு—**பகாப்பதம்.**

நாடன், கண்ணன், கண்டான், செய்தது, கூறுவர் —**பகுபதம்.**

பகாப்பதம் பிரிக்கப்படாது. பகுபதம் தனித்தனிப் பல உறுப்புகளாகப் பிரிக்கப்படும். பகுதி (முதனிலை), இடைநிலை, விகுதி (இறுதி நிலை), சாரியை, சந்தி, விகாரம் என்னும் ஆறும் பகுபத உறுப்புகள் ஆகும். சில பகு பதங்களில் இவ்வாறு உறுப்புகளும் அமைந்திருக்கும். சிலவற்றில் சில குறைந்தும் இருக்கும். இவற்றுள் பகுதி, இடைநிலை, விகுதி என்னும் மூன்று உறுப்புகளைப் பற்றியும் முன் வகுப்பில் விளக்கினோம். இங்கு அவற்றோடு ஏனைய சந்தி, விகாரம், சாரியை என்பவற்றையும் விளக்குவோம்.

1. பகுபதத்தின் முதலில் நிற்கும் பகாப்பதம் **பகுதி** (முதனிலை) ஆகும்.

2. பகுபதத்தின் ஈற்றில் நிற்கும் பகாப்பதம் **விகுதி** (இறுதி நிலை) ஆகும்.

3. பகுபதத்தின் இடையில் நிற்கும் பகாப்பதம் **இடைநிலை** ஆகும்.

4. இடை நிலைக்கும் விகுதிக்கும் இடையில் பெரும்பாலும் நிற்பது **சாரியை**.

5. பகுதிக்கும் இடை நிலைக்கும் இடையில் பெரும்பாலும் நிற்பது **சந்தி**.

6. பகுதி குறைதல், வலி-மெலியாதல், மெலி-வலியாதல், நெடில்-குறிலாதல், குறில்-நெடிலாதல் முதலியன **விகாரம்**.

இங்ஙனம் ஒரு பதத்தைப் பல உறுப்புகளாகப் பிரித்து இலக்கணம் கூறுதல் **பகுபத இலக்கணம்** அல்லது **உறுப்பிலக்கணம்** எனப்படும்.

உறுப்பிலக்கணம் கூறுதல்:

(i) அரசர் —அரசு + அர்.
பகுதி விகுதி

(ii) செய்தான் —செய் + த் + ஆன்
ப இ வி

(iii) அமைத்தார் —அமை + த் + த் + ஆர்
ப ச இ வி

(iv) வளர்த்தனர்—வளர் + த் + த் + அன் + அர்
ப ச இ சா வி

(v) இருந்தனர் —இரு + த் + த் + அன் + அர்
ப ச இ சா வி

(த், ந் ஆனது விகாரம்)

பயிற்சி

1. இப்பாடத்தில் வந்துள்ள பகாப்பதங்களைக் கண்டு குறிக்க.

2. இப்பாடத்தில் வந்துள்ள அயல் மொழிச் சொற்களை எடுத்து எழுதுக.

3. இப்பாடத்தின் மூன்றாவது பகுதியில் உள்ள பெயரெச்சங்களை எடுத்து எழுதுக.

4. உறுப்பிலக்கணம் கூறுக:—முருகன், தமிழர், வளர்த்தனர், இருக்கின்றது, வருகின்றனர், செய்யும்.

5. பிரித்துப் புணர்ச்சி இலக்கணம் கூறுக:—சிற்றூறு, பேரரசர், புத்துயிர், தண்ணீர், பசுந்தழை.

6. அமைப்பு—இயற்கைச் செயற்கைக் காட்சிகள்—மக்கள்—சிறப்பு—இக்குறிப்புகளைக் கொண்டு காஷ்மீரத்தைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

3. சேக்கிழார்

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் **விஜயாலயன்** என்னும் சோழ அரசன் பல்லவரை வென்று, தன் முன்னோர் ஏறக்குறைய ஆறு நூற்றாண்டுகளாக இழந்திருந்த சோணாட்டு அரசியலைக் கைப்பற்றினான். அவன் வழி வந்தவரே '**பிற்காலச் சோழர்**' எனப்பட்டனர். இப் பிற்காலச் சோழருள் ஒருவனே திருமுறை கண்ட இராஜராஜ சோழன். கங்கைவரை படையெடுத்துச் சென்று வங்காளத்தை வென்று மீண்டவனும், பர்மாவில் **பெகுவில்** தன் வெற்றித் தூணை நாட்டிய பெருவீரனுமான கங்கை கொண்ட சோழன் இம்மரபைச் சேர்ந்தவனே ஆவன். தென் இந்தியாவின் பெரும் பகுதியை ஒரு குடைக்கீழ் வைத்தாண்ட முதற் குலோத்துங்கனும் இம் மரபினனே ஆவன். இப்பேரரசர் அனைவரும் சைவ சமயத்தினர்; சைவ சமய வளர்ச்சிக்காக அரும் பாடுபட்டவர்; வானளாவிய கோபுரங்களைக் கொண்ட பெருங் கோவில்களை எடுப்பித்தவர்; தேவார ஓதுவார்களைக் கோவில்களில் அமைத்து இசைக்கலையையும் பக்தி நெறியையும் வளர்த்தவர்.

இப் பிற்காலச் சோழர் சிதம்பரத்தைச் சைவ சமயத்தின் உயிர்நாடியாகக் கருதினர். அவர்களில் ஒருவனும் முதற் குலோத்துங்கன் பெயரனுமான **இரண்டாம் குலோத்**

துங்கன் (கி. பி. 1123—1148) செய்த சமயப்பணியே பெரும் பணியாகும். இவன் சிதம்பரம் பேரம்பலத்தைப் பொன் வேய்ந்தான்; பல கோவில்களை எடுப்பித்தான்; பல கோவில்கட்குத் தானங்கள் பல செய்தான். இப்பேரரசன் கொண்ட சிவபக்தியே, சைவ சமயப் பெருநூலாக இருக்கும் **பெரிய புராணம்** எழுதக் காரணமாக இருந்தது.

இப்பெருவேந்தன், சென்னையை அடுத்த குன்றத்தூரைச் சேர்ந்த **சேக்கிழார்** என்னும் அறிஞரை முதல் அமைச்சராகப் பெற்றிருந்தான். சேக்கிழார் தாளாண்மையிற் சிறந்த வேளாண் மரபினர்; தமிழ் இலக்கண இலக்கியங்களில் வல்லவர்; சிறந்த சிவன் அடியார். அவரது இயற்பெயர் **அருள் மொழித் தேவர்** என்பது. அவர் 'சேக்கிழார்' குடியிற் பிறந்ததால் சேக்கிழார் என்றே வழங்கப் பெற்றார். சேக்கிழாருடைய கல்விப் பெருக்கையும் ஒழுக்க மேம்பாட்டையும் வல்லார்வாய்க் கேட்டுணர்ந்த குலோத்துங்கன், அவரை வரவழைத்துத் தனது முதல் அமைச்சராகக் கொண்டான்; அவருக்கு **உத்தமச் சோழப் பல்லவர்** என்ற பட்டம் கொடுத்துச் சிறப்புச் செய்தான்.

சேக்கிழார் தமது அமைச்சர் தொழிலைத் திறம்பட நடத்தி அரசனது பெருமதிப்புக்கு உரியவர் ஆயினர். அவர் சோழநாட்டில் உள்ள **திருநாகேச்சுரம்** என்னும் தலத்தில் மிகுந்த பக்தி உடையராய் அதனைத் தமது ஆன்மார்த்த தலமாகக்கொண்டு வழிபட்டு வந்தார்; அவ்வன்பு மேலீட்டினல் அதற்கு அறிகுறியாகத் தமது குன்றத்தூரிலே ஒரு கோவிலும் அதைச் சுற்றித் திருமடவளாகமும் அமைத்து, அதற்குத் 'திருநாகேச்சுரம்' என்னும் பெயரிட்டார்.

சோழ மன்னன் 'மண நூல்' ஆகிய சீவக சிந்தாமணியைப் புலவர் கூறக்கேட்டு இன்புற்று வந்தான். ஒரு நாள் சேக்கிழார் அவனை நோக்கி, 'இஃது இன்பம் மட்டுமே பயப்பது. சிவ கதைகள் இம்மை மறுமை ஆகிய இரண்

டிற்குமே உறுதி பயப்பவை. அவற்றை அறிந்து, பக்திச் சுவையில் திளைத்தலே நும் போன்ற பேரரசர் செய்யத் தக்கது' என நயமுற நவின்றார். உடனே அரசன், 'அச்சிவ கதைகள் யாவை?' என ஆவலோடு கேட்டான். சேக்கிழார், 'அவை தாம் சிவனடியார் வரலாறுகள். அவ்வடியவர் பெயர்களைச் **சுந்தரமூர்த்தி சுவாமிகள்** தமது **திருத்தொண்டத் தொகை**யுள் தொகுத்துத் துதித்தருளினார்; இராஜராஜ சோழர் காலத்திருந்த **நம்பியாண்டார் நம்பி** வகைப்படுத்தி விரித்தருளினர். அச் சிறந்த நூல் **திருத்தொண்டர் திரு அந்தாதி** என்பதாகும்' என்று கூறி, அறுபத்து மூன்று நாயன்மார் வரலாறுகளை விளக்கமாகக் கூறினார்.

குலோத்துங்கன் சைவ மரபிற் பிறந்தவன் ஆதலின், சிவ கதைகள் அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. அவன் பக்தி மேலிட்டு உவகைக் கண்ணீர்விட்டு, 'இவ்வடியார் வரலாறுகளை நீரே பெரியதோர் புராணமாகப் பாடியருளல் வேண்டும்' என்று வேண்டினான். சேக்கிழார் அதற்கு இசைந்து, அமைச்சர் தொழிலை விட்டுப் புராணம் பாடச் சிதம்பரம் சென்று தங்கினார். அரசன் அவருக்கு வேண்டிய வசதிகள் அனைத்தையும் குறைவறச் செய்தான். சேக்கிழார் தில்லையில் நடராஜப் பெருமானைப் பணிந்து, அவரது துணையை வேண்டி நின்றார். அப்பொழுது **உலகெலாம்** என்னும் திருவாக்குச் சேக்கிழார் செவிகளிற் பட்டது. உடனே சேக்கிழார் அதனையே தாம் பாட இருந்த பெரிய புராணத்திற்கு **முதலாகக்** கொண்டு,

> '**உலகெ லாமு**ணர்ந் தோதற் கரியவன்
> நிலவு லாவிய நீர்மலி வேணியன்
> அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
> மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்'

என்னும் கடவுள் வாழ்த்துப் பாடினார்; பின்னர் அங்குச் சிலகாலம் தங்கிப் புராணத்தைப் பாடி முடித்தார். அப்

3—2

புராணம் இரண்டு காண்டங்களாகவும், பதின்மூன்று சருக்கங்களாகவும் வகுக்கப்பெற்று 4253 செய்யுள்களில் முடிந்தது.

நூல் முற்றுப் பெற்றதை உணர்ந்த காவலன் தன் பரிவாரங்கள் புடைசூழத் தில்லையை அடைந்து பொன்னம்பல நாதனை வணங்கிப் பின் சேக்கிழாரையும் அடி பணிந்தான்; அரசர் பலர்க்கும் அன்பர் பலர்க்கும் ஓலை போக்கி வரவழைத்தான்; அனைவர்க்கும் உண்டி உறையுள் முதலிய வசதிகளைச் செய்துகொடுத்தான்; நாளும் நடராஜப் பெருமானுக்குச் சிறப்புப் பூசை நடைபெறச் செய்தான். சேக்கிழார் ஆயிரக்கால் மண்டபத்தில் இருந்து, சித்திரை மாதத்துத் திருவாதிரையிலே புராணத்தை வாசித்துப் பொருள் விரித்து உரைக்கத் தொடங்கி, அடுத்த சித்திரைத் திருவாதிரையிலே நிறைவேற்றி முடித்தார்.

நூல் அரங்கேற்றம் ஆனதும், அனைவராலும் பூசிக்கப்பட்டது. அரசன் அதனைப் பொன் தாம்பாளத்தில் வைத்து யானைத் தலையில் எழுந்தருளுவித்தான்; சேக்கிழாரையும் ஏற்றினான்; தானும் ஏறிப் பின்பாக இருந்து தன் இரு கைகளாலும் சாமரை வீசிக்கொண்டு நகர்வலம் செய்வித்தான்; சேக்கிழார்க்குத் **'தொண்டர் சீர் பரவுவார்'** என்னும் பட்டம் அளித்து அவரைப் பணிந்து மகிழ்ந்தான்; அவரது தம்பியாராகிய **பாலறுவாயர்** என்பவரைத் தன் அமைச்சராகக் கொண்டான்; சேக்கிழார் பெருமானுக்கு இறுதிவரை உபசரணைகள் நடைபெறவேண்டிய ஏற்பாடுகள் அனைத்தும் செய்தான். சேக்கிழார் தில்லையிலும் குன்றத்தூரிலும் தம் இறுதிக் காலத்தைக் கழித்து, முடிவில் இறைவன் திருவடிநீழலை அடைந்தார்.

சேக்கிழார் பாடியருளிய பெரிய புராணம் பல துறைகளிலும் சிறப்புடையதாகும். அதில் இடம் பெற்றுள்ள நாயன்மார்கள் ஏறக்குறைய ஆறு நூற்றாண்டுகட்கு உட்பட்டவர் ஆவர். அஃதாவது கி. பி. மூன்றாம் நூற்றாண்டு

முதல் ஒன்பதாம் நூற்ருண்டு வரை ஆகும். இந்தக் காலமே சோழர் முடியிழந்து பல்லவர்க்குச் சிற்றரசர் ஆன காலம்; பாண்டியர் முடியிழந்து அல்லலுற்று மீட்டும் ஆட்சியைப் பெற்ற காலம்; சமண - பௌத்த சமயங்களோடு சைவம் வாதிட்ட காலம்; சைவம் துன்பப்பட்ட காலம்; சைவம் நால்வரால் உயிர்ப்பிக்கப்பட்ட காலம், 'இக்காலமே தமிழ்நாட்டு வரலாற்றின் **இருண்ட காலம்**' என்று வரலாறு வல்லார் கூறுகின்றனர். இத்தகைய இருண்ட கால வரலாற்றை ஒருவாறு அறியப் பேருதவி செய்வது பெரிய புராணம் ஆகும். பெரிய புராண நாயன்மாருள் பல்லவ அரசர், சோழ அரசர், பாண்டிய அரசர், சிற்றரசர், சேர மன்னர், சேனைத் தலைவர்கள், பல வகுப்பு அடியார்கள் இருத்தலால், அவ்விருண்ட காலத் தமிழகத்து அரசியல், சமய நிலை, மக்கள் நிலை முதலியன அறிந்துகொள்ள இப் பெரு நூல் பேருதவி புரிகின்றது.

இப்புராணம் மொழிபெயர்ப்பு நூல் அன்று. சேக்கிழார், நாயன்மார் வரலாறுகளை அறிய அக்காலத்து இருந்த திருமுறைகள், திருத்தொண்டத் தொகை, திருத்தொண்டர் திரு அந்தாதி முதலிய சமய நூல்களையும், கன்ன பரம்பரைச் செய்திகளையும், அக்காலக் கோவில்களில் இருந்த **கல்வெட்டுகளை**யும், துணையாகக் கொண்டனர்; இவற்றுடன் பல சிவக்ஷேத்திரங்கட்கு நேரே சென்று நாயன்மார் வரலாறுகளை உணர்ந்து, கோவில்களில் இருந்த நாயன்மார் உருவச் சிலைகளைக் கொண்டு சில செய்திகளை அரிதின் அறிந்து மீண்டனர்; இறுதியில், தாம் படித்தவற்றையும் பார்த்தவற்றையும் கேட்டவற்றையும் துணையாகக் கொண்டே இப் பெரிய புராணத்தைப் பெருமை மிக்க புராணமாகப் பாடித் தமிழ் அகத்தில் அழியாப் புகழ் பெற்ருர்.

சேக்கிழார் திருப்பெயர் வாழ்க !

அரும்பொருள்

தாளாண்மை - முயற்சி. வல்லார் - சான்றோர். வாய் - மூலமாக. சோழப் பல்லவர் - பல்லவரை வென்ற (பிற்காலச்) சோழர். மண நூல் - சீவக சிந்தாமணிக்குள்ள வேறொரு பெயர், பல மணங்களைக் கூறும் நூல். சீவகன் பெண்கள் பலரை மணந்து, தன் தந்தையை வஞ்சித்துக் கொன்ற அமைச்சனைக் கொன்று அரசனான வரலாற்றைச் செய்யுள் வடிவில் கூறும் நூலே **சீவக சிந்தாமணி** என்பது. இம்மை - இப்பிறப்பு. மறுமை - மறுபிறப்பு. உறுதி - நன்மை. உவகை - மகிழ்ச்சி. நிலவு - மூன்றாம் பிறைச் சந்திரன். வேணி - சடை. அலகு - எல்லை. மலர் - மலர் போன்ற. சிலம்படி - கழல் அணிந்த பாதம். காவலன் - குடிகளைக் காப்பதால் அரசன் பெற்ற பெயர். உண்டி, உறையுள் - Boarding and Lodging. ஓலை - அக்காலத்தில் பனையோலையில் எழுதியே அழைப்பு விடுதல் வழக்கம். திருவாதிரை - ஆதிரை நக்ஷத்திரம். சீர் - சிறப்பு. பரவுவார் - துதிப்பவர். திருமுறைகள் - சம்பந்தர் தேவாரம் மூன்று திருமுறைகள், அப்பர் தேவாரம் மூன்று திருமுறைகள், சுந்தரர் தேவாரம் ஏழாம் திருமுறை, மணிவாசகர் பாடிய திருவாசகம் எட்டாம் திருமுறை, திருமூலர் பாடிய திருமந்திரம் 10-ஆந் திருமுறை, காரைக்கால் அம்மையார் முதலியவர் பாடியவை 11-ஆந் திருமுறை. அரிதின் - அருமையாக. வரலாறு - சரித்திரம் (History).

கேள்விகள்

1. பிற்காலச் சோழர் யாவர்? ஏன் அப்பெயர் பெற்றனர்?
2. அவருள் குறிப்பிடத்தக்க சிறப்புடையவர் யாவர்?
3. இரண்டாம் குலோத்துங்கன் செய்த சமயத் தொண்டு யாது?
4. சேக்கிழார்—பெயர்க் காரணம் யாது?
5. குன்றத்தூரில் கோவில் உண்டாக்கக் காரணம் யாது?
6. பெரிய புராணம் பாடக் காரணம் என்ன?
7. சேக்கிழார் எப்படிப் பெரிய புராணம் பாடி முடித்தார்?
8. அஃது எங்ஙனம் அரங்கேற்றம் செய்யப்பெற்றது?
9. சேக்கிழார் எவ்வாறு சிறப்பிக்கப்பட்டார்?
10. பெரிய புராணம் வரலாற்றுச் சிறப்புடையது—எப்படி?

11. சேக்கிழார் எவற்றைத் துணையாகக் கொண்டு பெரிய புராணம் பாடினர்?

12. சேக்கிழார் தமிழ்நாட்டுக்குச் செய்த தொண்டு என்ன?

இலக்கணம்

இடைநிலைகள்

வினைச் சொற்கள் காலம் காட்டும் என்பதும், அக் காலம் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூன்ருகும் என்பதும் முன் வகுப்பில் விளக்கப்பட்டன அன்ருே? வினைச் சொற்களின் உறுப்புகளுள் பெரும்பாலும் **இடைநிலையே** காலம் காட்டும். **த், ட், ற், இன்** என்னும் இடைநிலைகள் **இறந்த** காலத்தையும், **கிறு, கின்று** என்பன **நிகழ்** காலத்தையும், **ப், வ்** என்பன **எதிர்**காலத்தையும் குறிக்கும்.

(1) இறந்தகாலம் : செய்தான் - செய் + த் + ஆன். (த்)
கேட்டான் - கேள் + ட் + ஆன். (ட்)
நவின்ருன் - நவில் + ற் + ஆன் (ற்)
கருதினர் - கருது + இன் + அர் (இன்)

(2) நிகழ்காலம் : புரிகின்றது - புரி + கின்று + அ + து. (கின்று)
விளங்குகிறது - விளங்கு + கிறு + அ + து. (கிறு)

(3) எதிர்காலம் : இருப்பர் - இரு + ப் + ப் + அர் (ப்)
செய்வர் - செய் + வ் + அர் (வ்)

பயிற்சி

1. இப்பாடத்தில் வந்துள்ள இறந்தகால வினைமுற்றுகளை எடுத்து எழுதி அவற்றின் இடைநிலைகளைக் குறிக்க.

2. இறந்தகாலப் பெயரெச்சங்களையும் வினையெச்சங்களையும் எடுத்து எழுதுக.

3. நூல்கள், அரசர்கள் பெயர்களை எடுத்து எழுதுக.

4. வாக்கியங்களில் அமைத்து எழுதுக: சுயாட்சி, எஞ்ஞான்றும், புத்துயிர், ஆங்காங்கு, கண்டு கண்டு, படையெடுத்து, உயிர்நாடி, வகைப்படுத்தி, நிறைவேற்றி.

5. பன்மை வாக்கியங்களை ஒருமை வாக்கியங்களாகவும், ஒருமை வாக்கியங்களைப் பன்மை வாக்கியங்களாகவும் மாற்றி எழுதுக :

(1) இஃது ஒருவர் பாடியது அன்று.
(2) காஷ்மீர வாசிகள் மன அமைதியான வாழ்க்கையை நடத்துபவர்.
(3) சிவ கதைகள் இம்மை மறுமை ஆகிய இரண்டிற்குமே உறுதி பயப்பவை.
(4) சோழ அரசன் சீவக சிந்தாமணியைப் புலவர் கூறக் கேட்டு இன்புற்று வந்தான்.

6. பிரித்து எழுதுக :—வானளாவிய, கண்ணீர், அவ்வன்பு, முடியிழுந்து, அல்லலுற்று.

7. வேற்றுமை உருபுகளை விரித்து எழுதுக: படையெடுத்து, குடைக்கீழ், சிவனடியார், சிதம்பரம் சென்று.

8. பிறப்பு—உத்தியோகம்—பெரிய புராணம்—பாடக் காரணம்—பாடிய வரலாறு—அரங்கேற்றம்—பெரிய புராணச் சிறப்பு—இக்குறிப்புகளைக் கொண்டு சேக்கிழாரைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

4. பயிர்த்தொழில்

உலகில் நடைபெறும் தொழில்கள் அனைத்திலும் முதன்மை வாய்ந்தது **பயிர்த்தொழிலே** ஆகும். இதனாற்றான், 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் - மற்றெல்லாரும் தொழுதுண்டு பின் செல்பவர்' என்னும் பழமொழி எழுந்தது. இச் சிறப்புடைய தொழிலைச் செய்ய ஒருநாட்டு மக்கட்கு முதலில் நிலம் மிகுதியாக வேண்டும். இவ்வசதி நமது இந்தியாவிற்கு இருக்கிறது. மேல் நாடுகள் பலவற்றுக்கு இஃது இல்லை. நமது நாட்டில் நிலம் இருக்கின்றதே தவிரத் திறம்படப் பயிர்செய்யப் போதிய வசதிகள் இல்லை; அறிவுடைய உழவர் இல்லை.

நிலத்தைப் பயிர் செய்பவர் அறிவுடையவராக இருத்தல் வேண்டும். அவர்கள் நிலநூல், வானநூல், விலங்கு

நூல், இரசாயன நூல், மர நூல் இவற்றில் அறிவுடைய ராக இருத்தல் இன்றியமையாதது. ஏன் எனில், இவ் வறிவு முழுவதும் பயிர்த்தொழிலுக்கு மிகுதியும் பயன் படுவதாகும். மேனாட்டு உழவர் இவற்றில் ஓரளவு பயிற்சி பெற்றுள்ளனர். ஆனால் நம் நாட்டு உழவர்க்குச் சாதாரணமாக எழுதவும் படிக்கவுமே தெரியவில்லை.

மேனாட்டுப் பயிர்த்தொழிலில் அரசாங்கத்தார் மிகுந்த அக்கரை காட்டுகின்றனர். உதாரணமாக அமெ ரிக்க அரசாங்கத்தைக் காண்க. அவ்வரசாங்கம் பயிர்த் தொழில் வளர்ச்சிக்காக ஆண்டுதோறும் ஏறத்தாழப் பதி னெட்டுக் கோடி டாலர் செலவழிக்கின்றது; வருடக் கடை சியில் பயிர்த்தொழில் பற்றிய **அறிக்கை** ஒன்றும் வெளி யிடுகின்றது ; இஃதன்றி, பயிர்த்தொழில் சம்பந்தமாகப் பல கோடித் **துண்டு வெளியீடுகள்** வெளியிடுகின்றது; பயிர்த் தொழில் ஆராய்ச்சிக்காக ஏறக்குறைய இரண்டு கோடி டாலர்கள் செலவழிக்கிறது; எதிர் பாராதபடி மழைப் பஞ்சமோ, பணப்பஞ்சமோ, பெருவெள்ளமோ, பயிர்ச் சேதமோ — எது ஏற்படினும், உழவர்க்குக் கடன் கொடுத்து உதவுகிறது ; பயிர்த்தொழில் பற்றிப் பல **படங்கள்** மூலம் விளக்கம் தருகிறது; விளைவுப் பொருள்களை விற்கக் கூட்டுறவு இயக்கங்களை அமைத்துள்ளது ; உழ வர்க்குத் தாமதம் இன்றி அடிக்கடி கடிதங்கள் சேரத் தனி ஏற்பாடு செய்துள்ளது. சுருங்கக் கூறின், அமெரிக்க அரசாங்கத்துக் கண்காணிப்பினால், அந்நாட்டு உழவர் தபால், பத்திரிகை, படக்காட்சி, கூட்டுறவு இயக்கம், கல்விச்சாலை, மருத்துவச்சாலை முதலிய எல்லாத் துறை களிலும் போதிய வசதி பெற்று இருக்கின்றனர்.

இங்ஙனம் அரசாங்கம் ஒத்துழைப்பதால், மேனாட்டுக் குடியானவர் நல்ல விளைச்சலைப் பெறுகின்றனர். மேலும் அவர்கள் மின்சாரக் கருவிகளால் நிலத்தை உழுகின்றனர்; அதனால் வேலை விரைவாகவும் குறைந்த செலவிலும் முடி கின்றது. அவர்கள் நிலத்துக்குத் தக்க எருப் போடுகின்

றனர் ; பயிரைத் தக்கவாறு பாதுகாக்கின்றனர். இத்தகைய முயற்சிகளால் மேனாட்டு உழவர் அறிவைச் சாலப் பெருக்குகின்றனர் ; இன்ப வாழ்க்கை வாழ்கின்றனர். தம் விளைச்சலில் தமக்கு வேண்டுவதுபோக, எஞ்சியதை வெளிநாடுகட்கு அனுப்புகின்றனர். செல்வத்திற் சிறந்து விளங்குகின்றனர்.

நமது நாட்டில் பயிர் செய்யப்படும் நிலம் ஏறக்குறைய இருபத்திரண்டரைக் கோடி ஏக்கர்; பயிர் ஆக்கப்படாத நிலம் சுமார் பதினைந்து கோடி ஏக்கர் பரப்புடையது. நம் நாட்டு நிலத்துக்குத் தேவையான எருவின் எடை சுமார் **நாற்பத்து மூன்று கோடி டன்.** ஆனால் இன்று பயன்படுத்தும் எருவின் எடை சுமார் **ஒன்றே முக்கால் கோடி டன்.** ஏன்? நமது எரு வெளிநாடுகட்கு அனுப்பப்படுகின்றது. நம் உழவர் எழுத்தறியாப் பாமரர். அவர் எவ்வகைத் துணையும் இன்றி நடைப்பிணங்களாக இருக்கின்றனர். அவர்கள் கட்டும் வரியும் அவர்க்குள்ள கடனுமே அவர்கள் இடுப்பை ஒடித்துவிடுகின்றன. அவர்களைப்பற்றி இந்நாட்டுச் செல்வரோ, அரசாங்கமோ போதிய கவலை எடுத்துக்கொள்வதில்லை. அவர்கள் நிலத்தை உழுதலும் பயிரிடுதலும் நீரைப் பாய்ச்சுதலும் பழைய முறையிலேயே இருந்து வருகின்றன.

மேல் நாடுகளைப்போல நம் நாட்டில் போதிய விவசாயப் பள்ளிகள் இல்லை; பயிர்த்தொழில் பட்டதாரிகள் அடிக்கடி சென்று அவர்களுக்கு பயிர்த்தொழில் பற்றிய அறிவைப் புகட்ட வழி இல்லை; போதிய பணவுதவி செய்ய ஆள் இல்லை; உழவர்க்கென்று அமைந்த எழுத்தறிவிக்கும் பள்ளிகள் இல்லை; படக் காட்சிகள் இல்லை; நூல் நிலையங்கள் இல்லை. இக்குறைபாடுகளால், நம் நாட்டுப் பயிர்த்தொழில் மிகவும் இழிந்த நிலையில் இருக்கின்றது. கோடிக்கணக்கான ஏக்கர் பரப்புள்ள நிலம் ஒரு பயனும் தராது வறிதே கிடக்கின்றது.

மேல் நாட்டுக் குடியானவர் பயிர்த்தொழிலோடு நின்றுவிடவில்லை. அவர்கள் கோழிப் பண்ணை, ஆட்டுப் பண்ணை, பால் பண்ணை, பன்றிப் பண்ணை முதலிய பல வகைப் பண்ணைகளை வைத்து, அவற்றின் மூலமாகக் கூட்டுறவு முறையில் பெருத்த தொழில் நடத்துகின்றனர். அதனால் பணப்பஞ்சம் இல்லாது இன்பமாக வாழ்க்கையை நடத்துகின்றனர். இத்தொழிலுக்கு அரசாங்கத்தார் தக்க உதவி செய்கின்றனர். நம் நாட்டில் இத்தகைய பண்ணைகளைக் காண்பதே அருமை.

நமது நாட்டுப் பயிர்த்தொழில் முன்னேற வேண்டுமாயின், நமது நாட்டு உழவர் வறுமை இன்றி வாழவேண்டுமாயின், அரசாங்கத்தார் பயிர்த்தொழிலில் விசேட கவனம் செலுத்தவேண்டும்; உழவர்க்கென ஜில்லாக்கள் தோறும் பயிர்த்தொழில் பள்ளிகளை வைத்தல் வேண்டும்; பயிர்த்தொழில் பட்டதாரிகளைக் கிராமங்கள் தோறும் அனுப்புதல் வேண்டும்; பிரயாண நூல் நிலையங்கள், படக் காட்சிகள் இவை மூலமாக உழவர்க்கு அறிவு புகட்டல் வேண்டும்; கூட்டுறவு இயக்கங்கள், ஐக்கிய நாணயச் சங்கங்கள் இவற்றைப் போதிய அளவு உண்டாக்குதல் வேண்டும்; ஆண்டுதோறும் நல்ல விதைகளை அரசாங்கத்தாரே தேர்ந்தெடுத்துத் தருதல் வேண்டும். இத்துறைகளில் நமது அரசாங்கம் ஓரளவு வேலை செய்கின்றது என்பது உண்மையே. எனினும், அதன் முழுக் கவனமும் இவற்றில் பதியுமாயின், இந்தியா பூலோக சுவர்க்கமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

அரசியலார் உதவி ஒரு பால் இருப்ப, நமது நாட்டில் பணம் படைத்த மிராசுதார்களும் ஜமீந்தார்களும் பிறரும் உழவர்க்குச் சிறு பள்ளிகள், பத்திரிகைப் படிப்பகங்கள், சிறிய நூல் நிலையங்கள் இவற்றை ஏற்படுத்துதல் நலம்; கடன் வசதி செய்து கொடுத்தல் நலம். சொந்த நிலங்களை உடையவர் தம் நிலங்களைத் தாமே பயிர் செய்தல் வேண்டும்; அவர் வீட்டுப் பிள்ளைகள் பிறரிடம் அடிமை

வேலை செய்வதினும் பயிர்த்தொழிற் கல்வி பயின்று தமது கிராமத்தில் சிறந்த தொண்டாற்றல் நலமன்ருே ? இத் துறையில் அரசாங்கத்தார் மிகுந்த கவனம் செலுத்தி, நிலம் படைத்தவர்களைக் கிராமப் பணி செய்யத் தூண்டு வாராயின், நமது நாட்டு உழவு சிறந்த நிலையை அடையும். படித்த நிலமுடையார் கிராமங்களில் தங்கினுல், அவர் களால் கிராமமும் சீர்பெறும்; பயிர்த்தொழிலும் உயர் வடையும்; அவர்கள் செல்வத்தைக் கொண்டே பல ஐக்கிய நாணயச் சங்கங்களை ஏற்படுத்தலாம். அவர்கள் முயற்சியால் கூட்டுறவுக் கழகங்களை உண்டாக்கலாம். பல பண்ணைகளை உண்டாக்கி வெற்றியுற நடத்தலாம். அரசாங்கத்தாரும் வேண்டும் ஆள் உதவி, பண உதவி முதலியன செய்யின், உழவர் நிலையும், பயிர்த்தொழில் நிலையும் விரைந்து முன்னேறும். நாம் இந்த முன்னேற் றத்தை என்று காண்போம் ?

அரும்பொருள்

வாய்ந்தது - பெற்றது. அக்கரை - கவனம். கண்காணிப்பு - மேற்பார்வை. பரப்பு - விஸ்தீரணம். வறிதே - வீணுக. படிப் பகம் - வாசகசாலை.

கேள்விகள்

1. பயிர்த்தொழில் பற்றிய பழமொழி யாது? அதன் பொருள் யாது ?
2. உழவர் அறிந்திருக்க வேண்டும் சாத்திரங்கள் எவை ? ஏன் ?
3. அமெரிக்க அரசாங்கம் உழவர்க்குச் செய்யும் உதவிகள் எவை ?
4. அரசாங்க உதவியால் மேனுட்டு உழவர் பெறும் நன்மை என்ன ?
5. நமது நாட்டு நிலம், எரு—இவற்றின் நிலை என்ன ?
6. நம் உழவர் பரிதாப நிலைமை யாது ?
7. நம் உழவர்க்குள்ள குறைபாடுகள் எவை ?
8. மேனுட்டு உழவர் பயிர்த்தொழில் அன்றி வேறு யாது செய்கின்றனர் ?

9. நமது உழவு முன்னேற அரசாங்கம் என்ன செய்தல் வேண்டும்?

10. செல்வர் கடமை என்ன?

இலக்கணம்

குற்றியல் உகரம்

நடு, நாடு - இவ்விரண்டையும் தனித் தனி உச்சரித்துப் பாருங்கள்: '**நடு**' என்பதில் உள்ள '**உ**' வ்வின் மீது ஓசை அழுந்தும் அளவு, **நாடு** என்பதில் உள்ள **உ**வ்வின் மீது ஓசை அழுந்துதல் இல்லை அன்றோ? 'உ'வ்வின் இயல்பான ஓசையின் அளவு **ஒரு மாத்திரை. நடு** என்பதில் உள்ள **உ** அவ்வொரு மாத்திரை அளவு உச்சரிக்கப்படுகிறது. நாடு என்பதில் உள்ள **உ**கரம் ஓசையில் அரை அளவே உச்சரிக்கப் படுகிறது. ஆகவே, இதன் ஓசையின் அளவு **அரை மாத்திரை** ஆகிறது. இங்ஙனம் **இயல்பான** (ஒரு மாத்திரை) **ஓசையில் குறைந்து இயலும் உகரம் குற்றியல் உகரம்** எனப்படும்.

தனி நெட்டெழுத்துக்குப் பின்னும், இரண்டு முதலிய பிற எழுத்துகளுக்குப் பின்னும் சொல்லின் ஈற்றில் வரும் வல்லின மெய்யெழுத்தின் மேல் வரும் உகரமே இங்ஙனம் தன் இயல்பான ஓசையில் குறைந்து ஒலிக்கும். அதுவே குற்றியல் உகரம் எனப்படும்.

(i) நாடு - டு - (ட்+உ) உகரம் தனி நெடிலுக்குப் பின் வந்தது.

(ii) படகு - கு - (க்+உ) உகரம் இரண்டு எழுத்துகட்குப் பின் வந்தது.

(iii) கிழக்கு - (க்+உ) உகரம் மூன்று எழுத்துகட்குப் பின் வந்தது.

பயிற்சி

1. இப்பாடத்தில் வந்துள்ள நிகழ்கால வினைமுற்றுகளை எடுத்து எழுதி இடைநிலைகளைக் குறிக்க.

2. இப்பாடத்தில் வந்துள்ள குற்றியல் உகரச் சொற்களை எடுத்து எழுதுக.

3. ஆடவர், வேளாளன், அரசன், அந்தணன், வணிகன், பாணன், உழவன்—இவற்றிற்குப் பெண்பாற் பெயர்கள் கூறுக.

4. உறுப்பிலக்கணம் கூறுக:—எழுந்தது, தருகின்றது, இருக்கின்றன, செய்கின்றனர், காண்போம்.

5. பயிர்த்தொழிலின் உயர்வு—மேனாடுகளில் பயிர்த்தொழில் நிலை—நம் நாட்டில் பயிர்த்தொழில் நிலை—முன்னேற்றத்திற்கு உரிய வழிகள்—இக் குறிப்புகளின் உதவி கொண்டு பயிர்த் தொழிலைப்பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

5. அழைப்பு இதழ்கள்

இப்பாடத்தில் பொதுக்கூட்ட அழைப்பிதழ், புத்தாண்டு விழா அழைப்பு இதழ், சங்க ஆண்டு விழா அழைப் பிதழ் என்னும் மூன்றுக்கும் மாதிரிகள் தரப் பட்டுள்ளன. இவை, உங்கள் பள்ளிக்கூட மாணவர் சங்க ஆண்டு விழா முதலியவற்றைப் பற்றிய அழைப்பு இதழ்கள் எழுதப் பெரிதும் பயன்படும். ஆதலால், நீங்கள் இவற்றை நன்ருய்ப் படித்து, எழுதும் முறைகளைக் கவனித்து, இம்முறைகளில் எழுதப் பழகுதல் நலம்.

I

பொதுக்கூட்ட அழைப்பிதழ்

இளைஞர் கழகம்

பொதுக் கூட்டம்

அன்புடையீர்,

நிகழும் 1942-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15-ஆந் தேதி மாலை 6 மணிக்குக் கோகலே ஹாலில் சென்னை இளைஞர் கழகச் சார்பில் ஒரு பொதுக்கூட்டம் கூடும். கூட்டத்திற்கு உயர்திருவாளர் சக்கரவர்த்தி **இராஜ கோபாலாச்சாரியார்** தலைமை வகிப்பார். அவ்வமயம் திருவாளர் **சு. வையாபுரிப் பிள்ளை,** (சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவர்) அவர்கள் 'இளைஞரும் தமிழ் மொழியும்' என்பது பற்றிப் பேசுவார். வருக.

இங்ஙனம்:
ஆ. கோபாலன்,
இளைஞர் கழகச் செயலாளன்.

II

முதலியார் சங்கம், சென்னை.

புத்தாண்டு விழா அழைப் பிதழ்

செந்தமிழ்ப் பெரியீர்,

இச் சங்கத்தின் ஆதரவில் **தமிழ்ப் புத்தாண்டு விழா,** நிகழும் 15—4—'42 வியாழன் மாலை 6 மணிக்குச் சென்னை, கோவிந்தப்ப நாயக்கன் தெருவில் உள்ள சவுந்தரிய மஹாலில் கொண்டாடப்படும். அப்போது தாங்கள் வந்து கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

இங்ஙனம் :
ச. நடேச முதலியார்,
கு. மோகனரங்க முதலியார்,
கூட்டுச் செயலாளர்கள்.

நிகழ்ச்சி நிரல்

அவைத் தலைவர் :

திரு. வி. கலியாண சுந்தர முதலியார் அவர்கள்.

சொற்பொழிவாளர் :

1. வித்வான் பா. கண்ணப்ப முதலியார் அவர்கள் — "புத்தாண்டு விழா".
2. வித்வான் க. கண்ணம்மாள் அவர்கள் — "சங்க காலப் பெண்மணிகள்".
3. வித்வான் மா. இராசமாணிக்கம் பிள்ளை, B.O.L.— "தமிழர் நாகரிகம்".

III

ஆண்டு விழா அழைப்பிதழ்

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

25-ஆம் ஆண்டு விழா.

ஐயன்மீர்,

நிகழும் பிரமாதி ஆண்டு, ஆவணித் திங்கள், நாள் 3,4 (19,20—8—1939) சனி, ஞாயிறுகளில் ஷை விழாக் கொண்டாடப் பெறும். அதுபோது,

தலைவர் :

யாழ்ப்பாணத்துப் பரமேஸ்வரக் கல்லூரித் தலைவர், பெருமை மிக்க **திரு. அ. நடேச பிள்ளை,** B.A, B.L., M.L.C., அவர்கள்.

முதல் நாள்

பேச்சாளர் : பொருள் :

1. வித்வான்
   மா. இராசமாணிக்கம் பிள்ளை, B.O.L. அவர்கள், "தொல்காப்பியமும் சங்க நூல்களும்"
2. கரந்தைக் கவியரசு
   R. வேங்கடாசலம் பிள்ளை
   அவர்கள் "கலித்தொகை"
3. பண்டித மணி
   மு. கதிரேசச் செட்டியார்
   அவர்கள் "சிவஞான சுவாமிகள்"

இரண்டாம் நாள்

1. ச. க. கோவிந்தசாமி பிள்ளை, M.A.
   அவர்கள் "பண்டைத் தமிழர் நாகரிகம்"
2. வித்வான் சு. துரைசாமி பிள்ளை
   அவர்கள் "தேவார மாண்பு"
3. பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார்,
   அவர்கள் "குமர குருபரர்"
4. சுவாமி விபுலானந்தர், B. Sc. (Lond.)
   அவர்கள் "கைலாயக் காட்சி"

இலக்கணம்

குற்றியல் உகர வகை

குற்றியல் உகரம் தான் ஏறியுள்ள ஈற்றெழுத்துக்கு அயல் எழுத்தை நோக்க ஆறு வகைப்படும். அவை வன்றொடர்க் குற்றியல் உகரம், மென்றொடர்க் குற்றியல் உகரம், இடைத்தொடர்க் குற்றியல் உகரம், நெடிற்

றொடர்க் குற்றியல் உகரம், உயிர்த்தொடர்க் குற்றியல் உகரம், ஆய்தத் தொடர்க் குற்றியல் உகரம் என்பன.

(i) வாக்கு—க் (க்+உ) வன்றொடர்க் குற்றியல் உகரம்.

(ii) பஞ்சு — ஞ் (ச்+உ) மென்றொடர்க் ,,

(iii) செய்து— ய் (த்+உ) இடைத் தொடர்க் ,,

(iv) ஆறு — ஆ (ற்+உ) நெடிற்றொடர்க் ,,

(v) மரபு—ர்+அ (ப்+உ) உயிர்த்தொடர்க் ,,

(vi) இஃது— ஃ (த்+உ) ஆய்தத்தொடர்க் ,,

பயிற்சி

1. உன் தங்கை, தம்பி இவர்கட்குக் காதணி விழா நடைபெறுவதைக் குறிப்பிட்டு, அதனைப்பற்றிய அழைப்பிதழ் ஒன்று வரைக.

2. நீ புதுவீடு புகுவதாக நினைந்து அதற்கு ஓர் அழைப்பிதழ் வரைக.

3. உங்கள் இளைஞர் சங்க ஆதரவில் ஒரு பொதுக்கூட்டம் கூட்டுவதாக நினைந்து அதற்கு ஓர் அழைப்பிதழ் வரைக.

4. உங்கள் மாணவர் சங்க ஆண்டுவிழாவிற்கு ஓர் அழைப்பிதழ் வரைக.

5. உங்கள் மாணவர் சங்க ஆதரவில் நடைபெறும் திருநாள் கொண்டாட்டத்திற்கு ஓர் அழைப்பிதழ் வரைக.

6. உங்கள் ஊரில் நடைபெறவிருக்கும் திருவிழாவுக்கு வருமாறு உங்கள் நண்பனுக்கு ஓர் அழைப்பிதழ் எழுதுக.

7. வாக்கியங்களில் அமைத்து எழுதுக:
திறம்பட, ஓரளவு, ஆண்டுதோறும், அடிக்கடி, கூட்டுறவு, கண்காணிப்பு, குறைபாடு, ஆண்டுவிழா, பொதுக் கூட்டம், அழைப்பிதழ்.

8. பிரித்துப் புணர்ச்சியிலக்கணங் கூறுக:
அரங்கேற்றம், அஃதன்றி, எழுத்தறியா, இரண்டரை, பரப்புள்ள, செலவழித்தாலும், கூட்டுறவு, ஆங்காங்கு.

9. இக்கடிதங்களில் வந்துள்ள குற்றியல் உகரச் சொற்களை எடுத்தெழுதி அவற்றுள் ஒவ்வொன்றின் வகையையும் குறிக்க.

10. தடித்த சொற்களுக்குச் சொல்லிலக்கணம் கூறுக.

(i) ‘**நிலத்தைப்** பயிர் **செய்பவர்** அறிவுடையவராக **இருத்தல்** வேண்டும்.’

(ii) கடன் வசதி **செய்து கொடுத்தல்** நலம்.

(iii) **இழந்த** நிலையில் **இருக்கின்றது.**

6. பேய் மீன்

‘கடலில் வாழும் மீன் இனங்களில் மிக்க கொடியது சுரு மீன். ஆனால், அதைவிடக் கொடியது பேய் மீன்’ என்று ஆராய்ச்சி நிபுணர் அறைகின்றனர். இதன் இயற் பெயர் **கடம்பன்** என்பது. ஆனால், இதன் கொடுமையை நோக்கி இது **பேய் மீன்** எனப் பெயர் பெற்றது.

இது மற்ற மீன்களைப்போல நீளமாக இல்லை; நீண்டு உருண்டு வட்ட வடிவமாக இருக்கும். இஃது ஏறக்குறைய ஓர் அடி அகலமும் ஒன்றரை அடி முதல் இரண்டு அடி நீளமும் இருக்கும். இதன் வாய் அருகில் ஆறு முதல் ஏழடி நீளமுள்ள துதிக்கைகள் போன்ற எட்டுக் கைகள் இருக்கும். இஃது, இவ்வித நரம்புக் கைகளால் மனிதரையும் இறுகப் பற்றிக் கொன்று விடும் வன்மை வாய்ந்ததாகும்.

இது பெரும்பாலும் ஆழமான கடலில், பவளக்கொடிகளும் செடிகளும் புதர்களும் அடர்ந்த கடற்பாறைகளில் உள்ள குகைகளில் வசிப்பது. இது பார்க்க அச்சம் தருவது. இதன் தலையில் இருண்டு கருத்து அச்சத்தை உண்டாக்கும் இரண்டு கண்கள் உண்டு. அக் கண்களுக்கு இமைகள் இல்லை. அதனால் அவை எப்பொழுதும் திறந்தபடியே இருக்கின்றன. இம்மீன் அக்கொடிய கண்களால் தன் இரையை அச்சுறுத்திப் பிடிப்பது வழக்கம். முதன் முதல் இதன் கண்களைக் கண்ட ஆராய்ச்சியாளரே நடு நடுங்கினராம்.

பேய் மீன் இரையைப் பிடிக்கவும், பிடித்துக் கொல்லவும், நீந்திச் செல்லவும் தன் நரம்புத் துதிக்கைகளையே

பயன்படுத்துகின்றது. சில கைகளால் பெரிய மீனையும் பற்றிக்கொண்டு, மற்றக் கைகளால் நீந்திச் சென்று தன் குகையை அடையும் வன்மை இதற்கு உண்டு. இதன் வாய் கிளி மூக்குப் போன்றது. அது மிக்க உறுதியாயும் பெரிதாயும் இருப்பதால், பெரிய நண்டுகளையும் சிப்பிகளையும் சங்குகளையும் தூளாக்கித் தின்னும் வல்லமை இம் மீனுக்கு அமைந்திருக்கிறது.



பேய் மீன்

இம் மீன் இரை தேடுவது விந்தையாக இருக்கும். இது, தன் நீண்ட நரம்புத் துதிக்கைகளை நாலாப் பக்கங்களிலும் விரித்து நீந்திக்கொண்டே இரை தேடிச் செல்லும். கடலின்கீழ் உள்ள பாறைப் பொந்துகளில் பதுங்கிக்கிடக்கும் மீன்களைப் பிடிப்பதில் இதற்கு விருப்பம் மிகுதியாகும். இஃது அப் பொந்துகளில் தன் கைகளை விட்டுத் துழாவி, அம்மீன்களைப் பிடித்து விடும். ஆ! இதன் கொடிய கைகளில் அகப்பட்ட மீன்கள் மீளமுடி

யுமோ? அந்தோ! அவை, பிடிபட்டவுடனே கருடனைக் கண்ட பாம்பு போல நடுநடுங்கிக் குற்றுயிராகக் கிடக்கும். நரம்புக் கைகளில் அகப்பட்ட மீன்கள் நசுக்குண்டு, பேய் மீனின் வாயை அடைவதற்குள் இறந்துவிடும். இஃது, இங்ஙனம் பிடிபட்ட இரையைத் தன் குகைக்கு எடுத்துச் சென்று, தன் மனம்போலத் தின்று களிக்கும்.

இப்பேய் மீனிடம் ஒருவித மை அமைந்திருக்கிறது. அதனைப் பெரிய மீன்களைப் பிடிக்க முயல்கையில் இது பயன்படுத்தும்; பெரிய மீன்கள் எதிரில் வருவதைக் கண்டதும், மையைக் கக்கும். உடனே அங்குள்ள நீர் இருண்டு விடும். அவ்விருளில் வழி தெரியாமல் பெரிய மீன்கள் தத்தளிக்கும். அவ்வமயத்தில் பேய் மீன் அவற்றைத்தன் கொடிய கைகளால் இறுகப் பற்றித் தன் வாயாற் கடித்துக் கொன்றுவிடும்.

இக்கொடிய பேய் மீனுக்கும் யமன் இல்லாமல் இல்லை. பெரிய மீன்கள் பல இதனைக் கொல்வதுண்டு. அவை ஒரு பேய் மீனைக் கண்டதும் பிடிக்க விரைந்தோடி வரும். எதிரிகளைக் கண்டதும் இது தந்திரமாய்த் தப்பித்துக்கொள்ளும்; சில வேளைகளில் தப்ப வழி இல்லாவிடில், மேற்கூறிய மையைக் கக்கும். உடனே நீர் இருண்டுவிடும். அவ்விருளில் பெரிய மீன்கள் கண் தெரியாமல் அல்லல் உறும். அவ்வேளை இப் பேய் மீன் தப்பி ஓடிவிடும். அதனால், இதனைப் பற்றும் பெரிய மீன்கள் பின்புறமாகச் சென்றே பிடித்துக் கொல்லும்.

'ஒருமுறை, மனிதர் சிலர் இப் பேய் மீனிடம் சிக்கிக் கொண்டனர். வன்மை வாய்ந்த இதன் நரம்புத் துதிக்கைகளின் பிடியிலிருந்து தப்ப அவர்களால் முடியவில்லை. அதனால், அவர்கள் தங்களைப் பிணைத்திருந்த நரம்புத் துதிக்கைகளை வாளால் வெட்டி மீண்டனர்' என்று ஆராய்ச்சியாளர் உரைத்துள்ளனர். மனிதரையும் பிணித்துத் துன்புறுத்தும் இப்பேய் மீன் வன்மையை என்னென்பது!

இதனையும் மனிதர் உண்ணுமல் விடுவதில்லை. இது மிக்க சுவையுள்ள உணவு என்று மேனுட்டார் மதிக்கின்றனர். அவர்கள் இவற்றை வேட்டையாடுவதில் விருப்பம் கொண்டவர்கள். அவர்கள் இருண்ட நீருள்ள இடத்தில் வலைவீசி இதனைப் பிடித்து விடுகிருர்கள். இருண்ட நீர் எதனல் உண்டாவது என்பதை முன் சொன்னேம். பேய் மீன் தான் பெரிய மீன்களிடமிருந்து தப்பிப் போகவோ அல்லது அவற்றைப் பற்றித் தின்னவோ மையைப் பயன்படுத்துகின்றது. ஆனல், பாவம்! அந்த மையே அதன் உயிரைப் பறிக்கவும் உதவுகின்றது.

அரும்பொருள்

அச்சுறுத்தி - பயப்படுத்தி. நடுநடுங்கினர் - இரட்டைக்கிளவி. வன்மை - வலிமை. விந்தை - வியப்பு. அமயம் - சமயம். அல்லல் - துன்பம். பிணைத்தல் - கட்டுதல். ஐயம் - சந்தேகம்.

கேள்விகள்

1. பேய் மீன் உருவ அமைப்பு யாது?
2. அதன் உறைவிடம் எது?
3. அதன் அளப்பரிய சக்தி யாது?
4. அஃது எப்படி இரையைத் தேடுகிறது?
5. பேய் மீனிடம் உள்ள மை அதற்கு நன்மை செய்கிறது—எப்படி? தீமை செய்கிறது—எப்படி?
6. பேய்மீன் பெரிய மீன்களிடமிருந்து எப்படித் தப்புகிறது?
7. அதனிடம் அகப்பட்ட மனிதர் எப்படித் தப்பினர்?
8. அது 'பேய் மீன்' எனப் பெயர் பெற்றது ஏன்?

இலக்கணம்

முற்றியல் உகரம்

குற்றியல் உகரம் அல்லாதது முற்றியல் (ஒரு மாத்திரை அளவு ஓசையுள்ள) உகரம் ஆகும். நடு, புழு, கணு, கதவு—இவற்றில் உள்ள உகரம் முற்றியல் உகரமே.

குற்றியல் இகரம்

குற்றியல் உகரத்தின் முன் யகர முதல் மொழி வந்து புணருமாயின், நிலைமொழி ஈற்றில் உள்ள குற்றியல் உகரம் இகரமாகத் திரியும். இந்த இகரம் அப்போது **குற்றியல் இகரம்** ஆகும். இது தன் ஒரு மாத்திரை அளவில் குறைந்து **அரை மாத்திரை** அளவு ஒலிக்கும்.

நாடு + யாது ? = நாடியாது ?
காட்டு + யானை = காட்டியானை.

பயிற்சி

1. இப்பாடத்தில் வந்துள்ள தொழிற்பெயர்களை எடுத்து எழுதி விகுதிகளைக் குறிக்க.

2. கீழே தரப்பட்டுள்ளன வற்றுள் குற்றியல் உகரங்களையும், முற்றியல் உகரங்களையும் தனித்தனி எடுத்து எழுதுக. கருத்து, இஃது, இது, பாம்பு, தெரு, தேடு, உழவு, பழகு.

3. அரை—அறை, இரை—இறை, உரை—உறை, பரி—பறி இவற்றைப் பொருள் வேறுபாடு விளங்க வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

4. தடித்த சொற்களுக்கு இலக்கணம் கூறுக :
   (1) இவனை ஓர் **அறை அறை**.
   (2) இப்பாட்டுக்கு **உரை உரை**.

5. ‘கருடனைக் கண்ட பாம்பு போல’—இஃது **உவமை**. இங்ஙனம் வரும் உவமைகளைக் கண்டு எழுதிக்கொள்க.

6. உடன்பாட்டு வாக்கியங்களாக மாற்றி எழுதுக :
   (i) அறிவுடைய உழவர் இல்லை.
   (ii) மனிதர் இதனையும் உண்ணாமல் விடுவதில்லை.
   (iii) பேய் மீனுக்கு யமன் இல்லாமல் இல்லை.

7. உடல் அமைப்பு—இரை தேடும் முறை—வன்மையும் கொடுமையும்—இக்குறிப்புகளைக்கொண்டு பேய் மீனைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

8. இக் குறிப்புகளைக்கொண்டு நீ அறிந்த வேறொரு கொடிய பிராணியைப்பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

7. ஆகாய விமானம்

மக்கள் அறிவு மாண்பு மிக்கது. அரிய உண்மைகளை யும் தெரியக் கண்டு தெளியவல்ல திட்பமும் ஒட்பமும் அதற்கு உண்டு. அவ்வறிவின் துணைகொண்டு மக்களால் கண்டு பிடிக்கப்பட்டுள்ள வியக்கத்தக்க அற்புதப் பொருள்கள் பல. அவற்றுள் தலை சிறந்தது **ஆகாய விமானம்** என்னும் அதிசயப் பொருளாகும். அஃது ஒருவ ரால் ஒரே காலத்தில் திடீரென்று கண்டுபிடிக்கப்பட்டு விடவில்லை; பலவேறு காலங்களில் தோன்றிய பலவேறு அறிஞர்களின் அரிய ஆராய்ச்சிகளாலும் பெரிய உழைப் பினாலும் படிப்படியாக உருவாகி வந்து, இப்பொழுது நாம் காணும் முழு நிலையை அடைந்துள்ளது.

மேனாட்டார் வானத்திற் பறக்க முனைந்து பெரு முயற்சி செய்தார்கள். அவர்கள் வானத்தில் பறப்பதற் காகப் பல ஆராய்ச்சிகளைச் செய்தனர்; எவ்வளவோ துன் பங்களை அடைந்தனர். சிலர் முதன் முதலில் பறவைகளின் இறக்கைகளைத் தம் உடம்பில் பலவிதமாகப் பொருத்திக் கட்டிக்கொண்டு உயரமான இடங்களினின்று பறக்க முயன்று, கீழே விழுந்து படுகாயம் அடைந்து இறந்து போயினர். இவ்வளவு அரும்பாடுகட்குப் பின் 18-ஆம் நூற்றுண்டில் முதன் முதலாகப் **பலூன்** எனப்படும் புகைக் கூண்டு கண்டுபிடிக்கப்பட்டது. அதனைக் கண்டுபிடித்த வர்கள் **பிரஞ்சு** தேசத்தினரான ஸ்டீபன் (Stephen), ஜோசப் மாண்டுகோல்பையர் (Joseph Montgolfier) என் னும் இரு சகோதரர்களே ஆவர். அவர்கள் காகிதம் ஒட் டப்பட்ட துணியால் மிகவும் பெரியதான உருண்டை வடிவமுள்ள கூண்டொன்றைச் செய்தனர்; அதற்குள் இலேசான புகையை நிரப்பினர். புகை நிறைந்ததும் அது மேல் நோக்கி எழும்பிக் காற்றில் மிதக்கலாயிற்று. பிறகு அக்கூண்டின் அடியில் கூடைபோன்றது ஒன்றைக் கட்டி, அதனுள் சிலர் ஏறி அமர்ந்து ஆகாயத்தில் பறந்து

சென்றனர். புகை காற்றினும் மிக இலேசானது. ஆகை யால், புகைக்கூண்டு மேலே கிளம்பிக் காற்றில் மிதந்து சென்றது.

1900-ஆம் ஆண்டுவரை பலூனில் எவ்விதமான சீர்திருத்தமும் செய்யப்படவில்லை. அது மக்கள் விரும்பிய இடங்கட்குச் செல்லுதற்குரிய ஆற்றல் இன்றி, காற்று அடித்துச் செல்லும் இடங்கட்கெல்லாம் செல்லக்கூடிய தாக இருந்தது. செலுத்துவோர் அதனைத் தம் விருப்பப் படி திருப்பிச் செலுத்தல் இயலாது. ஆகவே அறிஞர் பலர் அதனைத் தம் இச்சைப்படி செல்லத் தக்கதாகச் செய்ய முயலலுற்றனர். அவர்களுள் **ஓட்டோ** என்னும் ஜெர்மானிய அறிஞர் பெற்ரோலினால் இயங்கக்கூடிய இயந்திரம் ஒன்றைக் கண்டுபிடித்து, அதனைப் புகைக் கூண்டுடன் இணைத்தார். அதன் உதவியால் புகைக் கூண்டை, அதனில் செல்வோர் தம் விருப்பப்படி விண் ணில் திருப்பிச் செலுத்த முடிந்தது. அந் நிலையிலும் அதனால் மக்களும் பறவைகளைப்போல வானத்தில் பறந்து செல்லுதல் கூடும் என்பதனைச் செயலளவில் காட்ட முடிந்ததே அன்றி வேறு எவ்விதப் பயனும் எய்த இயல வில்லை. எனவே, மேலும் பலர் அதனைப் பயன்படும் முறையில் முன்னேற்றம் அடையச் செய்யும் முயற்சியில் முனையலாயினர்.

அங்ஙனம் முயன்றவர்களுள் ஜெர்மனி நாட்டினரான **ஜெப்ளின்** என்னும் அறிஞர் புகைக்கூண்டைச் சீர்திருத்திப் பெரிய ஆகாய கப்பல்களைச் செய்தார். அவைகளுக்கு **ஜெப்ளின்கள்** என்பது பெயர். அவை மீன் வடிவமாக இருக்கும். அவற்றில் சிறு சிறு கூண்டுகளான பல அறை களுள் காற்று நிரப்பப்பட்டிருக்கும். அவை காற்றினும் இலேசானவையாக இருப்பதாலும், அவற்றுள் அடைக் கப்பட்டுள்ள காற்றின் உதவியாலும் தாமாகவே வானத் தில் பறக்கும். அதனை முன்னேக்கிச் செல்லுமாறு தள்ளு வதற்கும், விரும்பும் திசையில் செல்லுமாறு திருப்புவதற்

கும் அதனில் வெவ்வேறு இயந்திரங்கள் உண்டு. சுக்கானின் இடமும், இயந்திரங்களின் இடமும், மக்கள் இருப்பதற்குரிய இடமும் காற்றறைகட்குக் கீழே இருக்கும். அவற்றுள் பெரியவற்றில் நூற்றுக் கணக்கான மக்கள் ஏறிச் செல்லலாம். அவை மணிக்கு அறுபது முதல் எண்பது மைல் வரையில் விரைந்து பறக்கும். அவற்றை **ஆகாயக் கப்பல்** என வழங்குகின்றனர்.



முடிவில் அமெரிக்க நாட்டினரான **வில்பர் ரைட், ஓர்வில் ரைட்** என்னும் இரு சகோதரர்களே இப்பொழுது நாம் காண்பதுபோன்ற இறக்கைகள் அமைந்த ஆகாய விமானத்தைச் செய்து வழங்கினர். இன்று விண்ணிற் பறக்கும் விமானத்தைச் செய்யப் பேருதவியாக இருந்தது அவர்கள் கண்டுபிடித்த நூதன விமானமேயாகும். அவர்கள் பல

நாட்கள் ஆராய்ச்சி செய்து முடிவில் இறக்கைகளும், பெற்றேல் இயந்திரங்களும் அமைத்து ஒரு விமானத்தைச் செய்து முடித்து, 1903-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ஆம் நாளன்று முதன் முதலாக அதனில் ஏறி ஆகாயத்திற் பறந்தனர். அவ் விமானம் ஒரு முறை பெருங் காற்றில் அகப்பட்டு அலைப்புற்று அழிந்தது. பின்னர் அவர்கள் **பிரான்சு** நாட்டை அடைந்து, அந்நாட்டு மக்கள் உதவியைக் கொண்டு வேெருரு விமானத்தைச் செய்து, அதில் ஏறிப் பறந்தனர்; பிறகு அந்நாட்டு மக்களுட் சிலரையும் ஏற்றிக்கொண்டு பறந்து காட்டினர். அன்று முதலே ஆகாய விமானம் உலகில் பரவத் தொடங்கியது. அச் சகோதரர்கட்குப் பிறகு பலர் அவர்கள் வழியையே பின்பற்றி ஆகாய விமானத்தில் முன்னேற்றமான பல சீர்திருத்தங்களைச் செய்யலுற்றனர். அவற்றின் பயனாக இன்றுள்ள ஆகாய விமானங்கள் தோன்றி எங்கும் பரவலாயின.

விமானத்தின் இறக்கைகள் மெல்லிய இலேசான சட்டங்களின்மேல் நார்த்துணி பரப்பப்பட்டிருக்கும். அத்துணியின்மேல் நீர் ஒழுகாதவாறு மேற்பூச்சுப் பூசப் பட்டிருக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட இறக்கைகள் உள்ள விமானங்களில், இறக்கைகள் கீழும் மேலுமாக அமைக்கப் பட்டிருக்கும். கீழ் இறக்கைகளின்மேல் நிறுத்தப்பட்டிருக்கும் கால்களின் மீது மேல் இறக்கைகள் பொருத்தப்பட்டிருக்கும்.ஆகாய விமானங்களின் உடல் நீண்ட சதுரமான குழாய் போன்றது. அதன் நடுப்பாகம் பருத்தும் முன்னும் பின்னும் வர வரச் சிறுத்தும் இருக்கும். உடலின் முன்புறத்தில் கைபோன்ற சுழற்கைகள் அமைக்கப்பட்டிருக்கும். அவற்றிற்குப் பின்புறத்தில் விமானத்தை இயக்குவதற்குரிய இயந்திரம் உள்ளது. விமான ஓட்டி அவ்விடத்தில் அமர்ந்தே இயந்திரத்தை முடுக்கி விமானத்தைச் செலுத்துவான். இயந்திரம் அமைக்கப்பட்டுள்ள இடத்திற்குப் பின்னுல், விமான உடலின் இடையில்,

சற்றுக் கீழ்ப்புறமாகப் பிரயாணிகள் அமர்வதற்குரிய இடம் அமைக்கப்பட்டுள்ளது. பின் புறத்தில் விமானத்தின் வால் உள்ளது. கீழ்ப்புறத்தில் சக்கரங்கள் உள்ளன.

விமான ஓட்டி தன் இடத்தில் அமர்ந்து பெற்ரோல் இயந்திரத்தை முடுக்கி இயக்குவான். உடனே விமானத்தின் முன்புறத்தில் உள்ள சுழற்கைகள் விரைந்து சுழலத் தொடங்கும். விமானம் பேரிரைச்சலுடன் அடியிலுள்ள சக்கரங்களின் உதவியால் தரையில் ஓடும். போதுமான வேகம் அடைந்த பின், சுழற்கைகளால் உண்டாக்கப்படும் காற்றின் வேகம் விமானத்தை மேலே கிளப்பும்.

ஆகாயத்திற் பறக்கும் விமானங்களுள் பல வகைகள் உள்ளன. அவற்றுள் பொதுவாக ஆகாயக் கப்பல் (ஜெப்ளின்), ஆகாய விமானம் (ஏரோபிளேன்) என இரு வகைகள் உண்டு. ஆகாய விமான வகைகளுள் ஒரு சிறை விமானம், இரு சிறை விமானம், முச்சிறை விமானம் என்பன சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை. இவற்றுள் ஒரு சிறை விமானம் வேகமாகப் பறக்கும். இரு சிறை விமானம் வானில் ஆடுதல் அசைதல் இன்றி அமைதியாகச் செல்லும். முச்சிறை விமானம் பெரும்பாரம் சுமந்து செல்லும். இவை அன்றியும் நிலத்திலிருந்து மேலே செல்லக்கூடியனவும், நிலத்தில் இறங்கக் கூடியனவும், நீரிலிருந்து மேலே செல்லக்கூடியனவும், நீரில் இறங்கக் கூடியனவும் என வேறு சில வகைகளும் உள்ளன. இக் காலத்தில் போரில் பயன்படுத்துவதற்காகச் சில வகை விமானங்கள் செய்யப்பட்டுள்ளன. அவை வெடிகுண்டு விமானம், கழுகுப்பாய்ச்சல் விமானம், போர் விமானம், வேட்டை விமானம் என்பன.

ஆகாய விமானங்கள் ஏறி இறங்குவதற்கு விசாலமான சமநிலம் வேண்டும். விமானம் எழுகையில் சிறிது தூரம் தரையில் ஓடின பிறகே காற்றின் வேகத்தால் உயரக் கிளம்புவதுபோலவே, இறங்குகையிலும் சிறிது

தூரம் தரையில் ஓடியே நிற்கும். இவ்விதம் விமானம் ஏறி இறங்கும் இடத்திற்கு **ஏரோட்ரோம்** என்பது பெயர். அது தமிழ் மொழியில் **விமான நிலையம்** எனப்படும்.

ஆகாய விமானம் இப்பொழுது உலகம் முழுவதும் வெகு விரைவாகப் பரவி வருகின்றது. அது மக்களுக்குப் பல வகைகளிலும் பெரும் பயன்படுகின்றது. இதன் மூலமாக நெடுந் தூரத்திலுள்ள ஊர்களுக்கும் பல்லாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள நாடுகட்கும் மிகக் குறுகிய கால அளவில் செல்ல இயலுகின்றது. ஆறாயிரம் மைல்கள் தொலைவில் உள்ள இங்கிலாந்துக்கும் நம் நாட்டுக்கும் விமானத்தின் மூலமாகப் போக்கு வரவு நடைபெறுகிறது. தரை மார்க்கமாகக் கடக்க முடியாத பல அரிய இடங்களும் விமானத்தின் மூலமாக வெகு எளிதில் கடக்கப்படுகின்றன. காண முடியாத பலவிடங்களைக் காணவும் இது பயன்படுகிறது. சென்னை, கல்கத்தா, டில்லி, கராச்சி முதலிய உள்நாட்டு நகரங்கட்கும், ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, இங்கிலாந்து முதலிய வெளிநாடுகட்கும் விமானத்தின் மூலம் தபால் போக்கு வரவு நடைபெறுகிறது. இதனால் தபால்கள் விரைவில் கிடைக்கின்றன. இதன் மூலமாகத் தூர தேசங்கட்கும் விரைவில் சென்று மீள இயலுகிறது. நாளுக்கு நாள் விமானத்தின் பயன் பெருகிக்கொண்டே வருகிறது. மருத்துவர்கள் தொலைவில் உள்ள நோயாளிகட்கு விரைவில் சென்று சிகிச்சை செய்யவும், பெருங் காடுகள் தீப்பற்றிக்கொண்டால் ஆகாயத்திலிருந்து மருந்துகளைப் போட்டு விரைவில் தீயை அணைக்கவும், மேலிருந்தபடியே மருந்துகளைத் தூவிப் பயிர்கட்கு அழிவு செய்யும் வெட்டுக்கிளிபோன்ற பூச்சிகளையும், நோயைப் பரப்பும் கொசுக்களையும் அழிக்கவும் இது பயன்படுகிறது. சில ஆண்டுகட்கு முன்னர் அமெரிக்கர் சிலர் விமானங்களிற் பறந்து மேக மண்டலத்திற்கு மேற் சென்று, மேகங்களின் மீது மணலைத் தூவி மழை பெய்யச் செய்தனராம்.

இவ்வாறு மக்கள் வாழ்வதற்கு உதவியாக நற்காரியங்கட்குப் பயன்படத் தக்க விமானம், இப்பொழுது மக்கள் வாழ்க்கையை அழிக்கும் தீக்காரியங்கட்காகவே உபயோகப்படுத்தப்படுகின்றன. பகைவர் இருப்பிடங்களை அறியவும், அவர்களோடு போர் புரியவும், பகைவர்களுடைய நாடு நகரங்கள் மீதும் மக்கள்மீதும் கொடிய குண்டுகளை வீசவும், விஷப் புகையைப் பரப்பவும் விஷக் கிருமிகளை வீசவும் இது பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலமாக இராணுவ வீரர்களை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு விரைவில் ஏற்றிச் செல்லுகின்றனர். போர்க்களத்தில் உள்ள வீரர்களுக்கு உணவும், உடையும், ஆயுதங்களும் இதன் மூலமாக எளிதில் கொண்டு கொடுத்து வருகின்றனர். இப்பொழுது மேல் நாட்டில் நடக்கும் போரில் விமானப் படையே மிகவும் முக்கியமானதாகக் கொள்ளப்பட்டுள்ளது. இதனைக்கொண்டு அழகிய நகரங்கள் உருத்தெரியாமல் அழிக்கப்படுகின்றன ; எளிய மக்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டு வருகின்றனர்.

இதனை முதலில் கண்டுபிடித்தவர்கள் ஆக்கவேலைகட்குப் பயன்பட வேண்டும் என்னும் நோக்கத்துடனே வருந்தி முயன்று கண்டுபிடித்து உதவினர். அவர்களது சிறந்த நோக்கத்திற்கு நேர்மாறாக இதனை அழிவு வேலைகட்கு உபயோகப்படுத்துவது அவர்கட்குத் துரோகம் செய்வதாகும். ஆகவே மனிதரைத் தேவராக்க வல்ல புனிதம் வாய்ந்த விமானங்களைப் பாதகச் செயல்களுக்குப் பயன்படுத்துவதை ஒழித்து, நற்காரியங்களுக்கு உபயோகப்படுத்திக்கொண்டு உறுதிபெறுவார்களாக.

அரும்பொருள்

திட்பம் - உறுதி. ஒட்பம் - ஒளியுடைமை. விண்வழி - ஆகாய வழி. கற்பனைக்கதை - கட்டுக்கதை. சுழற்கைகள் - Propellers. மருத்துவர் - வைத்தியர். தொலைவு - தூரம். சிகிச்சை - வைத்தி

யம் (Treatment). ஒரு சிறை விமானம் - Mono-plane. இரு சிறை விமானம் - Bi-plane. முச்சிறை விமானம் - Tri-plane. வெடிகுண்டு விமானம் - Bomber.

கேள்விகள்

1. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே மக்களுக்குப் பறக்கும் எண்ணம் இருந்தது என்பது எவ்வாறு அறியப்படுகிறது?
2. முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட பறக்கும் சாதனம் யாது? அதனைக் கண்டுபிடித்தவர் யாவர்?
3. பலூனின் அமைப்பையும் தன்மையையும் விளக்குக.
4. ஜெப்ளின் என்பது யாது? அதனைப்பற்றிச் சுருக்கி எழுதுக.
5. இப்பொழுதுள்ளது போன்ற விமானம் யாரால் எப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டது?
6. ஆகாய விமானத்தின் அமைப்பு யாது?
7. ஆகாய விமானம் எங்ஙனம் இயக்கப்படுகிறது?
8. விமான நிலையத்தைப்பற்றிச் சுருக்கி எழுதுக.
9. விமானங்களின் வகைகள் யாவை?
10. விமானங்கள் எவ்வெவ் வகைகளில் பயன்படுகின்றன?
11. போர்க் காலங்களில் விமானங்கள் எவ்வாறு உதவுகின்றன?
12. விமானம் எந்த நோக்கத்தோடு கண்டுபிடிக்கப்பட்டது? அஃது எவ்வகையில் பயன்படுத்தப்படுகிறது?

இலக்கணம்

குற்றியல் உகரப் புணர்ச்சி

குற்றியல் உகரச் சொல்லின் முன் உயிர் முதல் வருமொழி வரின், குற்றியல் உகரம் தான் ஏறியுள்ள மெய்யெழுத்தை விட்டு நீங்கும். (பிறகு வருமொழி முதலில் உள்ள உயிர் அம் மெய்யெழுத்தின் மேல் ஏறி ஓர் உயிர் மெய்யெழுத்தாகிப் புணரும்.)

(a) அழைப்பு + இதழ் = அழைப் (ப் + உ) + இதழ்.
= அழைப் (ப் +) இதழ்—'உயிர்வரின் உக் குறள் மெய்விட்டு ஓடும்' என்பது விதி.

=அழைப் (ப்+இ) தழ்
=அழைப்பிதழ்—'உயிர் மேல் உடல் வந்து ஒன்றுவது இயல்பே'—என்பது விதி.

குற்றியல் உகரச் சொல்லின் முன் யகர முதல் மொழிவரின் குற்றியல் உகரம் இகரமாகத் திரிந்து புணரும்.

(b) நாடு+யாது? =நா (ட்+உ)+யாது?
=நா (ட்+இ)+யாது?—'யவ்வரின் இய்யாம்' என்பது விதி.
=நா+டி+யாது?
=நாடியாது?

(c) செலவு+இட்ட=செல (வ்+உ)+இட்ட
=செலவ்+இட்ட
=செல (வ்+இ)+ட்ட
=செலவிட்ட—'முற்றும் அற்று ஒரோ வழி' என்பது விதி.

(d) செலவு+யாது?=செல (வ்+உ)+யாது?
=செல (வ்+இ)+யாது?
=செல+வி+யாது?
=செலவியாது?—'முற்றும் அற்று ஒரோ வழி' என்பது விதி.

பயிற்சி

1. சேர்த்து எழுதுக:—கூண்டு + ஒன்றை, காற்று + அடித்துச் செல்லும், இருப்பதற்கு + உரிய, வேறு + ஒரு, பயிர்கட்கு + அழிவு செய்யும்.

2. பிரித்து எழுதுக: உணவென்று, அமைப்பித்த, கூட்டுறவியக்கங்கள், அறிவுடைய.

3. ஏறி × இறங்கி, ஏறி—ஏரி, இறங்கி—இரங்கி, இவற்றை வேறுபாடு விளங்க வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

4. தோற்றம்—வளர்ச்சி—அமைப்பு— இயக்கம்—பயன்—இக்குறிப்புகளைக்கொண்டு ஆகாய விமானத்தைப்பற்றி ஒரு **கட்டுரை** வரைக.

8. தளவாய் அரியநாத முதலியார்

(உழைப்பால் உயர்ந்தவர்)

'தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து' எனப் புலவர் பாடும் புகழ்பெற்ற தொண்டை நாட்டில் காஞ்சிமா நகரைச் சார்ந்து **மெய்ப்பேடு** என்பதொரு சிற்றூர் உண்டு. அவ்வூரில் சற்றேறக்குறைய முன்னூற்று நாற்பது ஆண்டுகட்கு முன்னர், சைவ வேளாளர் மரபைச் சேர்ந்த மிக எளிய குடும்பம் ஒன்றில் **அரியநாதர்** என்பவர் ஒருவர் இருந்தார். இவர் இளமையிலேயே அவ்வூர்ப் பள்ளியில் கல்வி கற்கத் தொடங்கினர். அந்நாளில் இவர் கணித நூற் பயிற்சியில் பெரு விருப்பம் கொண்டு, அதனை ஊக்கத்தோடு பயிலலானர்; அதனோடு விற்போர், மற்போர் முதலிய போர் முறைகளிலும் விருப்புற்றுப்பயின்று திறமை பெற்று வீரச்செயல்கள் பல புரிந்து வாழ்ந்து வந்தார். இவர் இளமையிற் பெற்ற கணித நூற் பயிற்சியும் போர்த் திறமையுமே, பிற்காலத்தில் உயர்நிலை எய்தியதற்கு உதவியாயிருந்தன.

அரியநாதர் ஒரு நாள் மாலையில் ஊர்ப்புறத்தே தம் தோழர்களோடு சிலம்பம் விளையாடிக் கொண்டிருந்தார். அதுபோது அவ்வழியே சென்ற வழிப்போக்கராகிய அந்தணர் ஒருவர் அரியநாதரின் சிலம்பத் திறமையைக் கண்டு வியப்புற்று, அவரை அருகழைத்து அவர்தம் கையைக் காட்டுமாறு கூறினர். அரியநாதர் அவ்வாறே தமது கையைக் காட்ட, அந்தணர் அதனை நோக்கி, அதில் அருமையாக அமைந்திருந்த ரேகைகளை ஆராய்ந்து, 'நல்ல கை; மேலான கை' என வியந்து, 'ஐயா, நான் கூறுவதைக் கேளும்: உமக்கு இராஜயோகம் உள்ளது; நீர் இச்சிற்றூரின் நீங்கி **விஜயநகர சமஸ்தான**த்தைச் சார்வீராயின், அரசு நிலை எய்தி அரும்புகழ் பெற்று விளங்குவீர். அக்காலத்தில் யானவது, எனது மக்களுள் யாராவது உம்மை அணுகி, இந் நிகழ்ச்சியை நினைவுறுத்தின், உமது

வருவாயில் நாலில் ஒரு பங்கேனும் தருவீரோ? அந்நிலையில் உமக்கு என் நினைவு இருக்குமோ?' என்றார்.

அரியநாதர், 'சுவாமி, யான் எளிய குடும்பத்தைச் சார்ந்த ஓர் ஏழைச் சிறுவன். நீங்கள் கூறுவதுபோல் நடந்தேறின் எளியேன் உங்களை ஒருகாலும் மறவேன்' என்றார். அந்தணர், 'நீர் ஏழை என்பதை யான் அறிவேன். ஆயின் நீர் என் உரைப்படி நடப்பீராயின் அரசு நிலை எய்துதல் திண்ணம். என் உரை தவறாது. அந்நிலையில் இவ்வெளிய அந்தணனிடம் உமக்கு நன்றி இருக்குமோ என்பதே இப்பொழுது யான் அறிய வேண்டுவது' என்றார். அரியநாதர், 'ஐயரே, நீர் அவ்வாறு என்பால் சிறிதும் ஐயுறவு கொள்ளல் வேண்டா. யான் ஒருபோதும் சொன்ன சொல் தவறேன்,' என்று பணிவோடு கூறினர். அந்தணர், 'உயர்ந்த பதவி பழைய நிகழ்ச்சிகளை மறப்பித்துவிடும்; நீர் சொல் தவறாதவர் ஆவது உண்மையாயின், அதனை உம் கைப்பட எழுதிக் கொடும்', என்றார். அரியநாதர் அவ்வாறே ஓர் ஏட்டில் எழுதிக் கையொப்பம் இட்டுக் கொடுக்க, அந்தணர் அதனைப் பெற்றுக்கொண்டு அகன்று போயினர்.

அரியநாதர் அந்நாள் முதல் விஜயநகரம் செல்லும் வேணவாவினராய், அந்நாட்டிற்குரிய தெலுங்கு மொழியைக் கற்கத் தொடங்கி அதில் தேர்ச்சி பெற்றார். பின்னர் அவர் பெற்றோரின் இசைவு பெற்று, நன்னாள் ஒன்றில் புறப்பட்டுப் பட்டினியும் பசியுமாக வழிநடந்து சின்னாளில் விஜயநகரத்தை அடைந்தார். அங்கு முதலில் அவருக்குச் சமஸ்தானத் தளகர்த்தர் வீட்டில் கணக்குப் பிள்ளை வேலை கிடைத்தது. அத் தளகர்த்தருக்கு **விசுவநாதர்** என்னும் புதல்வர் ஒருவர் இருந்தார். அவர் அறிவிலும் ஆண்மையிலும் சிறந்தவர்; போர் வகைகளில் திறமை மிக வாய்ந்தவர். அரியநாதர் விரைவில் விசுவநாதருக்குச் சிறந்த நண்பர் ஆயினர். அவர் தம் நற்குண நல்லொழுக்கங்களாலும், உண்மை உழைப்பினாலும், செயல் ஆற்றும்

திறமையாலும், நாளடைவில் தளகர்த்தரின் நன்மதிப்பைப் பெற்று, பதவியில் மேன்மேலும் உயர்ந்தார்; அவரால் விஜயநகர அரசரின் அறிமுகத்தையும் அன்பையும் பெறலாயினர்.

அரியநாதர் ஒரு நாள் தளகர்த்தருடன் அரசவைக்குச் சென்றார். அப்பொழுது புலவர், அமைச்சர், படைத் தலைவர், போர்வீரர் ஆகியோர் புடைசூழ அரியணையில் வீற்றிருந்த **கிருஷ்ணதேவ ராயர்,** அவையில் இருந்த புலவர்களை நோக்கி, 'யாம் இன்று காலை வாவியில் நீராடச் சென்றிருந்த பொழுது, முக்கால் சாண் நீளமுள்ள அழகிய தாமரை மொட்டு ஒன்று, தாள் முழுதும் தண்ணீர்க்குள் மறைந்திருக்க நீர் மட்டத்திற்குமேல் நின்றிருந்ததைக் கண்டோம். யாம் வாவியில் பாய்ந்து குதித்ததனால் உண்டான அதிர்ச்சியால் அம்மொட்டு மூன்றே முக்கால் சாண் தூரம் பின்சென்று நீர்மட்டத்துக்குச் சமமாக நீர்க்குள் மறைந்தது. அது நின்ற இடத்தில் வாவியின் ஆழம் எவ்வளவு இருக்கும்?' என்று கேட்டனர்.

அவையிலிருந்த புலவர்கள் இராயரின் வினவுக்கு உரிய விடையை அறியாது விழித்தனர். அந்நிலையில் ஒரு தூண் அருகில் நின்றிருந்த அரியநாதர், 'மகாராயர் அனுமதித்தால் அடியேன் விண்ணப்பம் செய்வேன்' என்று வணங்கிக் கூறினர். அவ் வுரையைக் கேட்டதும் அங்கிருந்தோர் அனைவருடைய கண்களும் அரியநாதர் பக்கம் திரும்பின. இராயர், 'அரியநாதனா? முன்னே வா; சொல், கேட்போம்' என்று அன்புடன் கூறினர். அரியநாதர் அரியணையின் அருகிற் சென்று இராயரை வணங்கி நின்று, 'அவ்விடத்தில் நீரின் ஆழம் இதோ நிற்கும் நண்பர் விசுவநாதர் உயரமளவே' எனப் பணிவுடன் விடையளித்தார். இராயர் விசுவநாதனை நோக்கி, 'உன் உயரம் என்ன?' என வினவ, அவர், 'ஒன்பது சாண்' என்று கூறினர். இராயர் ஏவலாள் ஒருவன் அவ் வாவியை அடைந்து, அத்தாமரை மொட்டு நின்ற இடத்

தின் ஆழத்தை அளவுகோலால் அளந்து வந்து, ‘அவ்விடத்தில் வாவியின் ஆழம் ஒன்பது சாணே’ என்று கூறினன். இராயர் அரியநாதரை விளித்து, ‘நீ விசுவநாதன் உயரத்தை எவ்வாறு அளந்தாய்?’ என்று கேட்க, அவர், ‘கண் நோக்கினுலேயே அளந்தேன்; **கண் அளக்காததா கை அளக்கும்!**’ என்று விநயமாக விடையிறுத்தார்.

இராயர் அரியநாதரது கணித நூற் புலமைத் திறத்தை அறிந்து வியப்பும் உவப்பும் எய்தி அவரைப் பாராட்டினர்; அன்றுமுதல் அவரைத் தம் அரண்மனைச் சேவகத்தில் அமர்த்தி அன்போடு சிறப்பாக நடத்தி வந்தார். அரியநாதர் தமக்குக் கொடுக்கப்பட்ட அரசியற் பணியை அரசரும் அதிகாரிகளும் வியக்குமாறு பொறுப் புணர்ச்சியோடு திறம்படச் செய்து, மேன்மேலும் மேற் பதவிகளில் உயர்ந்து வந்தார். அந்நிலையில் இந்தியக் குறுநில மன்னர்களாலும் முகம்மதியர்களாலும் பலவிடங்களில் கலகங்களும் குழப்பங்களும் உண்டாயின. இராயர் அரியநாதரையும் உடன் அழைத்துக்கொண்டு சென்று அவற்றை அடக்கினுர். அதுபோது இராயர் அரியநாதரது சூழ்ச்சித் திறத்தையும், போர்த் திறத்தையும் கண்டு பெருவியப்புக் கொண்டார்; அறிவையும் ஆற்றலையும் ஆண்மையையும் அறிந்து அகமகிழ்ந்தார்; அவருக்கு **முதலி** என்னும் இராணுவப் பெரும் பட்டத்தையும், பல்லக்கு ஏறும் உரிமையையும் நல்கி, அவரைத் தமது மந்திரிகளுள் ஒருவராக அமர்த்திக் கொண்டார்.

அக்காலத்தில் இராயர் ஆட்சிக்கு அடங்கிப் பாண்டிய நாட்டை ஆண்டுவந்த அரசனும், அவன் மகனும் இறந்தனர். இராயர் அரியநாதரைத் துணைக் கொண்டு அந்நாட்டை ஆளுமாறு விசுவநாதரை ஏவினர். விசுவநாதர் பாண்டிய நாட்டிற்கு அரசரானுர். அரியநாதர் **தளவாய்** என்னும் பட்டத்தோடு படைத் தலைமையும் மந்திரத் தலைமையும் ஏற்று, அரசியல் கருமங்கள் அனைத்தையும் திறமுற நடத்தி வரலானுர். அக்காலத்தில் பாண்டி

மண்டலம் களவு, கொள்ளை, கொலை, கலகம் முதலிய கொடுமைகளால் கலக்கமுற்றிருந்தது. அரியநாதர் அவற்றிற்குக் காரணமாக இருந்தவர்களைக் கண்டு, அவர்களை அச்சுறுத்தியும், ஒறுத்தும் அடக்கி, நாட்டில் அமைதியை நிறுவினர்; தாமிரவருணி, காவிரி ஆகிய யாறுகளின் இரு கரைகளிலும் அடர்ந்திருந்த காடுகளை அழித்துத் திருத்தி ஊர்களை ஏற்படுத்தினர்; நாட்டின் அமைதியைப் பாதுகாக்க ஆங்காங்குப் **பாளையப்பட்டு**களை அமைத்தார்; பல பெரிய கோட்டைகளையும் கொத்தளங்களையும் நிருமித்து, அவற்றிலெல்லாம் **பாளையக்காரர்**களை நியமித்தார். இங்ஙனம் அரியநாதரால் அமைக்கப்பட்ட **ஊர் காப்பு முறை** இன்றும் தென்பாண்டி நாட்டில் பலவிடங்களில் காணப்படுகின்றது.

இவ்வாறு பாண்டிய நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுச் சீரும் சிறப்புமாக நடத்திவந்த அரியநாதர் ஒரு நாள் அரசவையில் பாளையக்காரர்களும் பரிவாரங்களும் சூழ, விசுவநாத நாயகருடன் அமர்ந்து அரசியல் கருமங்களைக் கவனித்துக்கொண் டிருந்தார். அவ்வமயத்தில் அந்தணர் ஒருவர் வாயிற்காவலைக் கடந்து அவையுட் புகுந்து அரியநாதரை அணுகி, ‘அரியநாதர் என்பவர் தாங்கள் தாமோ?’ என்று வினவினர். அரியநாதர் பொறுமையோடு, ‘ஆம், என்னையே அரியநாதன் என்பர். தாங்கள் யார்? எங்கு வந்தீர்கள்?’ என்றார். அந்தணன், ‘நான் இருப்பது காஞ்சி நகரம். என் தந்தையார் சோதிடக் கலையில் வல்லவராக விளங்கினராம். நான் பல்லாண்டுகளாகக் கலைப் பயிற்சிக்காக வடநாடு சென்றிருந்தேன். இவ்வாண்டே வந்தேன். சரஸ்வதி பூசைக்காக என் தந்தையாரால் கட்டி வைக்கப்பட்டிருந்த பழைய ஏடுகளை எடுத்து ஆராய்ந்தேன். ஆராய்கையில் இவ்வோலை நறுக்கு அகப்பட்டது. இஃது உமது கையெழுத்துத் தானே, பாரும்,’ என்று கூறி, அவ்வோலை நறுக்கை அரியநாதர் கையில் நீட்டினர்.

அரியநாதர் அதனை வாங்கி நோக்கினர்; அது தாம் இளைஞராய் இருந்த காலத்தில் மெய்ப்பேடு என்னும் ஊர்ப்புறத்தே தமக்குக் கைக்குறி கூறின மறையவருக்குத் தாம் எழுதித் தந்த உறுதிமொழி ஏடு என உணர்ந்தார்; உடனே இருக்கையினின்றும் எழுந்து, அவ்வேதியரை வணங்கி, தம் அருகில் ஓர் ஆசனத்தில் அமர்வித்து, விசுவநாத நாயக்கரும் அவையினரும் கேட்டு வியக்குமாறு முன் நிகழ்ந்த நிகழ்ச்சியை எடுத்து இயம்பினர்; பின்னர் அவர் வேண்டியதினும் பன்மடங்கு மிகுதியாக வீடும், நிலமும், தோட்டமும், துரவும், மாடும், கன்றும், ஆடை அணிகளும் வழங்கியதோடன்றி, அன்று முதல் அவரைக் குலகுருவாகவும் கொண்டு ஆதரித்தார்.

அரியநாதர், பாண்டி மண்டலத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்திவந்த தம் நண்பராகிய விசுவநாத நாயக்கர் உயிர் நீத்ததும், அவர் குமாரராகிய குமார கிருஷ்ணப்ப நாயக்கருக்கு முடிசூட்டி, அவரை அரசாளுவித்தார். பின்னர் அவர், குமார கிருஷ்ணப்ப நாயக்கருக்குப் பிறகு அவர் புதல்வர் வீரப்ப நாயக்கருக்கும், அவருக்குப்பின் அவர் மைந்தர் வீரகிருஷ்ணப்ப நாயக்கருக்கும் முறையே முடிசூட்டி, அவர்களைக் கொண்டு பாண்டிய நாட்டைப் பாங்குறப் புரந்து வந்தார். அரியநாதர் தொண்டை நாட்டிலிருந்த தம் இனத்தவரைப் பாண்டி நாட்டிற்கு அழைத்து, அங்குச் **சோழ வந்தான்** என்னும் இடத்தில் தாம் கட்டிவைத்த பன்னூறு வீடுகளில் குடியிருக்கச் செய்தார். அவர்கட்கு வேண்டும் நிலம் புலங்களை விட்டதேயன்றி, அவர்கட்குத் துணைபுரிய தொழிலாளர் பலரையும் அங்குக் குடியேற்றினர்; மதுரைச் **சோமசுந்தரக் கடவுள்** திருக்கோயிலில் ஆயிரக்கால் மண்டபமும், அறுபத்துமூவர் மண்டபமும் கட்டிவைத்தார்; **மீனாட்சியம்மைக்கு** விலையுயர்ந்த அருங்கலன்கள் பல செய்து சாத்தினர்; மேலும் பல தெய்வத் திருப்பணிகளும், பிற அறங்களும் புரிந்துவந்தார்.

அரியநாதர் அடக்கம், நுண்ணறிவு, போர் வன்மை, சொற்றவருமை, மந்திரச் சூழ்ச்சி, அரசியலில் செயலாற்றுந் திறமை, அரசனிடத்து அன்பு, கடவுளிடத்துப் பக்தி, சுற்றந் தழுவல், உண்மை, உழைப்பு, தன்னலம் கருதாமை, வழுவா ஒழுக்கம் முதலிய நல்லியல்புகள் யாவும் ஒருங்குடையராய் இருந்தார். அதனாலேயே உழவுகோல் பிடித்தற்குரிய எளிய குடியிற் றோன்றி வளர்ந்த அவர், செங்கோல் பிடிக்கும் அரசர் பலரை ஆக்கி, அரசு புரிவிக்கும் அருந்திறல் வீரராக விளங்கி, எழுபத்தோராண்டுகள் உயர்பெரும் பதவியில் அமர்ந்து ஒளிபெற வாழ்ந்தார்.

அரும்பொருள்

மரபு - குலம். மற்போர் - ஆயுதம் இன்றி உடல் வன்மையைக் கொண்டு செய்யப்படும் போர். வழுவா ஒழுக்கம் - தவருத நல்லொழுக்கம். அருந்திறல் - அரிய வலிமை. ஒளிபெற - புகழ் பெற.

கேள்விகள்

1. அரியநாதர் யார்? அவர் பிற்காலத்தில் உயர்நிலை எய்தியதற்கு உதவியாயிருந்தவை யாவை?

2. அரியநாதர் ஊர்ப்புறத்தே விளையாடிக் கொண்டிருந்த போது நடந்த சம்பவம் என்ன?

3. அரியநாதருக்கு விஜயநகரத்தில் முதலில் என்ன உத்தியோகம் கிடைத்தது?

4. அரியநாதர் விஜயநகர அரசர் அன்பை எவ்வாறு பெற்ருர்?

5. கிருஷ்ணதேவராயர் அவைப் புலவர்களைக் கேட்ட கணித வினு யாது? அதற்கு அரியநாதர் கூறிய விடை என்ன?

6. 'விசுவநாதன் உயரத்தை எவ்வாறு அளந்தாய்?' என்று வினவிய ராயருக்கு அரியநாதர் என்ன விடை கூறினுர்?

7. அரியநாதர் அரண்மனைச் சேவகம் பெற்றது எவ்வாறு?

8. அரியநாதர் எவ்வாறு மந்திரியானுர்? அரசர் அவருக்குச் செய்த சிறப்புகள் யாவை?

9. அரியநாதர் பாண்டிநாடு அடைந்த வரலாறு என்ன? அவர் அங்குச் செய்த சீர்திருத்தங்களை எழுதுக.

10. அரியநாதர் சொன்ன சொல் தவருதவர் என்பதை விளக்கும் சம்பவம் யாது?

11. அரியநாதர் தம் இனத்தாரை எவ்வாறு ஆதரித்தார்?

12. அரியநாதர் செய்த தெய்வத் திருப்பணிகள் யாவை?

13. அரியநாதர் அரசரை ஆக்கும் அருந்திறல் வீரராக விளங்கினதை விளக்குக.

14. அரியநாதரிடம் அமைந்திருந்த நல்லியல்புகளை எழுதுக.

இலக்கணம்

சில தொடர்கள்

ஒரு சொல் மற்ருெரு சொல்லோடு பொருள் பொருத்தம் உறத் தொடருமாயின், அது **தொடர்** எனப்படும். அத்தொடர் எழுவாய்த்தொடர், விளித்தொடர், பெயரெச்சத் தொடர், வினையெச்சத்தொடர், வினைமுற்றுத்தொடர், இடைச்சொற்ருெடர், உரிச்சொற்ருெடர், அடுக்குத் தொடர் என எட்டு வகைப்படும்.

வையாபுரிப்பிள்ளை பேசுவார்.

இதில் **வையாபுரிப்பிள்ளை** என்பது **எழுவாய்ப்** பொருள் உடையது. அது **பேசுவார்** என்னும் பயனிலையோடு தொடர்ந்துள்ளது. ஆகவே அஃது **எழுவாய்த்தொடர்** எனப்படும். இவ்வாறே பிற தொடர்களிலும் காண்க.

1. பழமொழி எழுந்தது — எழுவாய்த்தொடர்.
2. அன்புடையீர் வருக — விளித்தொடர்.
3. அகப்பட்ட மீன்கள் — பெயரெச்சத்தொடர்.
4. தின்று களிக்கும் — வினையெச்சத்தொடர்.
5. சென்ருர் சேக்கிழார் — வினைமுற்றுத்தொடர்.
6. பிற சமயம் — இடைச்சொல்தொடர்.
7. சாலப்பெருக்கினர் — உரிச்சொல் தொடர்.
8. கண்டு கண்டு — அடுக்குத்தொடர்.

பயிற்சி

1. இப்பாடத்திலிருந்து எழுவாய்த்தொடர், பெயரெச்சத் தொடர், வினையெச்சத்தொடர், அடுக்குத்தொடர்—இவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.

2. அரியநாதருக்கும் அந்தணருக்கும் நடந்த சம்பாஷணையைச் சம்பாஷணை முறையிலேயே அமைத்து எழுதுக.


கோதாவரி
தமிழ் நாடு
கிருஷ்ணை
வடபெண்ணை
அரபிக் கடல்
வங்காளக் குடாக்கடல்
மஹாபலிபுரம்
சோழநாடு
சேரநாடு
காவேரி
உறையூர்
காவிரிப்பூம்பட்டினம்
வஞ்சி
முசிறி
வைகை
மதுரை
தாமிரபரணி
பாண்டிய நாடு
குமரி
கொற்கை
இந்து மஹா சமுத்திரம்

9. சேரன் செங்குட்டுவன்

அமிழ்தினும் இனிய நம் தமிழ்மொழி வழங்கும் நாடு **தமிழ் நாடு** எனவும் **தமிழகம்** எனவும் பெயர் பெறும். இத் தமிழ் நாடு முற்காலத்துச் **சேர நாடு, சோழ நாடு, பாண்டி நாடு** என முப்பெரும் பிரிவுகளாகப் பிரிந்து, முறையே **சேர சோழ பாண்டி** மன்னர்களால் புரக்கப்பட்டு வந்தது. இம் முப்பிரிவுகளுள் சேர நாடு என்பது கருவூர்ப்பிரதேசமும், கோயமுத்தூர் நீலகிரி ஜில்லாக்களும், கொச்சி திருவாங்கூர் சமஸ்தானங்களும், மைசூர் நாட்டின் தென் பகுதியும், மேலைக் கடற்கரைப் பிரதேசமும் அடங்கிய நிலப்பரப்பாகும். **வஞ்சி** என்னும் மாநகர் அந்நாட்டின் கோநகராக விளங்கியது. சேர மன்னர் அப் பெருநகரில் இருந்துகொண்டு சேர நாட்டைப் பன்னெடுங்காலம் சிறப்புறப் புரந்து வந்தனர்.

அரிய கல்வியும் பெரிய செல்வமும் ஒருங்கு எய்தி, அவற்றிற்கு ஏற்றப் பேரறிவும் பெருங்கொடையும் உடையராய், ஓங்கிய தனிக்கோல் ஓச்சி நீங்காத நல்லிசையினை நிறுத்தின முடியுடைத் தமிழரசர் மூவருள்ளும் சேரரே வீரம்பற்றி ஏனை இருவரினும் சிறப்பித்துப் போற்றப்படுவோர் ஆவர். சேர மன்னர் மற்றைச் சோழ பாண்டிய மன்னர்களைப் போலவே படைப்புக் காலந் தொடங்கி மேம்பட்டு வரும் தமிழ்ப் பழங்குடியினர்; முடியும் குடையும் பிறவும் உடைய பேரரசர். இவர்கள் நெடுங்காலம் வரை பிற நாட்டு மன்னர்கட்கு அடங்காது தனியரசு செலுத்தி வந்துள்ளனர். இவர்களுட் பலர் பல காலங்களில் ஏனைச் சோழ பாண்டியர்களையும் வென்று தமிழகம் முழுவதையும் தம் கீழ்ப்படுத்தியுள்ளனர்; சிலர் சில சமயங்களில் வடநாடுகளின் மீதும் படைகொண்டு சென்று, வடவரசர் பலரையும் வென்று அடக்கி அரும் புகழ் பெற்றுள்ளனர்.

இங்ஙனம் வெற்றிச் சிறப்புடைய செல்வச் சேரர்களுள் சற்றேறக்குறைய ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முன்னர் **நெடுஞ்சேரலாதன்** என்னும் பெயரிய பேரரசன் ஒருவன் வீரம் சிறந்து விளங்கினன். அவன் தன் தோள்வலியாலும், வாள்வலியாலும், படைவலியாலும் பிற மன்னரை நடுங்கச்செய்து வந்தனன்; வட நாடுகளின் மீது படையெடுத்துச் சென்று, இமயமலை வரையில் உள்ள அரசர்களை அடக்கி, தன் வெற்றிக்குறியாக இமய மலையில் தன் குடிக்குரிய இலச்சினையாகிய வில்லைப் பொறித்துவிட்டு மீண்டனன். அதுமுதல் அவன் அச் சிறப்புப்பற்றி **இமய வரம்பன்** என்னும் அடைமொழியோடு **இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன்** என அழைக்கப்பட்டனன். அவனுக்கு இரண்டாவது மனைவியின் வயிற்றில் **செங்குட்டுவன், இளங்கோ** என்னும் வரம்மிகு மைந்தர் இருவர் தோன்றி வளமுற வளர்ந்து வந்தனர். அழகும், அறிவும், ஆண்மையும், ஆற்றலும் சிறந்த அம் மைந்தர் இருவரும் மொழிக்கல்வியும் படைக்கல்வியும் பாங்குறப் பயின்று அவற்றில் தேர்ச்சி பெற்று விளங்கினர்.

ஒரு நாள் அவ் விளைஞர் இருவரும் தம் தந்தையாரோடு அரசவையில் ஒருங்கு அமர்ந்திருந்தனர். அவ் வமயம் அங்குப் போந்த நிமித்திகன் ஒருவன் அவ்விருவரையும் மாறிமாறி உற்று நோக்கி, அரசனை விளித்து, 'இவ்விருவருள் இளைஞனை இளங்கோவே அரசனாதற்கு உரியவன்' என்று மொழிந்தனன். அவ்வுரை கேட்ட இளங்கோ, அவனைச் சினந்து, 'மூத்தவன் இருக்க இளையவன் அரசனாதல் முறையன்று' எனக்கூறி, அவ்வவைக்கண் இருந்தோர் அனைவரும் அறியத் துறவறம் ஏற்றுக் கோமனை நீத்துக் குணவாயிற் கோட்டத்து இருந்து, தவ வாழ்க்கை மேற்கொண்டு, **இளங்கோ அடிகள்** எனப் பட்டார்.

நெடுஞ்சேரலாதனுக்குப் பின்னர்ச் செங்குட்டுவன் சேரநாட்டுப் பேரரசனாயினன். இவன் தன் தந்தையோடு

உடனிறந்த தாயின் உருவத்தைச் சிலையில் அமைத்து வழி பட விழைந்தான்; அதன் பொருட்டுக் கல் கொண்டுவர இமயம் சென்ருன்; இடையில் எதிர்ப்பட்ட வேந்தரை வீரமொடு தாக்கி வாகை சூடினுன்; இமயத்தினின்றும் இருங்கல் கொண்டு மீண்டு தன் நகரடைந்து அதில் தன் தாயின் உருவத்தைச் செதுக்கி வைத்து, அதனை வணங்கி வந்தான். என்னே இவன்தன் தாய் அன்பு!

செங்குட்டுவன் சேரர் மரபிற்குச் சிறப்பாக உரிய வீரத்தில் தன் முன்னேர் யாவரினும் விஞ்சி, அருஞ் செயல் பல புரிந்து வீறு பெற்று விளங்கினுன். இவன் ஆக்கம் கண்ட சோழ பாண்டியர்கள் இவன்பால் அழுக் காறுகொண்டு, இவனைப் பொருது அடக்க எண்ணினர். அழுக்காற்றினுல் அறிவிழந்த அவர்கள் பெரும்படை யோடு சென்று **கொங்கர் செங்களம்** என்னும் இடத்தில் செங்குட்டுவனேடு கடும்போர் தொடங்கினர். எலிப் பகை நாகத்தை என்செய்யும்! அப்போரில் செங்குட்டு வனே எளிதில் வெற்றிபெற்ருன். பகைவர் சிறப்பிழந்து சிதறி ஓடினர். பின்னர் இவன், கடலை அரணுகக்கொண்டு அதனிடை இருந்து துன்பிழைத்துவந்த தெவ்வரை, கடலில் தானையைச் செலுத்தி ஆண்மையொடு பொருது அழித்து அழியாப் புகழ் பெற்ருன்; தனக்கும் தன் நண்ப னுன மோரிய மன்னனுக்கும் பகைவனுன **பழையன்** என் னும் குறுநில மன்னனை வெருவரப் பொருது வெற்றி மாலை சூடினுன். தன் மாமனுகிய சோழ மன்னன் இறந் தானுக, அவன் மகன் அரசு நிலை எய்தியதனை ஏற்றுக் கொள்ளாமல் இடர்விளைத்த சோழ மரபினர் ஒன்பதின் மரை **நேரிவாயில்** என்னும் இடத்தில் சேர எதிர்த்து ஒரு பகற்பொழுதில் வென்று, தன் மைத்துனனுக்கு மணிமுடி சூட்டி மகிழ்ந்தான். இங்ஙனம் இச் சேர மன்னன் செய்த பேரமர்கள் கணக்கிலவாகும். இவன் சென்ற போர் தோறும் வெற்றியே பெற்று விறல்மிகு வீரனுக விளங்கினுன்.

இவன் காலத்தில் கற்புக்கடம் பூண்ட பொற்புடைத் தெய்வமாகிய கண்ணகி என்பாள், தன் காதற் கணவனாகிய கோவலனைக் கள்வனெனக் கூறிக் கொல்வித்த பாண்டியனைப் பழிக்குப் பழி வாங்கி, மதுரை மாநகரை மண்டெரியூட்டி, அந் நகரினின்றும் நீங்கி, எங்கும் நில்லாது நிலையாது நெடிது சென்று, சேர நாடு அடைந்து **திருச்செங்குன்றம்** என்னும் மலைமீதேறி, ஒரு வேங்கை மரத்தின் நிழலில் தங்கி, ஆண்டு இருந்தோர் காண, விண்ணினின்றும் இறங்கிய வண்ண விமானத்தில் தெய்வ வடிவில் தோன்றிய கோவலனோடு வானுலகு எய்தினள். தன் காதல் மனைவியாகிய **இருங்கோ வேண்மாளோடும்**, இளவலாகிய இளங்கோவடிகளோடும் மலைவளங்காணச்சென்ற செங்குட்டுவன் அவ் வியத்தகு செய்தியை அம்மலையில் வாழும் வேடுவர் கூறக்கேட்டு இறும்பூது எய்தி, தன் நாடு நோக்கி வந்த பத்தினிக் கடவுளை ஆலயம் எடுத்து வழிபடுதல் வேண்டும் எனத் தன் மனைவி கூற, அவ்வாறே அப் பத்தினியின் படிவம் சமைக்க ஏற்ற சிலையை இமய மலையினின்றும் கொண்டுவரத் துணிந்தான்.

செங்குட்டுவன் குறித்த வேளையில் நால்வகைப்படையும் சூழ்ந்துவர வடதிசை நோக்கிச் சென்றான்; அங்கு இவனது வலியும் வீரமும் அறியாது இவனை எதிர்த்த வடவரசருள் பலரைப் பொருது புறந்தரச் செய்தான்; சிலரைச் சிறுமையுறச் சிறைசெய்தான். பின்னர் இவன் இமயம் சென்று தக்க சிலையைத் தேர்ந்து எடுத்து, அதனைத் தான் சிறை செய்த பகையரசர் முடிமீது ஏற்றி வந்து கங்கையில் நீராட்டித் தூய்மை செய்வித்து, மீண்டு தன் நாட்டை அடைந்தான். அங்கு இவன் பெருங் கோயில் ஒன்று கட்டுவித்து, அதில் வீரபத்தினியின் படிமத்தை நிறுத்தி, அதற்கு முறைப்படி சிறப்புறப் பெருவிழாச் செய்வித்தான். அதனை ஏற்று மகிழ்ந்த அக்கற்புக் கடவுள் யாவரும் காண விண்ணில் தோன்றிக் காட்சி வழங்கி, இவனை வாழ்த்தி மறைந்தனள். அனைவரும்

அப் பத்தினியின் பெருமையை வியந்து சேரனைப் புகழ்ந்தனர்.

சேரன் செங்குட்டுவன் வைதிக மதத்தினன்; சைவ சமயத்தைத் தழுவிச் சிவபெருமானை வழிபட்டு வந்தவன். எனினும், இவன் பிற மதங்கள் பலவற்றையும் ஒப்ப மதித்து ஓம்பி வந்தனன். இவன் ஆட்சிக் காலத்தில் சேர நாட்டின்கண் சமரச சன்மார்க்க நெறி தழைத்து ஓங்கியது. பல்வேறு மதங்களைத் தழுவிய மக்களும் தம்முள் சிறிதும் வேற்றுமையின்றி ஒற்றுமைகொண்டு உயர்வாக வாழ்ந்தனர். இவன்பால் அடற்கரிய கடற்படையும் நிகரற்ற நால்வகை நிலப்படையும் நன்கு அமைந்திருந்தன. **ஐம்பெருங் குழுவினரும், எண்பேராயத்தின**ரும் அரசியலில் தலைமை பூண்டு ஆட்சியைத் திறமையாக நடத்தி வந்தனர். இவன் தனது மரபுக்கு உரிய வில்லோடு, முறையே சோழ பாண்டியர்கட்கு உரிய இலச்சினைகளாகிய புலியையும் மீனையும் ஒருங்கு சேர்த்து அமைக்கப்பெற்ற அரசியல் முத்திரையை உடையவனாக இருந்தான். இதனால் இவன் அக்காலத்துத் தமிழரசர் மூவருள்ளும் தலைமை பெற்று விளங்கினான் என்பது தோன்றுகின்றது.

வரையாது வழங்கும் வன்மை சான்ற செங்குட்டுவன் தமிழ் மொழியின்பால் பற்றுமிக உடையனாய், அம்மொழியிற் புலமை சிறந்த புலவர் பலரைப் பரிவோடு ஆதரித்து வந்தான். அங்ஙனம் இவனால் ஆதரிக்கப்பெற்ற நல்லிசைப் புலவருள் சிறந்தோர் **பரண**ரும் **சாத்தனா**ரும் ஆவர். சாத்தனார் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகிய **மணிமேகலை**யை இயற்றித் தந்து இரும்புகழ் கொண்டவர். பரணர் **பதிற்றுப்பத்து** என்னும் பழைய சங்க நூலிற் செங்குட்டுவனது வீரச் செயல்களையும், வெற்றிப் பெருமையையும், வள்ளற்றன்மையையும் உள்ளவாறே உவந்து புகழ்ந்து பாடியுள்ளார்.

இங்ஙனம் அரசர் நடுங்கும் ஆண்மையும், புலவர் பாடும் புகழும் உடையோனுகிய சேர மன்னன் ஐம்பது ஆண்டுகள் கண்ணை இமைகள் காப்பதுபோன்று குடிமக்களைக் காத்து வந்தான். இவன் ஆட்சியில் மக்கள் இன்பமே நுகர்ந்து இனிது வாழ்ந்தனர். தமிழ் மொழியும் தமிழ் நாடுமே தலைமை பெற்றுச் சிறந்து விளங்கின.

அரும்பொருள்

தனிக்கோல் - ஒப்பற்ற ஆட்சி. ஓச்சி - செலுத்தி. இலச்சினை - முத்திரை. போந்த - வந்த. விளித்து - அழைத்து. கோநகர் - தலைநகர். குணவாயிற் கோட்டம் - வஞ்சி நகரில் இருந்த ஒரு கோவில். சிலை - கல். விறல் - வலிமை. கற்புக் கடம் - கற்புக் கடமை. பொற்பு - அழகு. படிவம் - உருவம். ஓம்பி - காத்து. சமரச சன்மார்க்கம் - எம்மதத்தையும் எவரையும் ஒரு சமமாகக் கருதும் நல்ல மார்க்கம். அடற்கு - அழித்தற்கு. தெவ்வர் - பகைவர். தானை - சேனை. புலமை - அறிவு. பரிவு - அன்பு. **ஐம்பெருங் குழு** - அமைச்சர், புரோகிதர், சேனைத் தலைவர், தூதுவர், சாரணர் என்பவர்களைக் கொண்ட குழு. **எண்பேராயம்** - கணக்கர், கருமவினைஞர், கடைகாப்போர், நகர மக்கள், படைத்தலைவர், யானை வீரர், குதிரை வீரர் என்போர் அடங்கிய குழு.

கேள்விகள்

1. சேர நாடு யாது? அதன் தலைநகரம் எது?
2. தமிழ்வேந்தர் மூவருள்ளும் சேரர்க்குள்ள தனிச் சிறப்பு யாது?
3. சேரர் சிறப்பியல்புகள் யாவை?
4. இளங்கோ துறவறம் மேற்கொண்டது ஏன்?
5. செங்குட்டுவன் தாய் அன்பு எவ்வாறு விளங்குகிறது?
6. தமிழ் நாட்டில் செங்குட்டுவன் செய்த போர்கள் எவை?
7. கொங்கர் செங்களப் போர், நேரிவாயிற் போர்—இவற்றைப் பற்றிக் குறிப்பு எழுதுக.
8. கண்ணகி செய்தியைச் செங்குட்டுவன் அறிந்தது எவ்வாறு?
9. இருங்கோ வேண்மாள் பத்தினிக் கடவுளை எவ்வாறு சிறப்பிக்க வேண்டுமென்று கூறினள்?

10. செங்குட்டுவன் பத்தினிப் படிமம் சமைக்கக் கல்கொண்டு வந்த செய்தியை எழுதுக.

11. செங்குட்டுவன் மதம், ஆட்சி—இவை பற்றிக் குறிப்பு எழுதுக.

12. செங்குட்டுவன் அக்காலத்துத் தமிழரசர் மூவருள்ளும் தலைமை பெற்று விளங்கினன் என்பது எவ்வாறு அறியப் படுகிறது?

இலக்கணம்

தொகைநிலைத் தொடர்கள்

முன் பாடத்தில் எண்வகைத் தொடர்கள் விளக்கப் பட்டன. அவையே அன்றித் தொகைநிலைத் தொடர்களும் உள்ளன. அவற்றுள் நீங்கள் அறிய வேண்டுவன வினைத் தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத் தொகை என்னும் நான்கும் ஆகும்.

(i) வினைப்பகுதிகள் மட்டும் தனித்து நின்று பெயர்ச் சொல்லோடு தொடர்ந்து வருதல் உண்டு. அவை **வினைத்தொகை** எனப்படும்.

செறி இருள். **நிறை** இருள்
விளை நிலம். **சுடு** நீர்.

(ii) பண்பு அடிகள் பெயர்ச்சொல்லோடு தொடர்ந்து வரும். அங்ஙனம் வருவது **பண்புத் தொகை** எனப்படும்.

நுண்ணறிவு. **பழ**மொழி.
இளங்கோ. **பசுந்** தமிழ்.

(iii) உபமானச் சொல் உபமேயச் சொல்லோடு தொடர்ந்து இடையில் உவம உருபு இன்றி வரும். அஃது **உவமைத் தொகை** எனப்படும்.

மதி முகம். பவள வாய்.
பால் மொழி. வாள் விழி.

(iv) பொருளில் தொடர்புடைய சொற்கள் தொடர்ந்து உம்மை பெருது வரும். அஃது **உம்மைத் தொகை** எனப்படும்.

ஆடவர் பெண்டிர் — ஆடவரும் பெண்டிரும்.
இரவு பகல் — இரவும் பகலும்.
காலை மாலை — காலையும் மாலையும்.
தாய் தந்தை — தாயும் தந்தையும்.

பயிற்சி

1. இப்பாடத்தில் வந்துள்ள இடைச்சொற்களை எடுத்து எழுதுக. இப் பாடத்தில் வந்துள்ள தொடர்களை எடுத்து எழுதி, இன்னின்ன தொடர் என்பதையும் விளக்கமாகக் குறிக்க.

2. இப்பாடத்தில் வந்துள்ள தொகைநிலைத் தொடர்களைக் கண்டு குறிக்க.

3. அவற்றைத் தொகாநிலைத் தொடர்களாக மாற்றி எழுதுக.

4. தடித்த சொற்களுக்கு இலக்கணம் கூறுக:

கடலில் **வாழும்** மீன்.
மீன் கடலில் **வாழும்**.

5. வினை வாக்கியத்தைச் சாதாரண வாக்கியமாக மாற்றி எழுதுக.

"தாய்தந்தையரைப்போல நம் பொருட்டுத் தந்நலமற்ற சேவை செய்பவர் வேறு யார்தாம் உளர்?"

6. உடன்பாட்டு வாக்கியமாக மாற்றி எழுதுக.

"இந்த அழகு வேறு எந்தப் பழைய நகரத்திலும் காணுதல் இயலாது"

7. இப்பாடத்தில் உள்ள ஒவ்வொரு பகுதிக்கும் பொருத்தமாகத் தலைப்புக் கொடுக்க.

8. அரசுபெறுதல்—போர்கள்—பத்தினிப் படிமம் சமைத்தல்—மதமும் ஆட்சியும்—சிறப்பு— இக்குறிப்புகளைக்கொண்டு செங்குட்டுவன் வரலாற்றைப் பற்றி ஒரு **கட்டுரை** வரைக.

10. மேட்டூர் அணை

உலகத்தில் கடவுளால் அமைக்கப்பட்டுள்ள இயற்கை அமைப்புகள் யாவும் மக்கள் வாழ்க்கைக்கு உறுதுணை புரியும் பெரும்பயன் உடையனவாகும். எனினும் நெடுங் காலம் வரை அவற்றின் பயன் நன்கு உணரப்படவில்லை. மக்கள் அறிவுப்பெருக்கமும் ஆராய்ச்சித்திறனும் பெற்ற காலந்தொட்டு இயற்கை அமைப்புகளிற் கருத்தைச்

செலுத்தி, அவற்றின் உண்மைகளை உய்த்துணர்ந்து, அவற்றைப் பல வகைகளிலும் பயன் படுத்திக்கொள்ள முயன்றுவருகின்றனர். ஆறுகளில் பெருகி வறிதே கடலில் விழும் வெள்ளப்பெருக்கை அணைகோலித் தகைந்து விளை நிலங்கட்குப் பாய்ச்சிப் பயன்கொள்வதும் அப் பலவகைகளுள் ஒன்ருகும். அங்ஙனம் இதுகாறும் உலகின் பல்வேறு இடங்களிலும் கட்டப்பட்டுள்ள அணைகள் பலவற்றுள்ளும் நம் தமிழ்நாட்டில் உள்ள **மேட்டூர் அணை** சாலப் பெரியதாகும். காவிரி யாற்றின் பெருக்கை ஒழுங்கு படுத்தி, போதிய பாய்ச்சலாதாரம் இல்லாத விளை நிலங்கட்குப் பாசன வசதியை உண்டாக்குவதோடு, தண்ணீர் இல்லாமையால் விளைவின்றி இருக்கும் தரிசு நிலங்களையும் விளை நிலங்களாக மாற்றி அமைத்து, விவசாயத்தைப் பெருக்குவதே இப்பேரணையின் நோக்கமாகும்.

காவிரி யாறு திருச்சிக்கு மேற்கே பத்து மைல் தொலைவில் இரண்டாகப் பிரிந்து, **காவிரி** என்றும் **கொள்ளிடம்** என்றும் இரு வேறு பெயர்களோடு ஓடுகிறது. இக் காவிரியும் கொள்ளிடமும் மழையில்லாத காலங்களில் நீர் வழங்கல் இன்றி நிலங்களை உலர்த்தியும், மழைக் காலங்களில் அளவு கடந்து பெருகும் அதிக வெள்ளப்பெருக்கால் கரைகள் உடைப்புண்டு பாழுறுத்தியும் ஆண்டு தோறும் பெருந் தீங்கு விளைத்து வந்தன. இத் தீங்கைத் தடுக்கக் கருதிய **ஸர். ஆர்தர் காட்டன்** என்பவர் காவிரி நீரோட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்கேற்ற ஓர் அணை இருந்தாலன்றி அஃது இயலாது என அறிந்து, 1836-ஆம் ஆண்டில் கொள்ளிடத்தில் **மேலணை** (Upper Anicut) என்பதோர் அணையைக் கட்டுவித்தார். அதனுல் கொள்ளிடத்திற் பெருகும் அதிக நீர் காவிரியில் திருப்பப்பட்டது. எனினும் இஃது எதிர்பார்த்த அளவு பயன் தரவில்லை. வெள்ளக் காலங்களில் காவிரியில் அதிக நீர் பெருகி அதன் கரைகளை உடைத்து அழிவு செய்யத் தொடங்கியது. அதனைத் தடுக்க 1845-ஆம் ஆண்டில் காவிரியின்

குறுக்கே மற்ருேர் அணை கட்டப்பட்டது. கொள்ளிட நதிப் பாசனத்துக்குப் பயன்படுமாறு 1836-ஆம் ஆண்டில் மேலணைக்கு எழுபது மைல்கள் கீழே வேருேர் அணையும் அமைக்கப்பட்டது.

இங்ஙனம் நாளடைவில் உண்டான பல அமைப்புகளால் முன்பிருந்த குறைகள் ஓரளவு குறைக்கப்பட்டனவாயினும், கருதிய அளவு பயன் விளையவில்லை. தஞ்சை ஜில்லா நலம் பெறுதற்குரிய முறையில் காவிரியின் நீரோட்டம் ஒழுங்குபட வேண்டுமாயின், அதன் மேற்பகுதியில் ஒரு பெரிய தேக்கம் அமைக்கப்படவேண்டுவது இன்றியமையாதது என்பதை முன்னமே உணர்ந்திருந்த அரசாங்கத்தார் அதனை அமைக்க முன்வந்தனர்.

இப் பேரணையைக் கட்டுவதற்கு அதுகாறும் வேறெங்கும் பயன்படுத்தப்படாத புதியனவும் பெரியனவுமாகிய பல இயந்திரங்கள் மேனுடுகளினின்றும் வருவிக்கப்பட்டன. அணை அமைப்புத் துறையில் அறிவும் அனுபவமும் சான்ற இஞ்சினீயர் பலர் உதவிக்கு அழைக்கப்பட்டனர். மேட்டூர் ஓர் அழகிய சிறு நகரமாக மாறியது. சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சி மின்சார நிலையத்தினின்றும் மின்சாரம் கொண்டுவரப்பட்டது. எங்கும் விளக்குகளும் நீர்ப்போக்குகளும் பிறவும் சிறக்க அமைக்கப்பட்டன. போக்குவரவுக்குரிய சாதனங்களும் உற்பத்திச்சாலைகளும் பல அமைக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான வேலை செய்வோரும் நூற்றுக்கணக்கான மேற்பார்ப்போரும் நியமிக்கப்பெற்றனர். அணை வேலை சம்பந்தமான கணக்கு வழக்குகளை வைத்தற்கும், அவற்றைக் கவனிப்போர் இருந்து வேலை செய்தற்குமாகப் பல காரியாலயங்களும், அங்கு வேலை செய்வோர் தங்கி வசித்தற்குரிய இடங்களும் அமைக்கப்பெற்றன. அணை கட்டி முடிய ஆறு வருடங்கள் ஆயின; ஆறு கோடியே எண்பது லட்சம் ரூபாய் செலவாயிற்று. நன்கு எண்ணித் தொடங்கப்பட்டு, இடையில் எவ்வித ஊறும் இன்றி இனிது

முற்றுப்பெற்ற இப்பேரணை, இன்று உலக மக்கள் அனைவருடைய கருத்தையும் ஒருங்கு ஈர்க்கும் உயர்வுடையதாக விளங்குகின்றது.

இவ்வணை ஒரு மைல் இருபது அடி நீளமுள்ளது. இதனால் உண்டாக்கப்பட்ட நீர்த்தேக்கம் அறுபது சதுர மைல் பரவியுள்ளது. அது நதிக்கு முப்பத்து மூன்று மைல் எதிர்த்துப் பரவி இருக்கின்றது. இவ்வணை கருங்கற் பாறைகளை உடைத்துச் செய்த சல்லிகளோடு சிமிட்டிச் சுண்ணத்தைக் கூட்டிச் செய்யப்பட்ட பெரிய அச்சுப் பாறைகளால் அமைக்கப்பட்டுள்ளது. இதில் நீர்ப் போக்கை ஒழுங்குபடுத்தப் பல அமைப்புகள் உள்ளன. தேக்கம் நிரம்பி வழியும் பொழுது நீர் பக்கத்தில் ஓடுவதற்குரிய வடிமடை ஒன்று கடல் மட்டத்திற்கு 791 அடி உயரத்தில் அமைக்கப்பட்டு உள்ளது. இதில் மூன்று விதமான மதகுகள் அமைக்கப்பட்டுள்ளன. அணையின் உயரம் கடல் மட்டத்திற்கு 790 அடிக்குமேல் இருப்பதால் அதிகமான நீரை வெளிப்படுத்தும் மூன்றுவது மதகு வரிசை கடல் மட்டத்திற்கு 770 அடி உயரத்தில் அமைந்திருக்கின்றன. காவிரியில் வெள்ளம் மிகுதியாகப் பெருகும் காலங்களில் இவற்றினைத் திறந்து மிக்க நீரை வெளிப்படுத்துவர். இம்மதகு வரிசைக்குக் கீழே கடல் மட்டத்திற்கு 720 அடி உயரத்தில் **மேல் மதகு வரிசை** உள்ளது. தேக்கத்தில் நீர் குறைந்து நீர்மட்டம் 770 அடியினும் தாழ்வுறின் தஞ்சை ஜில்லா விளை நிலங்களின் பாசனத்திற்காக இவ்விரண்டாவதாகிய மேல் மதகு வரிசை திறக்கப்படும். இதற்கும் கீழே கடல் மட்டத்திற்கு 670 அடி உயரத்தில் முதலாவதாகிய **கீழ் மதகு வரிசை** அமைக்கப்பட்டுள்ளது. எதிர்பாராத வகையில் எப்பொழுதேனும் பருவமழை முற்றிலும் பொய்த்து, அதனால் தேக்கத்தின் நீர்மட்டம் 720 அடியினும் இறங்கிவிடுமாயின், அப்பொழுது நிலங்கட்கு நீர் கிடைக்குமாறு செய்தற்பொருட்டு இக் கீழ் மதகு வரிசையை அமைத்துள்

ளனர். ஆயின், இம்மதகு வரிசை திறக்கப்படுதற்குரிய நிலைமை சாதாரண காலங்களில் அனேகமாக உண்டாகா தெனக் கருதுகின்றனர். ஏனெனின், தேக்கத்தின் நீர் மட்டம் 720 அடியிற் குறையாதெனக் கணக்கெடுக்கப் பட்டுள்ளது. எல்லா மதகுகளிலும் உள்ள அடைப்புக் கதவுகள் யாவும் மின்சார விசையினாலேயே இயக்கப்படு வனவாக அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வணையை அவ்வப்போது சோதனை செய்வதற் கும், இதினின்றும் கசியும் கசிவுநீர் கழிதற்குமாக இதன் நடுவில் ஒரு சுரங்க வழி அமைக்கப்பட்டுள்ளது. இவ் வணையினின்றும் பல வாய்க்கால்கள் பல்வேறு இடங் கட்கும் செல்கின்றன. இத் தேக்கத்தின் நீர் அவ் வாய்க் கால்களின் வழியாகவே பலவேறு இடங்கட்கும் சென்று பாய்கின்றது. அவற்றுள் **கல்லணைக் கால்வாய்** என்பது முதன்மையானது. அதனின்றும் பல வாய்க்கால்கள் வெட்டப்பட்டு, அவற்றின் மூலமாகப் **பட்டுக்கோட்டைத்** தாலுக்கா நிலங்கட்கு நீர் கொண்டு செல்லப்படுகிறது.

மேட்டூர் அணை உலகத்தில் இதுவரை கட்டப்பட் டுள்ள எல்லா அணைகளினும் மிக்க நீரைத் தேக்கி யுள்ளது. எனவே, இஃது உலகிலேயே மிகப் பெரிய அணையாகக் கூறப்படுகிறது. இந்த அணையினால் தமிழ் நாடு அடைந்துள்ள நன்மைகள் பல. மேலும் பல பயன் கள் இதனால் எதிர்பார்க்கப்படுகின்றன. இப் பேரணையி னால் சிறப்பாகத் தஞ்சை ஜில்லாவிலும், பொதுவாக வேறு சில இடங்களிலும் பல்லாயிரம் ஏக்கர் பரப்புள்ள நிலங்கள் விளைவுமிக்க வள நிலங்களாகச் செய்யப்பட்டு வருகின்றன; அதனால் உழவுத் தொழில் பெருகிவரு கின்றது. இதினின்றும் உண்டாக்கப்படும் மின்சாரம் நாடெங்கும் கொண்டுபோகப்பட்டு விளக்குகள் அமைக்க வும், இயந்திரங்களை இயக்கவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. சேலத்தினின்றும் மேட்டூருக்கு இருப்புப் பாதை அமைக்கப்பட்டுள்ளது. ஈரோடிலிருந்து மேட்

டார் பஸ்கள் செல்லுதற்குரிய கற்சாலை உள்ளது. இதில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரச் சக்தியின் உதவியைக் கொண்டும், அமைந்துள்ள போக்குவரவு வசதியைப் பயன்படுத்திக்கொண்டும், இங்குப் பல பெருந்தொழில்களைத் தொடங்கி விருத்தி செய்யலாமென்று, பஞ்சு ஆலைகளும், பட்டு உற்பத்திச்சாலைகளும், காகிதத் தொழில் நிலயங்களும், பலவகைச் சாயத் தொழிற்களரிகளும் அமைத்து நடத்துதற்கு வேண்டும் வசதிகள் யாவும் இங்கு உள்ளனவென்றும் அறிஞர் கருதுகின்றனர். இவ் வசதிகள் தக்க முறையிற் பயன் படுத்திக்கொள்ளப்படுமேல், தமிழ்நாடு பல துறைகளிலும் முன்னேற்றம் அடைந்து சிறந்து விளங்கும் என்பது ஒருதலை. எனவே, தமிழ்மக்கள் இவ்வணையின் பெயரைக் கூறிப் பெருமையடையும் அவ்வளவோடு அமைந்துவிடாமல் இதனை நன்கு பயன்படுத்திக்கொண்டு உயர்வுற முயல்வார்களாக.

அரும்பொருள்

அணைகோலி - அணையைக்கட்டி. தகைந்து - தடுத்து. ஈர்க்கும் - கவரும். ஒருதலை - நிச்சயம்.

கேள்விகள்

1. மேட்டூர் அணை கட்டப்பட்டதன் நோக்கம் என்ன?
2. காவிரி யாறு இடையறாத நீர்ப்பெருக்கினை யுடையதாயிருப்பது எதனால்?
3. தஞ்சை ஜில்லாவின் விவசாயத் தொழில் இடர்ப்பாட்டுக்கு உள்ளாயிருந்தது ஏன்?
4. கொள்ளிடத்திலும் காவிரியிலும் கட்டப்பட்டுள்ள அணைகள் யாவை? அவை ஏன் கட்டப்பட்டன?
5. காவிரி யாற்றில் தேக்கம் அமைக்க வேண்டுவது இன்றியமையாதது ஆனது எவ்வாறு?
6. தேக்கம் அமைக்கும் வேலை தொடங்கப்படுவதற்கு இடையூறாக ஏற்பட்டவை எவை? அவை எங்ஙனம் நீக்கப்பட்டன?
7. மேட்டூர் அணை கட்டப்பட்ட செய்திகளைச் சுருக்கி எழுதுக.

8. மேட்டூர் அணையின் அமைப்பை விளக்குக.

9. மேட்டூர் அணையில் எத்தனை மதகு வரிசைகள் அமைக்கப் பட்டுள்ளன? அவை எதற்காக அமைக்கப்பட்டுள்ளன?

10. சுரங்க வழியின் பயன் என்ன?

11. மேட்டூர் அணையினால் அடைதற்குரிய நன்மைகள் எவை?

இலக்கணம்

தொடர் இலக்கணம் கூறுதல்

தொடர் இலக்கணம் கூறும்போது ஒரு சொற்றொடரில் இரண்டிரண்டு சொற்களாக எடுத்துக்கொள்ள வேண்டும். அவ்விரண்டு சொற்களுள் முதலில் உள்ள சொல்லின் பெயரால் அத் தொடர்க்குப் பெயர் கூறவேண்டும்.

உ - ம்:

வந்த கந்தன் படித்து முடித்தான்.

இதனை, (1) வந்த கந்தன் (2) கந்தன் படித்து (3) படித்து முடித்தான்—என்று இவ்வாறு பிரித்துக் கொண்ட பிறகே, தொடர் இலக்கணம் கூறவேண்டும்.

(1) **வந்த கந்தன்**—பெயரெச்சத்தொடர்.

(2) **கந்தன் படித்து**—எழுவாய்த்தொடர்.

(3) **படித்து முடித்தான்**—வினையெச்சத்தொடர்.

பயிற்சி

1. காவிரிப் போக்கு—அணையின் இன்றியமையாமை—அணையின் அமைப்பு—சிறப்பு — பயன் — இக் குறிப்புகளைக் கொண்டு மேட்டூர் அணையைப்பற்றி ஒரு **கட்டுரை** வரைக.

2. இப்பாடத்தில் உள்ள ஒவ்வொரு பகுதிக்கும் **தலைப்புக்** கொடுக்க.

3. இப்பாடத்தில் உள்ள செய்வினை வாக்கியங்களைச் செயப்பாட்டு வினை வாக்கியங்களாக மாற்றுக.

4. எதிர்மறை வாக்கியங்களை உடன்பாட்டு வாக்கியங்களாக மாற்றுக.

5. இப்பாடத்தில் வந்துள்ள தொகை நிலைத்தொடர், தொகா நிலைத் தொடர்களை எடுத்து எழுதுக.

6. அவற்றுள் ஒவ்வொன்றுக்கும் **தொடர் இலக்கணம்** கூறுக.

11. திருவள்ளுவர்

(சொற் பொழிவு) *

தமிழ் நாடும் தமிழ் மொழியும் முயன்ற அருந்தவப் பயன் காரணமாக, ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டு கட்கு முன்னர், நமது நாட்டில் திரு அவதாரம் செய் தருளிய **வள்ளுவர்** என்னும் புண்ணிய மூர்த்தியை நினைவுகூரும் பொருட்டு நாம் இன்று கூடியிருக்கின்றோம். இவரது அவதார நிகழ்ச்சியைப் போன்று அத்துணைச் சிறப்புடையதாகப் பிறிதொரு நிகழ்ச்சி தமிழ் மொழிச் சரிதத்தில் உளதென்று கருதுவார் பெரும்பாலும் இல்லை. தமிழ் அணங்கு தலை எடுத்து அவள் மக்களாகிய நமக்கு இன்முகம் காட்டி நிற்பது இத்திரு அவதாரத்தின் பயன் கொண்டே ஆகும். தமிழ் நாடு புண்ணிய பூமியாகக் கொள்ளப்படும் பெருமை வாய்ந்தது இவ்வவதாரத்தின் பெருமை பற்றியே ஆகும். தமிழ் மக்களாகிய நாம் கௌரவம் உடையதோர் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் என்று எண்ணிடப் பெற்று வருவதற்கும் இவ்வவதாரமே காரணம் ஆகும். இங்ஙனமாகத் திரு அவதாரம் செய் தருளிய மஹா புருஷனை அடிக்கடி நினைவில் வைத்துப் போற்றிப் பாராட்ட வேண்டுவது தமிழ் மக்களாகிய நமக்கு உரிமையும் கடமையும் ஆகின்றது...........

ஒரு காலத்தே நம் தமிழ் மக்கள் எங்கணும் சென் றுலவி வாணிகம் செய்து தமிழ் நாட்டுப் பொருள்களை உலகிற்கெல்லாம் உதவி வந்தனர். நுகர்ச்சிப் பொருள் களே அன்றி அறிவுப் பொருளும் உலகம் அனைத்திற்கும் கொடுத்து உதவும் அத்துணை அளவாக நம்மிடம் இருந் தது. நாம் அவ்வறிவுப் பொருளை மேன்மேலும் விருத்தி

---

* இது, 'வள்ளுவர் திருநாள்' அன்று திருநெல்வேலி மாண வர் கழகத்திற் செய்த சொற்பொழிவு. சொற்பொழிவாளர் - சென்னை, பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவர் **இராவ் சாஹிப் S. வையாபுரிப் பிள்ளை**, பி.ஏ., பி.எல்., அவர்கள்.

செய்யாது வறிதே வாழ்ந்து எல்லாவற்றையும் இழந்தோம்.........தமிழ் நாட்டில் அஞ்ஞான இருள் பரந்து நிலைத்திருக்கின்றது. இவ் வஞ்ஞான இருளில் உழன்று



இராவ்சாஹிப் திரு. S. வையாபுரிப் பிள்ளை அவர்கள், B.A.,B.L.

தத்தளிக்கும் நமக்கும் உய்தி உண்டு என்பதை உணர்த்தி, நம்மை நன்னெறி உய்க்கும் ஒரு தெய்வ ஒளியை நாம் அடிக்கடி நோக்கி நெறிப்படுதல் வேண்டும் அன்றோ?

இவ் வியல்பையுடைய தெய்வ ஒளி ஒன்றை நோக்கி நெறிப்படுவதற்கே நாம் இன்று ஒருங்கு கூடி இருக்கின்றோம். தமிழ் நாடு அனைத்தும் இத்தெய்வ ஒளியை இன்று தரிசித்து நன்னெறிப் படுமாறு இறைவன் அருள் புரிவாராக!

இத் தெய்வப் பேரொளி தோன்றிய காலம் இற்றைக்குச் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் என்று கூறுவர்......இப்பூவுலகில் உள்ளவர்க்கு நிலவும் மகிழ்ச்சியும் ஒருங்கு தந்து விளங்கும் இயற்கைத் திங்கள் பூமியினின்றும் ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ளது. எவ்வாறு, எப்பொழுது அது தோன்றியது? அதன் சரித்திரம் யாது? இவை போன்ற கேள்விகளுக்கு எல்லாம் விடை கிடைப்பது அரிது...... ஆதலின், நாம் பாற்கடலில் அம்புலி தோன்றியதாகப் பாட்டு இசைக்கின்றோம்; அதன் கண் முயல் இருப்பதாக வியந்து உரைக்கின்றோம்; அதனை இராகு கேதுக்கள் விழுங்கி உமிழ்வதாகக் கதை விளம்புகின்றோம். இங்ஙனமாகப் புனைந்து உரைத்துக் கொள்வதன்றி உண்மை உணர்ந்து கொள்ளுதல் கடினமாகின்றது. இது போலவே, இன்று நாம் தொழுது வாழ்த்தும் 'வள்ளுவர்' என்னும் தெய்வ ஒளி வீசும் திங்களின் சரித்திரமும் நம்மால் அறிதற்கு அரியதாய் இருக்கின்றது. எத்தனை கட்டுக் கதைகள் புனையப்பட்டு உள்ளன! 'வள்ளுவர்' என்ற பெயரால் அவர் 'புலைச்சி மகன்' என்ற கதை பிறந்தது. புலைக்குலத்தானுக்கு இத்துணைப் பேரறிவும் பெருங் கல்வியும் இருத்தல் இயல்பன்று என்பதை எண்ணி, புலைச்சிக்கும் பிராமணன் ஒருவனுக்கும் அவர் பிறந்ததாகக் கதை எழுந்தது. சிலர் 'வள்ளுவர்' என்ற சொல்லுக்கு 'வண்மையுடையார்' என்ற பொருள் கூறி, இவ்விடர்க்கடலைக் கடக்கத் தலைப்பட்டனர்......

திருவள்ளுவர் **திருக்குறள்** செய்தார் என்பதை அனைவரும் அறிவர்......ஒரு நூல் சிறப்பு வாய்ந்தது எனின்,

அதன் ஆசிரியனது உள்ளத்தினின்றும் - அறிவினின்றும் - அது பிறந்திருத்தல் வேண்டும். ஆசிரியன் தன்னையே தனது நூலில் அமைத்து விடுகின்றான். ஆசிரியனது உயிர் நாடி அவனது நூலிலேயே துடி துடித்துக்கொண்டு இருப்பதாகும். ஆசிரியனுடைய விசேட ஆத்ம குணங்கள் எல்லாம் நூலின் அகத்தும் காணப்படுதல் உறுதி. நூலிற் கூறுகின்ற வாழ்க்கை நிலையில், ஆசிரியன் தானே வாழ்கின்றான்; தன் நுண்ணறிவுகொண்டு விஷயங்களின் உண்மையை நுனித்து உணருகின்றான்; தனது பேராற்றலால் அவ்விஷயங்களின் பொருளைக் கூர்ந்து உணர்ந்து, தனது அரிய புலமைத் திறத்தால் அவற்றைப் பிறரும் கூர்ந்து உணரச் செய்கின்றான். சுருங்கக் கூறின், ஆசிரியனது உயிர் வாழ்வின் சாராம்சமே அவன் இயற்றிய பெரு நூல் எனத் தகும்......ஓர் உயரிய நூல் எல்லா வகையாலும் உயர்ந்தோன் ஒருவனது உள்ளத்திலிருந்தே தோன்றுதல் கூடும். நூலை நன்கு உணர்வதன் மூலமாகத் தான் ஆசிரியனை நாம் அறிதல் கூடும். தினந்தோறும் நம்முடன் பழகி வருபவர் குணங்களும், நோக்கமுறையும், பெருமையும் சிறுமையும், அவர்கள் பேசும் குரலும் நமக்குத் தெரிவது போலவே - சிறந்த ஓர் நூலாசிரியனது நூலை நாம் கற்கக் கற்க, அவ்வாசிரியனது குணப்பெருமை, அவன் உலகினை நோக்கும் முறை, அவனுடைய குறை குற்றங்கள், அவன் பேசும் முறை - இவை யாவும் நமக்குப் புலனாகின்றன. இவ்வண்ணமாக வள்ளுவரைத் தமிழ் மக்கள் நன்கு அறிந்து கொள்ளலாம். அவரது வரலாறு அவர் இயற்றியுள்ள ஒப்பற்ற திருக்குறள் நூலில் விரிவாய் அமைந்திருக்கின்றது. திங்கள் வேறு, அதன் ஒளி மண்டிலம் வேறு என்று நாம் கருதுவதில்லை. இங்ஙனமே, வள்ளுவர் வேறு, அவரது தெய்வத் திருக்குறள் வேறு என்பது இல்லை. **திருக்குறள் என்பதுதான் திருவள்ளுவர்.** ஆகவே, விரிவான சரித்திரம் ஒன்று வேண்டும் என்ற தேவையே இல்லை......

நீர் நிறைந்த ஊருணி தன்னை அடைந்தார்க்கு எல்லாம் வேற்றுமை இன்றி நீரை உதவி இன்பம் அளிக்கின்றது ; இவ்வண்ணமே பேரறிவாளனது பெருஞ் செல்வமும் நெடிது நின்று, எல்லார்க்கும் வேண்டுவன தப்பாது உதவி இன்பம் அளிக்கின்றது. உலகில் பேரறிவாளன் என்று அழைப்பதற்கு வள்ளுவரைக் காட்டிலும் சிறந்த உரிமை உடையார் அரியர். இவர் தந்தருளிய திருக்குறள் நூலைக் காட்டினும் பெரியதொரு செல்வம் உளதெனல் அரிதாம். செல்வத்துள் செல்வமாகிய இத் திருக்குறள் - நீர் நிறைந்த ஊருணியை ஒத்து நலம் பயக்கின்றது. அறிவுத் தாகத்தால் வருந்துவோர் அனைவரும் திருக்குறள் நூலால் அறிவு உதவப் பெற்று இன்பம் எய்துதல் கூடும். இல்லறத்தார், துறவிகள், அரசர்கள், குடிகள், பகைவர்கள், நண்பர்கள் இவ்வனைவர்க்கும் அறிவுப் பொருளை இப்பெரு நூல் உதவுகின்றது. சுருங்க உரைக்கு மிடத்து, பல்வேறு வகைப்பட்ட வாழ்க்கை நிலையில் உள்ளவர்க்கும் சிறந்த அறிவுரைக் களஞ்சியமாக விளங்குவது நம் தெய்வப் புலமைத் திருவள்ளுவர் அருளிய தெய்விகப் பெரு நூல் **திருக்குறள்** ஆகும்.

அரும்பொருள்

முயன்ற - செய்த. அத்துணை - அவ்வளவு. அணங்கு - தெய்வ மகள். எண்ணிட - மதிக்க. நுகர்ச்சி - அனுபவிக்கும் (உண்ணும் உடுக்கும்). வறிதே - வீணே. அஞ்ஞானம் - அறியாமை. உழன்று - துன்புற்று. உய்தி - பிழைப்பு. உய்க்கும் - செலுத்தும். நெறி - நல்வழி. ஒழுங்கு - ஒன்றுய். அம்புலி - சந்திரன். வியந்து - அதிசயித்து. புனைந்து - கட்டி. புலைச்சி - பறைச்சி. இடர்க்கடல் - துன்பக்கடல், **உருவகம்**. தலைப்பட்டனர் - முயன்றனர். துடிதுடித்து - **இரட்டைக்கிளவி**. நுனித்து - ஆராய்ந்து. சாராம்சம் - சத்து. ஊருணி—ஊர் + உணி, ஊரார் உண்ணத்தக்க நீரையுடைய கிணறு. நெடிது - நீண்டகாலம்.

கேள்விகள்

1. திருவள்ளுவர் அவதாரத்தால் பெருமை அடைந்தவர் யாவர்? பெருமை பெற்றவை எவை?

2. பழந்தமிழர் எந்நிலையில் இருந்தனர்? இன்றுள்ள நாம் எப்படி இருக்கின்றோம்?

3. திங்களைப்பற்றி எழுந்த கதைகள் எவை? அவை ஏன் எழுந்தன?

4. வள்ளுவரைப்பற்றி எழுந்த கதைகள் யாவை?

5. ஒரு நூல் சிறப்புப் பெறக் காரணம் யாது?

6. நூலாசிரியன் வரலாறு அவன் செய்த நூலில் உள்ளது.—இக்கூற்று எங்ஙனம் பொருந்தும்?

7. ஊருணியின் இயல்பு என்ன?

8. பேரறிவாளன் செல்வம் எத்தன்மையது?

9. ஊருணிக்கும் திருக்குறளுக்கும் உள்ள ஒற்றுமை யாது?

10. திருக்குறள் எவர்க்கு அறிவுப் பொருளை உதவுகின்றது?

11. இப்பாடத்தால் திருவள்ளுவரைப்பற்றி நீ அறியும் செய்தி யாது?

12. திருக்குறளைப்பற்றி நீ யாது அறிகின்றாய்?

இடைச்சொல்

இடைச் சொல்லைப்பற்றி முன் புத்தகத்தில் ஓரளவு கூறப்பட்டது அன்றோ? இடைச்சொல் என்பது பெயர்ச் சொல், வினைச்சொற்களைப் போலத் தனித்து வராமல் அவற்றைச் சார்ந்து வரும் என்பதும் வேற்றுமை உருபுகள், உவமை உருபுகள், இடைநிலை, சாரியை, விகுதி, சுட்டு, வினா இவை யாவும் இடைச் சொற்களே என்பதும் முன் புத்தகத்திலேயே கூறப்பட்டன. இவையே அன்றி ஏ, உம், அந்தோ, ஐயோ, அம்மா, மற்று, பிற என்பனவும் இடைச்சொற்களே ஆகும்.

சேரரே சிறப்பித்துப் போற்றப்படுவோர் — **ஏ.**

ஆணும் அன்று; பெண்ணும் அன்று — **உம்.**

அந்தோ பரிதாபம்! — **அந்தோ.**

ஐயோ இழந்தேன்! — **ஐயோ.**

அம்மா பெரிது! — **அம்மா.**

மற்று ஒன்று — **மற்று.**

பிற பொருள் — **பிற.**

பயிற்சி

1. இப்பாடத்தில் வந்துள்ள வடசொற்களை எடுத்து எழுதுக.

2. அடுக்குத் தொடர்களை எடுத்து எழுதுக.

3. இரண்டாவது மூன்ருவது பகுதிகளில் உள்ள பண்புத் தொகை, வேற்றுமைத் தொகைகளை எடுத்து எழுதுக.

4. நான்காவது பகுதியில் உள்ள தொழிற்பெயர்களையும், பெயரெச்சத் தொடர், வினையெச்சத் தொடர்களையும் எடுத்து எழுதுக.

5. தன்வினை வாக்கியங்களைப் பிறவினை வாக்கியங்களாக மாற்றுக.

6. **புலைச்சி** என்பதற்கு ஆண்பாலும், பிராமணன் என்பதற்குப் பெண்பாலும் கூறுக.

7. மூன்ருவது பகுதியில் உள்ள ஒரு பொருட் சொற்களை எடுத்து எழுதுக.

8. எதிர்ப்பதம் கூறுக:
   அஞ்ஞானம், இருள், புண்ணியம், கௌரவம், அப்பால், இழிநிலை, கனவு.

9. இடம் அறிந்து ஏற்ற நிறுத்தக் குறிகளை இடுக:
   அந்தோ அவள் வழியில் பட்ட இன்னல்கள் பல சில இடங்களில் நோய்வாய்ப்பட்டுக் கிடந்தாள் ஆனல் கடவுளை நம்பி நற்காரியத்தின் பொருட்டுச் சென்ற அம்மங்கை நல்லாளுக்குச் சேவை செய்தோர் பலர் ஆவர் அவளைத் திருடி என்று பழித்துத் துரத்தியோர் பலராவர்.

10. இச்சொற்பொழிவைப் படித்து, வள்ளுவர் பிறப்பும் வளர்ப்பும்—புலமைச்சிறப்பு—இயற்றிய நூலும் அதன் பெருமையும்—நமது கடமை—இக்குறிப்புகளைக் கொண்டு ஒரு **கட்டுரை** வரைக.

12. புதைந்த நகரங்கள்

உலகத்தின் பல பகுதிகளில் வாழ்ந்த மக்கள் தனித்தும் தம்முட் கலந்தும் பலவகை நாகரிகங்களை வளர்த்து வந்தனர். பயிர்த்தொழிலும் வாணிபமும் கற்ற மக்கள் ஆற்று ஓரங்களில் அழகிய நகரங்களை அமைத்துக் கொண்டு வாழ்ந்தனர். அவர்தம் நகரங்கள் பல ஆற்று வெள்ளத்திற்கு இரையாயின. கடற்கரையில் வாழ்ந்த மக்களுடைய நகரங்கள் பல கடல் கோளுக்கு இரையாயின. இவ்வாபத்து நிகழ்ந்த காலங்களில் அங்கு இருந்த பண்டை மக்கள் தம் பொருள்களை விட்டு ஓடி விடுதல் இயல்பே அன்றோ? வேறு சில நகரங்கள் வேற்று மக்கள் படையெடுப்புக்கு அஞ்சித் துறக்கப்பட்டன. பல நகரங்கள் பகைவர் படையெழுச்சியால் பாழாயின. பல நகரங்கள் எரிமலைக் கொந்தளிப்பாலும் மண் மாரியாலும் அழிந்தன. இங்ஙனம் பல்வேறு காரணங்களால் அப் பண்டை மக்கள் வாழ்ந்து வந்த கிராமங்களும் நகரங்களும் கை விடப்பட்டு, நாளடைவில் மண் மூடுபட்டன. பல நகரங்கள் கடலுள் ஆழ்ந்தன. பல ஆற்றங் கரைகளின் அடியில் புதையுண்டன. சம வெளிகளில் பல மேடிட்டுக் கிடக்கின்றன.

இவ்வாறு மண் மேடிட்ட இடங்களை அகழ்ந்து பார்த்து அங்குக் காணப்படும் பல திறப்பட்ட பொருள்களை ஆய்ந்து, அவற்றைப் பற்றிய உண்மைச் செய்திகளையும் அவற்றைப் பயன்படுத்திய பண்டை மக்கள் நாகரிகத்தினையும் கண்டறியும் முயற்சியே **புதை பொருள் ஆராய்ச்சி** எனப்படும். 'சுருங்கக் கூறின், பல பொருள்களைச் செய்து அவற்றின் வாயிலாகத் தமது நாகரிகத்தைத் தோற்றுவித்த பழங்கால மக்களது வரலாற்றைக் கண்டறிவதே புதை பொருள் ஆராய்ச்சி ஆகும்' என்று **ஸ்டான்லி காஸன்** என்னும் அறிஞர் அறைந்துள்ளார். இவ்வாராய்ச்சிக்குப் பெருந்துணை புரிவன மண்டை ஓட்டைச்

சோதிக்கும் கலை, விலங்குகளின் எலும்புகளைப் பரீக்ஷிக்கும் கலை, நில நூல் அறிவு முதலியன ஆகும்.

இத்தகைய ஆராய்ச்சிக்கூடம் இந்திய அரசாங்கத்தார் ஏற்படுத்தியுள்ளனர். அதைச் சேர்ந்த அறிஞர் பலர் நமது நாட்டில் உள்ள மண் மேடுகளைச் சோதித்துப் பல அற்புத நகரங்கள் புதையுண்டு கிடத்தலைக் கண்டறிந்தனர். அவற்றுள் மிக்க சிறப்புக்கு உரியவை இரண்டு. ஒன்று சிந்து மண்டிலத்தைச் சேர்ந்த **மொஹஞ்சொ-தரோ** என்பது; மற்றொன்று பஞ்சாப் மண்டிலத்தைச் சேர்ந்த **ஹரப்பா** என்பது. இவ்விரு நகரங்களும் சிந்து நதியாலும் அதன் உப நதிகளாலும் வளம்பெற்று இருந்தவை.

மொஹெஞ்சொ-தரோ நகரம் ஒன்றே அழிக்கப்படாமல் புதையுண்டு கிடந்தது. ஹரப்பா நகரத்தின் பல பகுதிகள் பொது மக்களாலும் புகை வண்டிப் பாதை அமைத்தவராலும் அழிக்கப்பட்டுவிட்டன. எனினும், ஹரப்பாவில் நடைபெற்ற ஆராய்ச்சியிற் கிடைத்த பொருள்களும் மொஹெஞ்சொ-தரோவிற் கிடைத்த பொருள்களும் ஒரே நாகரிகத்தையும் ஏறக்குறைய ஒரே காலத்தையும் உணர்த்துகின்றன. அறிஞர் நடத்திய ஆராய்ச்சியிலிருந்து வெளியான பல உண்மைகளை ஈண்டுச் சுருங்கக் காண்போம்.

கட்டிடங்கள்:—இவை இரண்டு அறைகளைக்கொண்ட வீடுகள் முதல் பெரிய மாளிகை ஈருகப் பல வகையினவாகக் காணப்படுகின்றன. மாளிகையின் முன்புற வெளி 85 அடி; பின்புற வெளி 97 அடி; பெரிய கூடம், செங்கல் பதித்த மேன் மாடம், மேலிருந்து கழிநீர் இறங்கச் சிறிய வழிகள், சுவருக்குள் பதிவுபெற்ற குழைகள், கழிநீரைத் தேக்கிக்கொள்ள ஆங்காங்குச் சால்கள் சுற்றிலும் அறைகளைக் கொண்ட முப்பத்திரண்டு சதுர அடியுள்ள வீட்டு முற்றம் முதலியவற்றை ஒவ்வொரு பெரிய மாளிகையிலும் காணலாம். நகரத் தெருக்களில் எல்லாம் செப்பனிடப்

பட்ட கழிநீர்ப் பாதைகள் உள்ளன ; சந்திகளில் மதகுகள் இருக்கின்றன. 'இக்கழிநீர்ப் பாதை அமைப்பு முறை பண்டை எகிப்திய நகரங்களிலும் இல்லை. பாபிலோனிய-சுமேரிய நகரங்களிலும் இல்லை. ஏன்? பண்டை நாகரிக நாடுகளிலே இல்லை, இல்லை!' என்று ஆராய்ச்சியாளர் கூறி வியக்கின்றனர்.

கண்ணையும் கருத்தையும் ஈர்ப்பது நீராடும் **செய்குளம்** ஆகும். இதன் நாற்புறமும் அழகிய - ஒழுங்கான படிக்கட்டுகள் இருக்கின்றன. குளத்தின் உள்ளிடம் 39 அடி நீளம், 23 அடி அகலம், 8 அடி ஆழம் உடையது. இந்தச் செய்குளத்திற்கு நீர் உதவ அண்மையில் மூன்று பெரிய கிணறுகள் உள்ளன. அழுக்கு நீரை அப்புறப்படுத்த ஒழுங்கான வழி ஒன்று குளத்துச் சுவரிலேயே அமைந்துள்ளது. குளத்தின் அடிப் பாகம் நன்ருய் இழைத்து வழவழப்பாக்கப்பட்ட செங்கற்களும் சிமென்ட் போன்ற ஒரு வகை நிலக் கீலும் கொண்டு தள வரிசை இடப்பட்டுள்ளது. குளத்தை மூவகைத் தடித்த சுவர்கள் அழகு செய்கின்றன. 'இக்குளம் இங்ஙனம் வியத்தகு முறையில் அமைந்திருப்பதாற்ருன், 5000 ஆண்டுகள் ஆகியும் இன்றும் நன்னிலையில் இருக்கின்றது' என்று ஆராய்ச்சியாளர் சொல்லி வியக்கின்றனர்.

கனி-கல் பொருள்கள்:—இக் கட்டிடங்களில் வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய பொருள்களைக் காண்கையில், அவர்கள் பொன், வெள்ளி, செம்பு, தகரம், ஈயம் இவற்றை அறிந்து இருந்தனர் ; இவற்றை இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் வரவழைத்துப் பயன்படுத்தினர். பலவகைக் கற்கள் பயன்படுத்தப்பட்டன ; சுக்கூர் - சுண்ணம்புக்கல் கழிநீர்ப் பாதைகளை மூடப் பயன்பட்டன. 'கீர்தர்' மலைக் கற்கள் பாத்திரங்கள், சிமென்ட், சிலைகள் முதலியவை செய்யப் பயன் பட்டன. வேறு கற்கள் வழவழப்பான நிறைகள் செய்ய உபயோகப்பட்டன. ஒரு வகை மஞ்சட் கல் லிங்கம் செய்யப் பயன்பட்டது. பல

உயர்தரக் கற்கள் அணிகட்கும் பிறவற்றுக்கும் பயன் பட்டன. அழகிய பச்சை 'அமெஜான் கல்' என்பது நீலகிரியில் உள்ள 'தொட்டபெட்டா'விலிருந்து கொண்டு செல்லப்பட்டது. எலும்பு, தந்தம், சங்கு முதலியவும் பொருள்கள் செய்யப் பயன்பட்டன.

ஆடை அணிகள் :—சிந்து வெளி மக்கள் பருத்தி ஆடைகளை நெய்து உடுத்தி வந்தனர். பல வீடுகளில் நெய்தல் தொழில் நடந்து வந்தது என்பதற்குரிய அடையாளங்கள் கிடைக்கின்றன. போர்வையும் சட்டையும் இருந்தன. அக்கால மக்கள் சிறிய தாடி மட்டும் வைத்திருந்



பலவகை மணிகளும் நகைகளும்

தனர்; சிலர் தாடியும் மீசையும் வைத்திருந்தனர். பெண்கள் கூந்தலை வாரி இடப் பக்கம் கொண்டை போட்டிருந்தனர்; கழுத்தணி, கங்கணம், மோதிரம், காப்பு, ஒட்டியாணம், காதணி, மூக்கணி, பலவகைக் கழுத்து மாலைகள் இவற்றை அணிந்து வந்தனர். இவை

பொன், வெள்ளி, செம்பு, பித்தளை, சங்கு, ஒருவகை உயர் தரக் கல் இவற்ருல் ஆனவை.

கருவிகள் :—கோடரி, இரம்பம், ஈட்டி, கத்தி முதலியன செம்பாலானவை. க்ஷவரக் கத்திகளும் பலவாகக் கிடைத்துள்ளன. இவற்ருல், அப்பழைய மக்கள் சுத்தமாக இருக்க விரும்பியவர் என்பது அறியக் கிடக்கிறது அன்ருே ?

நிறைகள் :—சிறிய நிறைகள் கற்பலகையால் ஆனவை; முச்சதுர வடிவில் அமைந்தவை. பெரியவை சர்க்கரைப் பொட்டலம் போன்ற உருவில் அமைந்தவை; பின்ன அளவையும் குறிப்பவை; 1, 2, 4, 8, 16, 32, 64, 160, 200, 320, 640, 1600 வரை பின்ன அளவை உடையவை.

பாத்திரங்கள் :—வீட்டிற்குரிய பாத்திரங்களில் பெரும்பாலானவை மட்பாண்டங்களே. கோப்பைகள், நீர்ச் சாடிகள், பெரிய சால்கள் இவை மிகுதியாகக் கிடைத்துள்ளன. மட் பாண்டங்கள் சிறந்த வேலைப்பாடு கொண்டவை; பல நிறங்கள் கொண்டவை. அந் நிறங்கள் இன்றும் அழியாமல் இருத்தல் வியப்புக்குரியது.

எழுத்துக் குறிகள் :—பண்டை மக்கள் சித்திரங்களை எழுத்துகளாகப் பயன்படுத்தினர். அவை பாத்திரங்கள், காப்புகள், முத்திரைகள் இவற்றின் மீது பொறிக்கப் பட்டுள்ளன. இத்தகைய சித்திர எழுத்துகளையே பழைய எகிப்தியரும் பாபிலோனியரும் பயன்படுத்தி வந்தனர்.

பொம்மைகள் :—களிமண் பொம்மைகள் ஏராளமாகக் கிடைத்துள்ளன : எலிகள், ஊது குழல்கள், பறவைகள், மனித உருவங்கள், வண்டிகள் முதலியன. மண் தேர் ஒன்றும் அகப்பட்டது. இதுபோன்ற தேர் இராக் நாட்டு 'உர்' நகரில் அகப்பட்ட கல்லில் செதுக்கப்பட்டுள்ளது கவனித்தற்குரியது.

சிலைகள் :—சிந்து வெளி மக்கள் சிற்பக் கலையில் ஓரளவு பயிற்சி உடையவர் என்பது அவர்கள் செய்

துள்ள சில சிலைகளைக் கொண்டு அறியலாம். வெண்கலத்தால் அமைந்த (உருக்கி வார்க்கப்பட்ட) நடன மாதின் சிலை வியப்புக்கு உரியது. சில கற்சிலைகள் நடனத்தைக் குறிக்கின்றன. ஒன்று, இடக்கால் தூக்கி வலக்கால் மீது நின்று நடனம் ஆடுவதுபோல அமைந்



யோகியின் சிலை

துள்ளது. 'இது நடராஜரது பழைய உருவம்' என்று ஆராய்ச்சியாளர் நினைக்கின்றனர்.

சமயம்:—சிந்து வெளி மக்கள் நிலமகள், சிவலிங்கம், கண்ணன், விலங்குகள், பறவைகள், நாகங்கள், மரங்கள், ஆறுகள், சிறு தெய்வங்கள், விநோத தெய்வங்கள்—வழிபாடு உடையவர்கள் என்னலாம். ஆயினும், ஏராளமான சிறிய பெரிய சிவலிங்கங்கள் கிடைத்திருத்தலை நோக்க, அம் மக்களில் பெரும்பாலோர் சைவ சமயத்தினராக இருந்தனர் என்று கொள்ள இடமுண்டு. மேலும் அம் மக்கள் சமயத் தொடர்பான தாயித்துகளையும், முத்திரைகளையும், பதக்கங்களையும் அணிந்து வந்தனர்; பலியிட்டு வந்தனர்;

படையல் இட்டு வந்தனர்; சமயத் தொடர்பாக இசையும் நடனமும் வளர்த்தனர்; மந்திர மாயங்களில் பழகி இருந்தனர்; சிலர் யோகப் பயிற்சியையும் அறிந்திருந்தனர். சுருங்கக் கூறின், இன்று ஹிந்து மதத்தில் உள்ள பெரும்பாலான வழிபாடுகளும் பழக்க வழக்கங்களும் சிந்து வெளி மக்கள் சமயத்தைச் சேர்ந்தவையே எனக் கூறுதல் பொருத்தமாகும்.

வாணிபம் :—சிந்து வெளி மக்கள் இறந்தார் உடலைச் சுட்டு வந்தனர்; எரித்தும் வந்தனர். இவர்கள் உள் நாட்டு வாணிபத்திலும் வெளி நாட்டு வாணியத்திலும் சிறந்து இருந்தனர்; நடு ஆசியாவிலிருந்து சிந்து வெளி வழியே எகிப்து வரை வாணிபப் பாட்டை அக் காலத்தில் இருந்து வந்தது. இவர்கள், தரை வழி வாணிபத்தில் வண்டிகளையும் எருதுகளையும் கோவேறு கழுதைகளையும் பயன் படுத்தினர்; கடல் வழி வாணிபத்தில் சிறிய கப்பல்களைப் பயன்படுத்தினர்; நாணயங்களை வழக்கில் வைத்திருந்தனர். இப் பெருமக்கள் திரை கடல் ஓடித் திரவியம் தேடியவர்கள்; அழகிய இல்லங்களைச் சுகாதார முறைக்கு ஏற்ப அமைத்துக் கொண்டு சுக வாழ்வு நடத்தியவர்கள்.

இவர்கள் வாழ்ந்த காலம் ஏறக்குறைய கி. மு. 3250–2750 என ஆராய்ச்சியாளர் ஒருவாறு கூறுகின்றனர்; இவர்கள் ஆரியர் வருகைக்கு முன் இந்தியாவில் இருந்தவர்கள். இவர்கள் **திராவிடர்களே** என்று சிலரும் வேறு இனத்தவர் என்று சிலரும் கூறுகின்றனர். சிந்து வெளி மக்கள் எவரே ஆயினும், **அவரே இந்திய நாகரிகத்தைத் தோற்றுவித்த பெருமக்கள்** என்பதில் ஐயமில்லை.

அரும்பொருள்

கடல்கோள் - கடல் கொந்தளிப்பு. புதைபொருள் - புதைந்து கிடக்கும் பொருள்கள். ஸ்டான்லி காஸன் என்பார் 'புதைபொருள் ஆராய்ச்சி'யைப்பற்றிய அழகிய நூல் ஒன்றை வரைந்துள்ளார். புதைபொருள் ஆராய்ச்சிக்கூடம் - Archealogical

Department. மண்டிலம் - மாகாணம். ஈறுக - முடிவாக. செய்குளம் - நீர் சுரப்பு இல்லாத குளம். வழவழப்பு - இரட்டைக் கிளவி. வியத்தகு - வியக்கத்தக்க. நிறைகள் - எடைக் கற்கள். க்ஷவரத்தகடு - Blade. விநோத தெய்வங்கள் - ஆட்டுத் தலை, மனிதர் கால்கள் இவற்றை உடைய, இவைபோல் இயற்கைக்கு மாறுபட்ட அமைப்புடைய தெய்வங்கள். உள்நாடு × வெளிநாடு.

கேள்விகள்

1. பண்டை நகரங்கள் எவ்வெவ்வகையில் சேதமுற்றன ?
2. 'புதைபொருள் ஆராய்ச்சி' என்பது யாது?
3. ஸ்டான்லி காஸன் யாது கூறுகிறார் ?
4. புதைபொருள் ஆராய்ச்சிக்குப் பெருந்துணை புரிவன யாவை ?
5. சிந்து வெளியில் அகப்பட்ட நகரங்கள் யாவை ?
6. அங்குள்ள கட்டிடச் சிறப்பு யாது ?
7. பிற பண்டை நகரங்களில் இல்லாத—சிந்துவெளி நகரங்கட்கே அமைந்த சிறப்பு யாது ?
8. செய்குளத்தின் வேலைப்பாட்டை விளக்குக.
9. சிந்துவெளி மக்கள் அறிந்த கனிப்பொருள்கள் எவை ?
10. அவர்கள் பயன்படுத்திய கற்கள் எவை? ஆடை அணிகள் எவை ?
11. அவர்கள் வாணிபத்தில் சிறந்தவர் என்பதைக் குறிக்கும் அடையாளங்கள் எவை ?
12. அவர்கள் கையாண்ட எழுத்துகள் எவை ?
13. சிலைகளைக் கொண்டு அறியத்தக்கவை யாவை ?
14. அம்மக்கள் வழிபட்ட தெய்வங்கள் யாவை ?
15. அவர்கள் செய்த வழிபாட்டு முறைகள் எவை ?
16. அவர்கள் வாணிபத்தை எங்ஙனம் நடத்தி வந்தனர் ?
17. அவர்கள் யாவரென ஆராய்ச்சியாளர் அறைகின்றனர் ?
18. அவர்கள் யாவரே ஆயினும், நாம் அறியத்தகும் உண்மை யாது ?

இலக்கணம்

உரிச்சொல்

உரிச்சொல்லைப் பற்றி முன் புத்தகத்தில் சிறிதளவு கூறப்பட்டது. பெயரையும் வினையையும் சார்ந்து

அவற்றிற்கு **உரிய** பண்பினைக் குறித்து வரும் சொல் **உரிச்சொல்** ஆகும். அது **பெயரைச்** சார்ந்து வரின் **பெயர் உரிச்சொல்** என்றும், **வினையைச்** சார்ந்து வரின் **வினை உரிச்சொல்** என்றும் கூறப்படும்.

கடி நகர் — பெயர் உரிச்சொல்.
நனி தின்றான் — வினை உரிச்சொல்.

பயிற்சி

1. முன் பாடத்திலிருந்து வினையாலணையும் பெயர்கட்கு உதாரணங்கள் தருக.

2. இப்பாடத்திலிருந்து அடுக்குத் தொடர், வினைத் தொகை, நிலைத்தொடர் இவற்றிற்கு உதாரணம் தருக.

3. பொருள் வேறுபாடு தோன்ற வெவ்வேறு வாக்கியங்களில் அமைத்து எழுதுக:—

மாரி—மாறி, இரை—இறை, நிறை—நிரை, நிறம்—நிரம், புறம்—புரம், அறி—அரி, அறை—அரை, கரை—கறை.

4. வாக்கியங்களில் அமைத்து எழுதுக:—திருவவதாரம், பிறிதொரு, தலையெடுத்து, புண்ணிய பூமி, சமுதாயம், புதையுண்டு, செப்பனிடப்பட்ட, வேலைப்பாடு.

5. தன்வினை வாக்கியங்களைப் பிறவினை வாக்கியமாகவும், பிறவினை வாக்கியங்களைத் தன்வினை வாக்கியங்களாகவும் மாற்றி எழுதுக.

(1) அதனால் உழவுத் தொழில் பெருகி வருகிறது.
(2) அரியநாதர் பலரையும் அங்குக் குடியேற்றினார்.
(3) பல நகரங்கள் மண்மாரியால் அழிந்தன.
(4) அம்மக்கள் சமயத் தொடர்பாக இசையும் நடனமும் வளர்த்தனர்.

6. பிரித்து எழுதிப் புணர்ச்சி இலக்கணம் கூறுக:—நாளடைவில், மேலாடை, இல்லறத்தார், உள்ளிடம், கற்சாலை, கடற்கரை, பிற்காலம், பாற்கடல்.

13. நான் பார்த்த பள்ளிக்கூடம்

யான் சென்னை இராமகிருஷ்ண உயர்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பிற் பயிலும் மாணவன். என் பெயர் **விவேகாநந்தன்** என்பது. சென்ற வாரம் வெள்ளிக்கிழமையன்று என் வகுப்பு ஆசிரியர் என்னையும் என் வகுப்பு மாணவர்களிற் சிலரையும் **வாலாஜாபாத்** என்னும் பேரூருக்கு அழைத்துச் சென்றிருந்தார். நாங்கள் அனைவரும் அங்குள்ள **இந்துமதப் பாடசாலையின்** அதிகாரிகளாலும் ஆசிரியர்களாலும் வரவேற்கப்பட்டு அவர்கள் விருந்தினராக அப் பாடசாலையிலேயே தங்கினோம். நாங்கள் உண்டு ஓய்வுகொண்ட பின்னர், அப்பாடசாலையின் பல் வேறு பிரிவுகளையும் சுற்றிப் பார்த்தோம்; அப் பாடசாலையின் சீரிய நடை முறையைக் கண்டு மகிழ்ந்தோம்; அதன் சிறப்பியல்புகளை எங்கள் ஆசிரியர் கூறக் கேட்டு உளம் பூரித்தோம். மக்கள் அறிவை உரிய முறையில் பெருக்கி, அவர்களை வருங்கால வாழ்விற்குத் தகுதி உடையவர்களாகச் செய்யும் பாடசாலை நம் தமிழ்நாட்டில் அஃது ஒன்றே என்பதை அறிய எங்கள் உள்ளத்தில் உவகை பொங்கியது. நன் மக்களைத் தோற்றுவித்து நாட்டை உயர்வுறுத்தல் அதுபோன்ற பாடசாலைகளாலேயே இயலும் எனின் அது மிகையாகாது.

இந்தியாவிலேயே இணையற்று விளங்கும் இவ் விந்து மதப் பாடசாலை நற்குடி மக்களை உருவாக்குவதற்கு ஏற்ற கல்வியைக் குழந்தைகளுக்கு ஊட்டும் உயர்ந்த குறிக்கோளுடன் நாட்டு நலத்திற் கருத்துள்ள நல்லோர் சிலரால் தோற்றுவிக்கப்பெற்றது. அது 4-9-1916-ல் ஒரு சிறு கோவில் மண்டபத்தில் நான்கு குழந்தைகளோடும் ஓர் ஆசிரியரோடும் துவங்கப்பெற்றது. அது, தோற்றுவித்தவர்தம் தளராத முயற்சியாலும், ஆண்டவன் அருளாலும், பெருமக்கள் ஆதரவாலும் ஆண்டுதோறும் விரைந்து வளர்ந்துகொண்டே வந்து, இன்று அறுநூறு

சிறுவர் சிறுமிகளைக் கொண்டதாய், முப்பது ஆசிரியர்கள் தொண்டாற்றும் பெருங்கல்வி நிலையமாய் இலங்குகின்றது. இப்பாடசாலையின் சார்பில் **திருவள்ளுவர் தொழிற் சாலை** எனப் பெயரிய தொழில் நிலையம் ஒன்று அமைந்து மாணவர்களுக்குப் பத்துக்கு மேற்பட்ட தொழில்களிற் பயிற்சி யளித்து, அவர்கள் படிப்பை முடித்துக்கொண்டு வெளிச் சென்ற பின்னர்ப் பிழைப்புக்கு வருந்தாது பெருமையுடன் வாழ வகை செய்கிறது. **வள்ளலார் மாணவர் இல்லம்** செந்தமிழ் நாட்டின் சிறுவர்கள் முந்நூற்றுவருக்குக் கைத்தொழில்களிலும் நல்ல ஒழுக்க வழக்கங்களிலும் பயிற்சி அளிக்கும் பயன்மிகு நிலையமாக விளங்குகின்றது.

எல். டி. பட்டம் பெற்ற ஒரு தலைமையாசிரியரின் திறமை மிக்க தலைமையின் கீழ் அப்பாடசாலையும், அதன் பல்வேறு கிளைகளும் சிறக்க நடத்தப்பட்டு வருகின்றன. அப்பாடசாலையார் அதிற் கல்வி பயிலும் சிறுவர்களை உண்மை மனிதர்களாக்கத் தக்க முறைகளையெல்லாம் கையாளுகின்றனர். பொதுவான கல்வி முறைகளே அன்றி, இளஞ்சிறாரின் உடல், உளம், உயிர் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு உதவும் பல்வேறு உறுப்புகளும் அப்பள்ளியோடு இணைக்கப்பெற்றிருப்பது பாராட்டுதற்குரியதாகும். அறிவை விரிவுறுத்தற்கு ஏற்ற அழகிய நன்னூல்களை ஆயிரக்கணக்கில் கொண்டு விளங்கும் **ஞானசம்பந்தர் நூல் நிலையமும்**, நாள், கிழமை, திங்கள் வெளியீடுகள் பல வரப்பெறும் **வாகீச இலவச இதழ் நிலையமும்** பள்ளியின் பயனை மிகுத்து அதனை அழகுறுத்தி வருகின்றன. இளைஞரது இசையறிவைப் பெருக்குதற்கென ஏற்படுத்தப்பட்டுள்ள **சுந்தரானந்த இசை அரங்கு**, கள்ளமில்லாத பிள்ளையுள்ளங்களில் இன்பவடிவினனான இறைவனை எண்ணி இசைத்தமிழால் பாடிப் பரவ அவர்களைப் பழக்குகின்றது. **மெய்கண்டார்** பெயரால் அமைந்துள்ள **மாணவர் கழகம்**, தன் உறுப்பினர்களான மாண

வர்கள் தங்கள் விரிவுரையாற்றும் திறமையை வளர்த்துக் கொள்ளத் துணைபுரிகின்றது.

அப் பாடசாலையில் அமைந்துள்ள **சாரணர் குழுவினர்** பொய்யா நோன்புடையவராய், பிறர்க்கு நன்மை புரியவும், தாம் துன்பத்தை மகிழ்ச்சியோடு ஏற்று அனுபவிக்கவும் பழகுகின்றனர். **செஞ்சிலுவைச் சங்கத்**தினர் இடர்க் காலத்தில் முதலுதவி செய்யப் பயின்று வருகின்றனர். குருளையர் கூட்டத்தில் பால் மணம் மாருத பாலர்கள் கலந்துகொண்டு இனிது விளையாடி இன்புறுகின்றனர். மாணவர்கள் அவ்வப்போது சிறிய இனிய நாடகங்களை நடித்து மகிழ்தற்கு **நாடக மன்றம்** ஒன்றும் அப்பள்ளியில் அமைந்துள்ளது. ஆசிரியர்கள் அடிக்கடி தம் பொறுப்பிலுள்ள மாணவர்களைச் சிறப்பு வாய்ந்த வெளியிடங்கட்கு அழைத்துச்சென்று, அவர்கள் அவ்வவ்விடங்களிலுள்ள பொருள்களை நேருற உற்று நோக்கியும், ஒன்றினேடு ஒன்றை ஒப்பிட்டும் அவற்றின் இயல்புகளைக் கண்டறிதற்குத் துணைசெய்து வருகின்றனர்.

அப்பள்ளியில் இளைஞர்கட்கு ஏட்டுக் கல்வியோடு பலவகைத் தொழில்களும் கற்பிக்கப்படுவதால், அவர்கள் ஏட்டுக் கல்வியே கற்று, அதனுல் ஓரளவு நூலறிவு ஒன்றுமே பெற்று, பள்ளியை விட்டு வெளியேறினதும் பிழைக்க வகையின்றி வருந்தும் ஏனைய மாணவர்களின் இரங்கத்தக்க நிலையை எய்தார் என்பது ஒருதலை. அப் பாடசாலையில் நடத்தப்பெறும் தொழிற்சாலை **திருவள்ளுவர்** பெயரால் அமைந்திருப்பது போற்றற் குரியது. அதில் நான்காம் வகுப்பிற்கு மேற் பயிலும் சிறுவர்கள் பல்வேறு சிறு தொழில்களில் நன்கு பயிற்சிபெற்று வருகின்றனர். அத்தொழிற்சாலை நூற்றல் பகுதி, நெய்தற்பகுதி, தையற் பகுதி, தச்சுப் பகுதி, கலாய்ப் பகுதி, கன்னரப் பகுதி, பொத்தான் பகுதி, தந்தவேலைப் பகுதி, சுவடி கட்டல் பகுதி எனப் பல பகுதிகளை உடையதாக இருக்கிறது. அப் பல பகுதிகளிலும் இளைஞர்கட்குப் பற்பல தொழில்

களிற் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இவையே அன்றி மேல் வகுப்பு மாணவர்கள் வேளாண்மைத் தொழிலிலும் பயிற்சி பெறுகின்றனர்.

இந்துமத பாடசாலை பிற பாடசாலைகளினும் சிறந்து விளங்குதற்கே காரணமாக உள்ளது அதன் சார்பில் அமைந்துள்ள **வள்ளலார் மாணவர் இல்லமே** என்னலாம். வள்ளலார் இல்லம் பாலாற்றங்கரையில், பசுமை நிறைந்த சோலையில், இனிய காற்றும் அளவான சூரிய ஒளியும் உள்ள இடத்தில் அழகாக அமைந்துள்ளது. அதில் தமிழ் நாட்டிலுள்ள எல்லாக் கோட்டங்களையும் சேர்ந்த சிறுர் களும் இருக்கின்றனர். அதில் அன்ருடம் நடை பெறு தற்குரிய பணிகளை மாணவர்கள் தாங்களே முறை வகுத்துச் செய்துகொள்ளுகின்றனர். அங்குச் சிலர் பயிர்ப்பண்ணைக்குச் சென்று காய் கறிகள் கொணர்வதும், சிலர் அவற்றை நறுக்குவதும், சிலர் பாலாற்றினின்றும் அணியணியாகத் தவலைகளில் தண்ணீர் முகந்து வருவதும் காண்போரைக் களிப்பிக்கின்றன.

மாணவர் இல்லத்தின் ஆட்சி தேர்ந்தெடுக்கப்பெற்ற அங்கத்தினர்களைக் கொண்ட ஓர் **ஆட்சி மன்றத்தினிடம்** உள்ளது. அவ் வாட்சி மன்றம் பல பிரிவுகளாகப் பிரிந்து பல துறைகளிலும் வேலை செய்து வருகிறது. மன்றத்தின் அமைச்சர்கள் பணிபுரிதற்குத் துணையாக அமைந்துள்ள னவற்றுள் **வீமன் விளையாட்டு வெற்றிப் படையும், தேரையர் மருந்துவச் சாலையும்** சிறப்பாகக் குறிப்பிடத் தக்கன. வீமன் விளையாட்டு வெற்றிப் படையில் சிறுவர்கள் பலவகை விளையாட்டுகளும், உடற்பயிற்சிகளும், சூரிய வணக்கம், ஆசன வகைகள் முதலியனவும் கற்பிக்கப்படுகின்றனர். தேரையர் மருத்துவச் சாலை இளைஞர்கட்கு நலத்துறை முறைகளால் நோய் வாராது பாதுகாக்கின்றது. **திருவள்ளுவர் அற மன்றம்** மாணவர்கள் அறநெறியில் ஒழுகுதற்கு ஆதரவாக உள்ளது.

மனிதனை மனிதனுகச் செய்வதற்குரிய உண்மைக் கல்வியை உரிய முறையில் உவந்து அளிக்கும் அக்குரு குலக் கல்வி நிலையம் தமிழ் நாட்டிற்கே பெருமை தரத்தக்க தாகும். கல்வி பயிலும் மாணவ நிலையில் உள்ளோரும், கல்வி வளர்ச்சியில் கருத்துள்ளோரும் அதனை நேரிற் கண்டு களித்தல் வேண்டும். செல்வம் மிக்கவர் பொருள் தந்து அதனைப் போற்றுவதும், செல்வாக்குள்ளவர் அதன் முன்னேற்றத்திற்குத் துணை புரிவதும், அறிவு சான்றவர் அதன் வளர்ச்சிக்கான நெறிமுறைகளை அறிவித்தலும் அதற்குச் செய்யத்தக்க நல்லறங்களாகும். அன்றியும் தமிழ் நாடெங்கும் அத்தகைய குருகுலப் பள்ளிகள் பல தோன்றிப் பணியாற்றுமாறு செய்யவேண்டுவது தமிழர் எனப்படுவோர் அனைவர்க்கும் தலையாய கடனுகும்.

அரும்பொருள்

உயர்நிலைப்பள்ளி - High School. குறிக்கோள் - இலட்சியம்; (Aim). சிறுர் - சிறுவர். உறுப்பு - அங்கம். இணைக்கப் பெற்றிருப்பது - சேர்க்கப்பெற்றிருப்பது. இசையறிவு - சங்கீத ஞானம். பொய்யா நோன்பு - சத்திய விரதம். ஏட்டுக்கல்வி - புத்தகப்படிப்பு. சுவடி - புத்தகம். சுவடி கட்டல் - Book binding. மாணவர் இல்லம் - Hostel. கோட்டங்கள் - சில்லாக்கள். நலத்துறை முறை - சுகாதார முறை. அறநெறி - தருமவழி. மன்றம் - சபை. தொண்டாற்றி - சேவை செய்து. பணி ஆற்றுமாறு - சேவை செய்யும்படி.

கேள்விகள்

1. இந்துமத பாடசாலை எங்கு உள்ளது? அது எந் நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டது?

2. அதன் சார்பில் உள்ள உறுப்புகள் யாவை? அவை எவ்வெவ்வகையில் பயன்படுகின்றன?

3. மற்றப் பாடசாலைகட்கும் இந்துமத பாடசாலைக்கும் உள்ள வேறுபாடு என்ன?

4. அதன் கைத்தொழிற்சாலையில் என்னென்ன தொழில்கள் கற்பிக்கப்படுகின்றன?

5. வள்ளலார் மாணவர் இல்லம் எங்கு அமைந்துள்ளது? அதன் அன்றாட வேலைகள் எவ்வாறு செய்யப்படுகின்றன?

6. மாணவர் இல்லத்தின் ஆட்சி எவர்பால் உள்ளது?

7. வீமன் விளையாட்டு வெற்றிப்படை, தேரையர் மருத்து வச்சாலை—இவை எங்ஙனம் பணிபுரிகின்றன?

8. அப்பாடசாலைக்குச் செய்யத் தக்க நல்லறங்கள் யாவை?

9. தமிழரின் தலையாய கடன் யாது?

10. இந்துமத பாடசாலையின் தேவைகள் யாவை?

இலக்கணம்

உரிச்சொல்

(i) **கடி** என்னும் ஓர் உரிச்சொல்லே காப்பு, கூர்மை, மணம், சிறப்பு, விரைவு, புதுமை, கார்ப்பு, விளக்கம் முதலிய பல பொருள்கள் குறித்து வரும்.

கடி நகர்	— காப்பு..	கடி வேல்	— கூர்மை.
கடி மலர்	— மணம்.	கடி அரண்	— சிறப்பு.
கடிது சென்றான்	— விரைவு.	கடி மணம்	— புதுமை.
கடி மிளகு	— கார்ப்பு.	கடி மார்பு	— விளக்கம்.

(ii) ஒரு பொருளிலேயே வரும் பல உரிச்சொற்களும் உண்டு. **சால, உறு, தவ, நனி, கூர், கழி** என்பன **மிகுதி**யாகிய ஒரே பொருளைக் குறித்து வரும்.

சாலப் பல.	நனி பேதை.
உறுபொருள்.	கூர் இருள்.
தவப் பெரிது.	கழி மகிழ்ச்சி.

பயிற்சி

1. இப்பாடத்தில் உள்ள தெரிநிலை வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சங்களை எடுத்து எழுதுக.

2. குறிப்புப் பெயரெச்சங்களை எடுத்து எழுதுக.

3. முன் பாடங்களிலிருந்து குறிப்பு வினைமுற்று, குறிப்பு வினையெச்சம் இவற்றிற்குச் சில உதாரணங்கள் தருக.

4. இப்பாடத்திலிருந்து அடுக்குத் தொடருக்கு ஓர் உதாரணம் தருக.

5. இப்பாடத்தில் உள்ள எதிர்மறை வினையெச்சம், பெயரெச்சங்களை எடுத்து எழுதுக.

6. இப்பாடத்திலிருந்து ஏ, உம் என்னும் இடைச்சொற்களுக்கு இரண்டிரண்டு உதாரணம் தருக.

7. இப்பாடத்தின் துணைகொண்டு நீ பார்த்த வேறொரு பாடசாலையைப்பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

8. நீ பார்த்த ஒரு கோவிலைப்பற்றி ஒரு **கட்டுரை** வரைக.

9. அமைப்பும் சிறப்பும்—பிரிவுகள்—மாணவர் இல்லம்—தமிழரின் கடமை—இக்குறிப்புகளைக்கொண்டு இந்துமத பாடசாலையைப் பற்றி ஒரு **கட்டுரை** வரைக.

14. இராம கிருஷ்ணர் அறவுரை

1. காலில் செருப்புப் போட்டுக் கொள்வாயானால் நீ முள்ளின் மேலும் சுலபமாய்ப் போகலாம். **ஞான**மாகிய செருப்பைப் போட்டுக்கொண்டால் உலகம் என்னும் முள் நிறைந்த வனமெங்கும் பயமின்றித் திரியலாம்.

2. **கடவுள்** மனிதரிடம் எவ்விதம் இருக்கிறார் என்று உனக்குத் தெரியுமா? தனவந்தர்களுடைய வீட்டில் மகளிர் திரைமறைவில் இருப்பதைப் போலவே அவர் இருக்கிறார். அந்த மகளிர் எல்லோரையும் பார்க்கமுடியும்; ஆனால் அவர்களை ஒருவரும் காணமுடியாது. இவ்விதமே கடவுள் ஒவ்வொருவரிடமும் அமர்ந்திருக்கிறார்.

3. ஈசுவரன் ரூபி, அரூபி என்று சொல்வது பனிக்கட்டியையும் ஜலத்தையும் பற்றிப் பேசுவது போலாம். ஜலம் உறைந்து பனிக்கட்டியானால் அதற்கு உருவமுண்டாகிறது. அதே பனிக்கட்டி நீராகக் கரையும்போது உருவம் மறைந்து போகிறது.

4. கலங்கியுள்ள நீரில் சந்திர சூரியன்களுடைய பிரதிபிம்பத்தைத் தெளிவாய்க் காணமுடியாது. அது

போல 'யான்', 'எனது' என்னும் **மாயை**யால் கலங்கியிருக்கும் புத்தியிலும் ஈசுவரனுடைய அருட்பிரகாசத்தைச் சரியாய் உணர முடியாது.

5. நீராவி இயந்திரம், போய்ச் சேரவேண்டிய இடத்திற்குத் தான் போய்ச் சேருவதோடு, தன் பின்னுல் நீளமாய் இணைக்கப்பட்ட சுமைகள் நிறைந்த பல வண்டிகளையும் இழுத்துச் செல்கின்றது. அதுபோலவே **அவதார புருடர்கள்** தாம் செல்லவேண்டிய இடத்தை அடைவதோடு, எண்ணிறந்தோரையும் ஈசன் திருவடிக்குக் கொண்டு சேர்க்கின்றனர்.

6. கொழுக்கட்டைகள் எல்லாம் வெளிப் பார்வைக்கு ஒரே மாதிரி தோன்றலாம். ஆனுல் வெவ்வேறு விதமான பொருள்கள் உள்ளே வைக்கப்பட்டிருக்கக் கூடும். உதாரணமாகச் சிலவற்றில் தேங்காய்ப் பூரணமும், சிலவற்றில் பால்கட்டியும் இவ்வாருகப் பல விதங்கள் உள. அதுபோல **மனிதர்கள்** எல்லாரும் உடல் அமைப்பில் ஒரேமாதிரி இருந்தாலும் குண வித்தியாசத்தால் **பல வகைப்படுவர்.**

7. வேதம், புராணம் முதலியவைகளில் அடங்கியுள்ளவைகளைப்பற்றி எவ்வளவு காலம் **ஆராய்ச்சி** செய்ய வேண்டும்? எம்பெருமானைத் தரிசிக்கும் வரையில்தான். ஒரு பூவின்மேல் உட்காரும் வரையில்தான் தேனீ ரீங்காரம் செய்யும். தேனைக் குடிக்க ஆரம்பித்தவுடன் ரீங்காரமெல்லாம் நின்றுவிடுகிறது.

8. தண்ணீரில் படகு இருந்தால் யாதோர் அபாயமும் இல்லை; ஆனுல் படகில் தண்ணீர் நுழைந்துவிடக் கூடாது; நுழைந்தால் படகு மூழ்கிவிடும். அதுபோலப் பக்தன் ஒருவன் **கிருகஸ்த**னுக உலகில் இருப்பதால் யாதொரு கெடுதலும் இல்லை; ஆனுல் **உலகப் பற்று** மாத்திரம் அவன் மனத்தில் நுழையும்படி விடக்கூடாது.

9. வெண்ணெய் எடுக்கச் சூரியோதயத்திற்கு முன்னமேயே கடையவேண்டும். பகல் வேளையில் கடைந்

தால் வெண்ணெய் நன்ருய்ச் சேராது. அதுபோலச் சிறுவயதிலேயே **பக்தி மார்க்க**த்தைக் கைக்கொண்டு மனத்தைக் கடவுளிடம் செலுத்துபவர்களே பகவானுடைய தரிசனம் பெறுவர்.

10. ஒரு கல்லானது நீரில் பல்லாயிரம் ஆண்டுகள் இருந்தபோதிலும் நீர் அதனுள் ஊருது; ஆனல் களிமண் நீருடன் சம்பந்தப்பட்ட உடனே அதனுடன் கலந்து விடுகிறது. அதுபோல் பல கஷ்டங்களின் நடுவிற்கூட உறுதியான **பக்தி**யுடையவர்களின் மனமானது கலங்குவதில்லை; ஆனல் நம்பிக்கை குறைந்தவனே, ஓர் அற்ப காரியத்தினுலும் சுலபமாக மனம் கலங்கி விடுகிருன்.

11. ஊசியின் காதில் நூலைக் கோக்கும்போது, நூலின் முனை கொஞ்சம் பிரிந்திருந்தாலும் கோக்க முடியாது. அதுபோல, ஒருவனிடம் **ஆசை** என்பது சிறிது இருந்தாலும்கூட அவன் மோக்ஷ சாம்ராஜ்யத்தை அடையமுடியாது. மனமானது ஆசைகளால் அலைக்கப் படாது பரிசுத்தமாயிருந்தால்தான் ஒருவன் பரம்பொருளை அறிதல் கூடும்.

12. கப்பல் எந்தத் திக்கில் போய்க்கொண்டிருந்தாலும் காந்த ஊசி வடக்குத் திக்கையே காட்டுகின்றது. அதனல்தான் கப்பல் திசை மாறிப் போவதில்லை. ஒருவனுடைய மனம் கடவுளையே நோக்கி நிற்குமாயின் அவன் எவ்வித அபாயங்களிலிருந்தும் விடுபடுவான்.

13. ஒரு வீட்டின் மேற்கூரைக்கு ஏணியின் மூலமாகவோ, ஒரு மூங்கிலின் உதவியைக்கொண்டோ, மாடிப் படி வழியாகவோ, வேறு வழிகளாலோ போதல் கூடும். அதுபோலவே, கடவுளை அடைவதற்குள்ள வழிகளும் பல. உலகத்தில் உள்ள ஒவ்வொரு **மதமும்** அவரை அடைவதற்கான ஒரு மார்க்கமே ஆகும்.

14. ஒரு மரத்தின்கீழ் நின்றுகொண்டு கைகொட்டுவாயானல்அதன்மேலுள்ள பறவைகளெல்லாம் பறந்தோடிப் போம். அதுபோல, கைகொட்டிக்கொண்டே **ஹரிநாம**

சங்கீர்த்தனம் செய்வாயாகில் உன் உடல் என்னும் மரத்திலிருந்து தீய எண்ணங்களாகிய பறவைகள் பறந்து போம்.

15. ஒரு விளக்கின் ஒளி தூரத்தில் உள்ள பொருள்களைத் தெளிவாகக் காண்பித்தாலும் விளக்கின் கீழே எப்போதும் நிழல் இருக்கும். அதுபோல, **மகான்** ஒருவரின் அருகில் உள்ளவர்கள் அவருடைய **மகிமையை** அறிவதில்லை. தூரத்தில் உள்ளவர்கள் அவருடைய ஆத்ம சக்தியைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறார்கள்.

இலக்கணம்

தெரி நிலை வினையும் குறிப்பு வினையும்

வினைச் சொற்கள் யாவும் பொதுவாகத் **தெரி நிலை வினை, குறிப்பு வினை** என இரு வகைப்படும்.

(i) **தெரிநிலை வினை** என்பது காலம் வெளிப்படையாகத் தெரிய நிற்கும் வினை.

தங்கினேம்	— இறந்த காலம்	வினைமுற்று.
விளங்குகின்றது	— நிகழ் காலம்	

விளையாடி இன்புறுகின்றனர்	— இறந்த காலம்	வினையெச்சம்
வாழ வகை செய்கின்றது	— நிகழ் காலம்	
நிறைந்த சோலை	— இறந்த காலம்	பெயரெச்சம்
வழங்கும் உதவி	— நிகழ் காலம்	

(ii) காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல் குறிப்பாக அறிந்துகொள்ளுமாறு காட்டும் வினை **குறிப்பு வினை** ஆகும்.

இளங்கோ	**நல்லன்**	— வினைமுற்று.
மெல்லப்	போனான்	— வினையெச்சம்
இனிய	நாடகங்கள்	— பெயரெச்சம்

பயிற்சி

1. முன் பாடத்திலிருந்து வினையெச்சம், பெயரெச்சம், வினைமுற்றுக்கு ஓர் உதாரணம் தருக.

2. அறுவகைப் பெயர்ச் சொற்களில் வகைக்கு ஓர் உதாரணம் தருக.

3. வினைத்தொகை நிலைத்தொடர்க்கு ஓர் உதாரணம் தருக.

4. இப்புத்தகத்திலிருந்து ஒன்று முதல் எட்டு வரையில் உள்ள வேற்றுமைகளின் பொருள்களுள் ஒவ்வொன்றிற்கும் இரண்டிரண்டு உதாரணங்கள் தருக.

5. முன் பாடத்திலுள்ள விளிவேற்றுமை ஏற்ற பெயர்களை எடுத்து எழுதுக.

6. இப்பாடத்தில் உள்ள வினையாலணையும் பெயர்களை எடுத்து எழுதுக.

7. வடமொழித் தொடர்களை எடுத்து எழுதுக.

8. கீழ்வரும் **தனிநிலை** வாக்கியங்களைக் **கலவை** வாக்கியங் களாக மாற்றி எழுதுக :—

(i) " முடியுடை மூவேந்தருள் ஒருவராகிய சேரமானே தளர்ச்சி பெற்றார். இக்குறுநிலனை ஆய் எம் மாத்திரமாவன் ?

(ii) நம் படைத்தலைவன் வீரநாதனும், அணித்தலைவன் வச்சிரமுடியானும் படைக்குத் தலைமை பூண் டார். வெற்றியும் புகழும் வேறு எங்குத்தான் செல்ல இயலும் ?

9. வினா வாக்கியங்களைச் சாதாரண வாக்கியங்களாக மாற்றி எழுதுக :—

(i) ' வெற்றியும் புகழும் வேறு எங்குத்தான் செல்ல இயலும் ?'

(ii) ' புண்படாது உலகில் புகழ் பெறலாகுமோ ?'

(iii) ' நும்மினும் பெரும் புகழ் படைத்தார் யாவருளர் ?'

10. செய்வினை வாக்கியத்தைச் **செயப்பாட்டுவினை வாக்கியமாக வும்**, செயப்பாட்டுவினை வாக்கியத்தைச் **செய்வினை வாக்கியமாகவும்** மாற்றி எழுதுக :—

(i) இந்துமத பாடசாலை நாட்டு நலத்திற் கருத்துள்ள நல்லோர் சிலரால் தோற்றுவிக்கப்பெற்றது.

(ii) அடியேனால் இயன்றவரையில் நமது நாற்படை களும் தத்தம் நெறியில் குறைவிலாது பணியாற் றப் பயிற்சி யளித்துள்ளேன்.

11. எதிர்மறை வாக்கியத்தை **உடன்பாட்டு வாக்கியமாகவும்** உடன்பாட்டு வாக்கியத்தை **எதிர்மறை வாக்கியமாகவும்** மாற்றுக :—

(i) கலங்கியுள்ள நீரில் சந்திர சூரியர்களுடைய பிரதி பிம்பத்தைத் தெளிவாய்க் காண முடியாது.

(ii) காலில் செருப்புப் போட்டுக் கொள்வாயானால் நீ முள்ளின்மேலும் சுலபமாய்ப் போகலாம்.

15. ஓவியமும் சிற்பமும்

ஓவியம் என்பது சித்திரம் தீட்டுதல். **சிற்பம்** என்பது கல், செம்பு, வெண்கலம் முதலிய உலோகங்களைக் கொண்டு உருவங்களை அமைத்தல். இவ்விரண்டு கலைகளும் நாகரிக நாட்டுக் கலைகள் ஆகும். இவை இரண்டும் இல்லாத நாடுகள் பிற்போக்கு நாடுகள் எனப்படும். இந்தியா இவ்விரு கலைகளையும் பண்டுதொட்டே வளர்த்து வந்தது.

சிந்து, பஞ்சாப் மண்டிலங்களில் புதைந்து கிடந்த மொஹெஞ்சொ-தரோ, ஹரப்பா என்னும் பழைய நகரங்கள் ஏறக்குறைய ஐயாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டவை. அங்குக் கிடைத்த கற்சிலைகள் வியக்கத்தக்க வேலைப்பாடு கூடியனவாக இருக்கின்றன. வெண்கலத்தால் இயன்ற (வார்ப்படம்) நடனமாதின் சிலையைக் கண்டு வியவாத அறிஞர் இல்லை. கால் தூக்கி ஆடும் நடராசர் சிலை என்று நம்பத்தக்க சிலை ஒன்றும் கிடைத்துள்ளது. மட்பாண்டங்கள், தாழிகள், பிற பொருள்கள் இவற்றின் மீது தீட்டப்பட்டுள்ள ஓவியங்கள் பேரழகுடன் பண்பட்ட வேலைப்பாடும் கூடியவையாக இருக்கின்றன. அவ்வோவியங்கள் எத்தகைய பழுதும் இன்றி அன்று போலவே இன்றும் இருத்தலே வியப்பினும் வியப்பு! இவற்றைக் கண்ணுற்ற ஆராய்ச்சியாளர், 'ஓவியக் கலையும் சிற்பக்கலையும் பண்டுதொட்டே இந்தியர்க்கு உரியனவாக இருந்து வருபவை' என்று முடிவு கூறுகின்றனர்.

இக்கலைகள் உண்டாகக் காரணம் என்ன? மனிதன், தனக்கு உண்டாகும் அறிவுப் பெருக்கம் ஒரு வகையில் அளவுக்கு மேற்படுமாயின், அதனைத் தன் உள்ளத்து உணர்வினின்றும் வெளிப்படுத்துகிறான். அவன் நாவலன் ஆயின் காவியத்தின் வாயிலாக வெளிப்படுத்துகிறான். படக்காரன் ஆயின் ஓவியத்தின் வாயிலாக வெளிப்படுத்து

கிறுன். உருச்சமைப்போன் ஆயின், உருவங்கள் மூலமாக வெளியாக்குகிறுன். இங்ஙனம் உணர்ச்சிவெளிப்படுதலால் உருப்பெறும் ஒன்றே **கைத்திறன்** (Art) என்பது. இத்திறன் பணத்தின் பொருட்டு உண்டாவதன்று; உள்ளத்து உணர்ச்சி மேலீட்டால் உண்டாவதே ஆகும். இத்திறமை நல்வழியிற் பயன்படுமாயின், இதனை அழகிய ஓவியங்கள், சிற்பங்கள், கவிகள், கட்டிடங்கள் முதலியவற்றில் கண்டு களிக்கலாம்; மாறுபடுமாயின், விகார வடிவங்களிற் கண்டு வெறுக்கலாம்.

இவ்வாறு உள் உணர்வின் தெளிந்த நிலையில் பெருக்கெடுத்து வெளிப்போந்த கைத்திறனுற்றுன் **பாபிலோன்** நகரம் பேரழகு பெற்றுத் திகழ்ந்தது; உலகப் புகழ் பெற்ற பண்டை **ரோமாபுரி** வனப்புற்று வாழ்ந்தது; நமது நாட்டிலும் **சாஞ்சி, அமராவதி, எல்லோரா, மஹாபலிபுரம்** முதலிய இடங்களில் உள்ள அழகொழுகும் அரிய காட்சிகள் தோன்றலாயின. இக் கைத்திறனுற்றுன் கண்ணேயும் கருத்தையும் தன்பால் ஈர்க்கும் **தாஜ்மஹால்** தோன்றியது; ஐம்புலன்களைத் தம் வழிப்படுத்தும் **அஜந்தா**க் குகைச் சிற்பங்கள் தோன்றலாயின. மொகலாய நகரங்களாக விளங்கிய டெல்ஹியும் ஆக்ராவும் இன்றளவும் எழில் மிக்க ஓவியங்களையும் சிற்பங்களையும் கொண்டிருத்தலைக் காண அவற்றைச் செய்தவரது அகத்தூய்மை நன்கு விளக்கமாகும். அப் பெருமக்கள் மறைந்தனர் ஆயினும், அவர்தம் கைத்திறனை - கலை உணர்வை, அவர்தம் செயல்கள் வாயிலாக உணர்ந்து உவக்கின்ருேம். மொகலாயப் பேரரசர் அரசியல் ஆண்மையாளர் மட்டும் அல்லர்; என்றும் அழியாத கலைகளை உலகிற்கு உணர்த்திய பெருமக்களும் ஆவர்.

சிற்றன்ன வாசல்

இவ்விரு கலைகளிலும் தென் இந்தியா இளைத்ததன்று. கி. மு. நான்காம் நூற்றுண்டு முதல் தமிழகம் புகுந்த



மஹேந்திர வர்மனும் அவன் மனைவியும்

சமண - பௌத்த முனிவர்கள் தமிழ் நாட்டுக் குகைகளில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் அக்குகைகளில் பல அரிய சிற்பங்களைச் செதுக்கியுள்ளனர்; சித்திரங்களைத் தீட்டியுள்ளனர். அவர்தம் மதங்களைத் தழுவிய பிற்காலத்தரசர் பலரும் குகைக் கோவில்களை அமைத்தனர்; வானளாவிய கோபுரங்களைக் கொண்ட கோவில்களை அமைத்தனர். இங்ஙனம் தமிழகத்தில் முதலில் பல குகைக் கோவில்களை அமைத்த பேரரசன் **மஹேந்திர வர்மன்** என்னும் பல்லவ அரசன் ஆவான். இவன் முதலில் சமணனாக இருந்து, பின் அப்பரால் சைவனாக மாறியவன். இவன் காலம் கி. பி. 600-630 ஆகும். இவன் அமைத்த குகைக் கோவில்களில் ஓவியமும் சிற்பமும் ஒருங்கே கண்டு களிக்கலாம். அவற்றுள் **சிற்றன்ன வாசல்** என்னும் ஊரில் உள்ள குகைக் கோவில் சிறந்ததாகும்.

சிற்றன்ன வாசல் திருச்சிராப்பள்ளிக்குத் தெற்கே இருபது கல் தொலைவில் இருக்கும் சிற்றூர் ஆகும்; நாரத்தமலைப் புகைவண்டி நிலையத்திலிருந்து இரண்டு கல் தொலைவில் உள்ளது. இங்குள்ள மலை மிகச் சிறியது. அதன் மீது ஏறிச் செல்லின், அழகின் இருப்பிடமாகவுள்ள குகைக் கோவிலைக் கண்டு களிக்கலாம். அதன் முன்புறம் சுவர் மறைப்பு உண்டு. அத்துடன் இரும்பு வேலியும் அமைக்கப்பட்டுள்ளது. அங்கொரு காவலாளியும் காட்சி அளிக்கிறான்.

முன் மண்டபத்தில் இரண்டு உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன: ஒன்று சமண தீர்த்தங்கரரான **பார்சவ நாதர்** உருவம்; மற்றது சமண சமயத் தலைவர் உருவம். தீர்த்தங்கரர் மறுபடியும் பிறவாதவர் என்பது சமணர் கொள்கை. ஆதலின், அதனை உணர்த்த அவர் தலைமீது **மூன்று குடைகள்** குறிக்கப்பட்டிருக்கும். சமயத்தலைவர்கள் பிறப்புடையவர் என்பதைக் குறிக்க ஒரு குடையே குறிக்கப்பட்டிருக்கும். பார்சவ நாதர் முடிமீது நாகம் ஒன்று படம் விரித்து நிழல் தருவதுபோலச் செதுக்கப்பட்டுள்ளது. மூல ஸ்தா

னத்தில் மூன்று சிலைகள் காண்கின்றன. அவற்றுள் இரண்டு முக்குடைகளை உடையவை.

சித்தன்ன வாசல் ஓவியக் கலையில் பெயர் பெற்ற இடமாகும். பல நூற்றாண்டுகள் கழிந்துவிட்டமையால், குகைக் கோவில் சுவர்களில் இருந்த ஓவியங்கள் அழிந்து பட்டன. ஆனால் தூண்கள், மேற்கூரை, மூலைகள் இவற்றின்மீதுள்ள காறைச் சுவர்க் கோலங்கள் (Frescoes) அழியாமல் இருக்கின்றன. இவை பண்டைத் தெளிவுடன் இராவிடினும், பண்டைப் பெருமையை அறிய விரும்பும் அறிவுடையார் கண்கட்கு அரிய விருந்தாகவே காட்சி அளிக்கின்றன. கூரையில் உள்ள சித்திரங்களே வனப்பு மிக்கவை; உணர்ச்சியை ஊட்டுபவை; கண்ணையும் கருத்தையும் கவர்பவை. வெளி மண்டபக் கூரைமுதல் மூலஸ்தானம்வரை பரவியுள்ள இவ்வேலைப்பாடு சமணர் துறக்கத்தை விளக்குவதாகும். வேலைப்பாட்டின் நடுவில் அழகிய மண்டபம் ஒன்று காணப்படுகிறது. அதில் நன்னெறியில் இருந்து காலமான சமணர் (பவ்யர்), தீர்த்தங்கரர் அறமொழிகளைக் கேட்பதாகச் சித்திரங்கள் காணப்படுகின்றன. படத்தில் மூன்று பவ்யர் காணப்படுகின்றனர். அவருள் ஒருவர் செந்நிறமானவர்; (செந்நிறம் தூய்மையைக் குறிக்கும் என்பது சமணர் கொள்கை.) அவரது ஒரு கையில் மலர்க்கூடை இருக்கிறது. மற்றொரு கை ஒரு தாமரை மலரைப் பறிக்க முனைகிறது. ஆரஞ்சு நிறமுடைய ஒரு பவ்யர் ஒரு தாமரை மலரைப் பறித்துத் தம் இடத்தோள்மீது வைத்துக்கொண்டு நிற்கிறார். மூன்றும் பவ்யரும் ஆரஞ்சு நிறத்தினர். இவரது இடத்தோளில் ஒரு கொத்துத் தாமரை மலர்கள் காணப்படுகின்றன; வலக்கையில் ஒரே மலர் இருக்கின்றது. இம்மூவர் சித்திரங்களும் தாமரை மலர்களும் வியக்கத் தக்கவாறு பல உறுப்புகளுடன் தீட்டப்பெற்றுள்ளன. இச்சித்திரங்கள் இயற்கை மலர்களைப் பெரிதும் ஒத்திருத்தலே வியப்புக்குரியது.



நடன மாதின் ஓவியம்

இக் குகைக்கோவில் தூண்கள் இரண்டில் காணப்படும் **நடனச் சிலைகள்** இரண்டும் பேரழகு வாய்ந்தவை. நடனக்கலையில் கைதேர்ந்த வேலைக்காரரே இவற்றைத் தீட்டியிருத்தல் வேண்டும். இவை உயிர் ஓவியங்களாகக் காட்சி அளிக்கின்றன; நடனக் கலையின் நுட்பமான பகுதிகளை உணர்த்தி நிற்கின்றன. தென்புறத் தூண் ஒன்றில் இச்சிற்ப-ஓவியக் கலைகளை இக் குகைக் கோவிலில் உணர்த்த முனைந்த மஹேந்திர வர்மனது முடியுடைய தலை தீட்டப்பட்டுள்ளது. அதன் அருகில் அவன் மனைவியின் உருவமும் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. சுருங்கக் கூறின், ஓவிய - சிற்பக்கலைகளில் உணர்ச்சி கொண்ட மக்கட்குச் சிற்றன்ன வாசல் சீரிய காட்சிகளை நல்கும் என்பதில் ஐயமில்லை.

அழகு ஒழுகும் இந்த உலகம் இறைவனுடைய சிற்ப-ஓவியத் திறனைக் காட்டுவது. அவனது சிற்பத் திறனை மக்கட் படைப்பிலும் மலை முதலிய கனப்பொருள்களிலும் கண்டு களிக்கலாம். அவனது ஓவிய ஆற்றலை இயற்கைக் காட்சிகள் மூலம் கண்டுகண்டு இன்பம் எய்தலாம். இவ்விரண்டும் கலந்துள்ள இடமே அழகொழுகும் ஆனந்த இடமாகும். அதுவே அமைதிக்கு அமைந்த இடமாகும். அதுவே அழகு அடைக்கலம் புகுந்துள்ள இடமாகும். அழகு என்பது யாது? கண்ணையும் கருத்தையும் ஈர்க்கும் பொலிவே **அழகு** என்பது. இவ் வழகுள்ள இடங்களே ஓவியங்களும் சிற்பங்களும் களிநடம் புரியும் மேடைகள் ஆகும். இத்தகைய இன்ப இடங்களில் **சிற்றன்ன வாசல்** ஒன்றாகும்.

இத்தகைய இன்பக் கலைகளை விளக்கி, இவற்றின் வாயிலாக நமது தொன்மை நாகரிகத்தை உலகிற்கு உணர்த்தி, நம் கண்ணையும் கருத்தையும் கவரத்தக்க காட்சிக்கு இனிய நல்லிடங்களைச் சென்று காணுதல் நமது கடமை ஆகும். இவற்றைப் போற்றி வளர்த்தல் நமது தலையாய கடமையாகும்.

அரும்பொருள்

பண்டு - பழையகாலம். தொட்டே - முதலே. பாபிலோன் - இன்றைய இராக் நாட்டில் இருந்த சிறப்புடை நகரம். வனப்பு - அழகு. சாஞ்சி - புத்தசமய சிற்ப ஓவியங்களை விளக்கும் அழகிய இடம். அமராவதி - கிருஷ்ண ஜில்லாவில் உள்ள இடம்; புதைபொருள் ஆராய்ச்சிக்குப் பெயர்பெற்ற இடமாகும். எல்லோரா - நைசாம் சமஸ்தானத்தில் இருக்கும் கற்குகைகள். அஜந்தா - நைசாம் சமஸ்தானத்தில் உள்ள கற்குகைகள். எழில் - அழகு. பேரரசர் - சக்கரவர்த்தி. அப்பர் - திருநாவுக்கரசர். களிநடம் - மகிழ்ச்சியோடு கூடிய நடனம். தொன்மை - பழமை.

கேள்விகள்

1. ஓவியம்—யாது? சிற்பம்—யாது?
2. புதைந்த நகரங்கள் எவை? அவற்றில் காணப்பட்டன யாவை?
3. கலைகள் உண்டாதல் எங்ஙனம்?
4. ஓவிய—சிற்பக் கலைகளின் இருப்பிடங்களாக விளங்கியவை எவை?
5. மொகலாயப் பேரரசர் சிறப்பு யாது?
6. சிற்றன்னவாசல் ஓவியச் சிறப்புடையது—விளக்குக.
7. சிற்றன்னவாசல் சிற்பச் சிறப்புடையது—விளக்குக.
8. இறைவனுடைய சிற்ப—ஓவியத் திறமைகளை விளக்குவன எவை?
9. நமது கடமை என்ன?

இலக்கணம்

பிள்ளைகளே, இதுவரை கூறியுள்ள இலக்கணச் செய்திகளை உளங்கொண்டு, **தவருகப் பேசாமல், தவருக எழுதாமல்** இருக்க நீங்கள் பழகவேண்டும். உங்கள் பேச்சு முறை **பிழையற்றதாக** மாறினுல், எழுத்து முறை தாஞகவே செம்மையாக அமையும். அதனுல் பிழையற்ற சொற்களையே பேசப் பழகுங்கள். நீங்கள் நல்ல தமிழ் பேசும் நன்மக்களாக அமைந்து நல்வாழ்வு வாழ்வீர்கள்.

பயிற்சி

1. இப்பாடத்தின் இரண்டாவது பகுதியில் உள்ள ஆண் பால் வினைமுற்றுகளை எடுத்து எழுதுக.

2. அவற்றைப் பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பல வின்பால் வினைமுற்றுகளாக மாற்றி எழுதுக.

3. அவற்றைத் தன்மை முன்னிலை வினைமுற்றுகளாக மாற்றி எழுதுக.

4. அவற்றைத் தன்மைப் பன்மை, முன்னிலைப் பன்மை வினைமுற்றுகளாக மாற்றி எழுதுக.

5. காண், தோன்று, செய், வா, நில்—இவை பகுதியாக வருமாறு முக்கால வினைமுற்றுகளை அமைக்க.

6. அவற்றையே வினையெச்சங்களாகவும் பெயரெச்சங்க ளாகவும் மாற்றுக.

7. தொழிற்பெயராகவும், வினையாலணையும் பெயராகவும் மாற்றுக.

8. வினைத்தொகை நிலைத்தொடராக அமைக்க.

9. தன்வினை வாக்கியத்தைப் பிறவினை வாக்கியமாகவும், பிறவினை வாக்கியத்தைத் தன்வினை வாக்கியமாகவும் மாற்றி அமைக்கவும் :

(i) இந்தியா இவ்விரு கலைகளையும் பண்டுதொட்டே வளர்த்து வந்தது.

(ii) இக் கைத்திறனுற்றுன் கண்ணையும் கருத்தையும் தன்பால் ஈர்க்கும் தாஜ்மஹால் தோன்றியது.

(iii) பிற்காலத்து அரசர் பலரும் குகைக் கோவில்களை அமைத்தனர்.

(iv) கைத்திறனுற்றுன் பாபிலோன் நகரம் ஒளிபெற் றுத் திகழ்ந்தது.

10. ஒரு வாக்கியமாகச் சேர்த்தெழுக ;

மொகலாயப் பேரரசர் அரசியல் ஆண்மையாளர் மட் டும் அல்லர் ; என்றும் அழியாத கலைகளை உலகுக்கு உணர்த்திய பெருமக்களும் ஆவர்.'

11. 'ஓவியமும் சிற்பமும்,' 'சிற்றன்னவாசல் குகைக் கோவிற் சிற்பங்கள்'—இவ்விரு பொருள்களையும் பற்றி இரு வேறு **கட்டுரைகள்** வரைக.

16. இந்தியாவும் கைத்தொழிலும்

உலகத்தில் நாகரிகம் சிறந்துள்ளனவாகக் கருதப் படும் நாடுகள் பலவற்றிலும் கைத்தொழில் முதன்மை பெற்று மிக்க அளவில் பெருகி உள்ளது. அந் நாடுகளில் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களே மிக்க வருமானம் பெறுகின்றனர். அரசாங்கத்தார்க்கும் கைத்தொழிலின் மூலமாகவே அதிக வருமானம் கிடைக்கின்றது. அந் நாடு களின் செல்வ நிலையும் அதனாலேயே உயர்வடைந்து உள் ளது. எந் நாட்டினும் கைத் தொழிலாற் கிடைக்கும் வருமானத்தினும் விவசாயத்தாற் கிடைக்கும் வருமானம் மிகவும் குறைந்ததாகவே இருக்கிறது. அதனாலேயே நாக ரிக நாடுகள் கைத் தொழிலையே முதன்மையானதாகக் கருதுகின்றன. விவசாயம் ஒன்றையே பற்றிக் கைத் தொழிலைப் புறக்கணித்து வருவதனாலேயே நம் நாடு செல்வ நிலையில் சிறப்பிழந்திருக்கிறது.

இங்கிலாந்தில் உள்ள ஒவ்வொரு தொழிலாளியும் சராசரி இருநூறு பவுன்கள் பெறுமானமுள்ள பொருள் களை ஆக்கி வருகின்றனர். இவ்வொரு வகையில் மட்டுமே அந் நாட்டுக்கு ஆண்டில் இருநூற்றிருபது கோடி பவுன் கள் வருமானம் கிடைப்பதாகக் கணக்கு எடுக்கப்பட்டுள் ளது. ஆயின், நம் மாகாணத்தில் உள்ளோர் அனைவ ருடைய வருமானத்தையும் கூட்டிக் கணக்கிடினும் இருபத் தைந்து கோடி பவுன்கட்குமேல் உயரவில்லை. ஐம்பது ஆண்டுகட்கு முன்னர் ஜப்பான் நாடு நம் நாட்டினும் இழிந்த நிலையில் இருந்தது. முப்பது ஆண்டுகட்குமுன் வரை நூலும் உடையும் நம் நாட்டினின்றும் ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. ஆயின், இன்று ஜப்பா னின் வருமானம் வியக்கத்தக்க அளவில் பன்மடங்கு பெருகியுள்ளது. இப்பொழுது நூலுக்கும் ஆடைக்கும் நாம் அதனை எதிர்பார்த்து நிற்கிறோம். அது செல்வத்தி லும் சிறப்பிலும் உயர்ந்து உலக வல்லரசுகளுள் ஒன்று

கத் திகழ்கின்றது. இழி நிலையில் இருந்த கானடா நாடும் கைத் தொழிலின் உதவியால் இப்பொழுது உயர் நிலை எய்தி விளங்குகின்றது. பத்துக்கோடி மக்கள் தொகையே உள்ளதாகிய அக் கானடா தேசம் செல்வத்தில் தலை சிறந்து நிற்கிறது. முப்பத்தைந்து கோடிகட்கு மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்டுள்ள நம் நாடு வறுமை நிலையில் வாடுகின்றது. நாம் ஜப்பான், கானடா ஆகிய நாடுகளிடமிருந்து முன்னேற்றத்திற்கு உரிய இரகசியத்தை அறிய வேண்டும்; அவற்றைப் பின்பற்றிக் கைத் தொழிலும் ஓம்பி முன்னேற முயல வேண்டும்.

நம் வாழ்க்கைக்கு வேண்டும் பல பொருள்களையும் நாமே ஆக்கிக் கொள்ளுதல் வேண்டும். அதற்குக் கைத் தொழில் இன்றியமையாதது. நம் நாட்டுக் கைத் தொழில்கள் நம்மவர்களாலேயே நடத்தப்படுதல் வேண்டும். அந் நிலையிலேயே அவற்றுல் கிடைக்கப்பெறும் பொருள் நம்மிடமே இருக்கும். நாம் நம் நாட்டுப் பொருள்கட்குக் கொடுக்கும் பணம், நம் நாட்டுத் தொழிலாளர்களையே அடைவதால், நம்மிடையே சுற்றிச் சுழன்றுகொண்டிருக்கும். அதனுல் நாட்டில் கைத் தொழிலும் வர்த்தகமும் பெருகும். நாம் இப்பொழுது உழவுத் தொழிலினின்று பெறும் வருமானத்தையும், நாட்டின் மூலப் பொருள்களை விற்றுக் கொள்ளும் விலையையும் அயல் நாட்டு வணிகர்கட்கு அள்ளிக் கொடுத்து, வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களைக் கொள்ளுகிருேம். அவ்வாறு வெளிநாடு செல்லும் செல்வம் மீண்டும் நம்பால் திரும்பாது. அவர்கள் நம் நாட்டு மூலப் பொருள்களையும் அவற்றிற்கு விலையாகத் தந்த பணத்தையும் ஒருங்கே கவர்ந்து கொள்ளுகின்றனர். நாம் இரண்டையும் இழந்து வறுமையாற் சிறுமை உற்று வருந்துகிருேம். ஆகவே நம் நாட்டு மூலப் பொருள்களைக் கொண்டு நமக்கு வேண்டும் பொருள்கள் அனைத்தையும் நாமே செய்து கொள்வதே நம்மை உயர்த்திக் கொள்வதற்குரிய நெறியாகும்.

நாட்டில் நடைபெறுதற்குரிய தொழில்களை உயர் தரப் பெருந் தொழில்கள், இடைத்தரத் தொழில்கள், குடிசைத் தொழில்கள் என மூன்று வகைகளாகப் பிரிக்க லாம். பருத்தி ஆலை, சணல் ஆலை, நிலக்கரித் தொழில், இரும்புத் தொழில், கட்டிடப் பொருள் தொழில், இருப் புப் பாதைப் பொருள் தொழில், கப்பல் தொழில் முதலி யன உயர்தரப் **பெருந் தொழில்** வகையைச் சேர்ந்தவை. நாட்டின் செல்வம் பெருகுதற்கு இவை இன்றியமையா தனவாகும். காகிதத் தொழில், சர்க்கரைத் தொழில், எண்ணெய் ஆலைத் தொழில், தோல் பதனிடும் தொழில், கண்ணாடிப் பொருள் தொழில், இரசாயன எரு, மருந்து, அலுமினியம் முதலியன உற்பத்தி செய்யும் தொழில்கள் ஆகியவை **இடைத்தரத் தொழில்களாகும்.** கையால் **நூல்**

நூற்றல், நெய்தல், தோற்பொருள் செய்தல், மட்பாண் டம் வனைதல், தீக்குச்சி செய்தல், விவசாயக் கருவிகள் செய்தல், மரத்தைக் கொண்டு பல்வேறு பொருள்கள் செய்தல் போல்வன **குடிசைத் தொழில்கள்** எனப்படும். ஒவ்வோர் ஊரும் இவற்றுள் ஏதேனும் ஒருவகைத் தொழி லைத் தொடங்கி நடத்த முயலல் வேண்டும். இங்ஙனம்

ஊர்களில் தொழிற்சாலைகள் தோன்றுவதால் நாட்டில் வாணிகமும் செல்வமும் பெருகும்; உழவுத் தொழிலும் உயர்வடையும்; மக்கள் யாவரும் தொழில் பெற்று வறுமை நீங்கி வளமுற வாழ்வர்.

நாட்டில் கைத்தொழில்களைத் தொடங்கி நடத்துவதற்குமுன் மக்களிடையே தொழிற் கல்வியைப் பரப்பி, அத் துறையில் பலருக்கும் பயிற்சி யளிக்கவேண்டும். அன்றியும் இதுபோது நாட்டில் நடத்தப்பட்டு வரும் எல்லாக் கைத் தொழில்களையும் பற்றிய முழு விவரங்களையும் நன்கு ஆராய்ந்து அறிந்துகொள்ள வேண்டுவது இன்றியமையாததாகும். நடைபெறும் கைத் தொழில்கள், அவற்றில் ஈடுபட்டுள்ளோர் தொகை, அவர்கட்குக் கொடுக்கப்படும் கூலியின் அளவு, நாட்டில் கிடைத்தற்குரிய மூலப் பொருள்களும், அவை கிடைக்கும் இடங்களும், அவற்றின் அளவும், ஏற்றுமதி யாகிவரும் பொருள்கள், இறக்குமதியாகும் பொருள்கள் ஆகியவற்றை முன்னர் அறிந்து கொண்டாற்றான், இங்கு எவ்வெத் தொழில்களைத் தொடங்கி, எவ்வெப் பொருள்களைச் செய்து கொள்ளுதல் கூடும் என்பது நமக்குப் புலப்படும். இவற்றை அறிந்த பின்னர், நன்கு ஆழ்ந்து கைத் தொழில் முன்னேற்றத்திற்குரிய திட்டம் ஒன்றை வகைபெற வகுத்துக்கொண்டு, அதற்கியையத் தொழில்களைத் தொடங்கி நடத்த முயல வேண்டும்.

கைத் தொழில்களைத் தொடங்கிச் சிறப்புற நடத்துதற்கு நிருவாகம், பணம், இயந்திரம், ஆட்கள், பொருள்கள், சந்தை ஆகிய ஆறு சாதனங்களும் இன்றியமையாது வேண்டற்பாலன. கைத் தொழில்களை நிருவகிக்கும் திறமை வெறுங் கல்வியினால் பெறத்தக்கதொன்று அன்று. ஆகையால், அத் திறமை வாய்ந்தோர் நாட்டில் அரியராவர். ஆகவே, அத்தகையோரை முயன்று தேடி அமர்த்திக் கொள்ளுதல் வேண்டும். அவர்கள் தங்கள் தொழில் செய்வோருடன் ஒத்துழைத்து, தொழில் வளர்ச்

சிக்கும், முதலாளிகளின் நன்மைக்கும் உரிய முறையில் தங்கள் நிருவாகத்தைத் திறமையாக நடத்த வேண்டும். தொழில் நடத்துதற்கு வேண்டும் முதற் பொருளைப் பல ருடைய உதவியைக் கொண்டு திரட்டுதலே சிறந்த முறை. இம் முறையில் முதல் பொருட்டுப் பங்கு உதவுவோர் இலாபத்தில் பங்கு பெறுதற்கு உரியராகலின், தொழிலின் வளர்ச்சியில் கருத்துடையராய், அதற்குத் தம்மால் ஆவன புரிவர். வேண்டும் அளவு முதற் பொருள் திரட்டப்பட்டு விடுமாயின், அதனைக் கொண்டு வேண்டும் இயந்திரங்களை எளிதில் பெறலாம். நமது நாடு மிக்க ஜனத்தொகை உடையதாகையால், இங்குத் தொழில் செய்வோர்க்குப் பஞ்சம் இல்லை.

இந்தியா மூலப் பொருள்கள் நிறைந்த நாடு. ஆண்டு தோறும் இங்கிருந்து அளவற்ற மூலப் பொருள்கள் அயல் நாடுகட்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின் றன. நாம் அவற்றைக்கொண்டு நமக்கு வேண்டும் பொருள்கள் அனைத்தையும் குறைவறச் செய்து கொள்ள லாம். தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை விற்பதற்குப் பொதுவான சந்தைகளும் உள்ளன. போக்கு வரவுக்கு உரிய வசதிகளும் சாதனங் களும் நமக்கு வேண்டற்பாலன. அவ் வகையில் அரசிய லாரும் இரயில்வே அதிகாரிகளும் நம்மோடு ஒத்துழைத்து உதவி புரிய முன் வருதல் வேண்டும். நம் நாட்டு அரசாங் கம் இங்குத் தொடங்கிச் செய்யப்படும் கைத் தொழில் களைப் பாதுகாத்தற் பொருட்டுப் பிற நாட்டுப் பொருள் கட்குச் சுங்க வரி விதிக்கும் முறையை மேற்கொள்ளல் வேண்டும். இதுகாறும் கூறிவந்த சாதனங்களைப் பெற்று விடுவோமாயின், இப்பொழுதே இங்குப் பல கைத் தொழிற்சாலைகளை நிறுவி, அவற்றின்மூலம் பல கோடி ரூபாய்கள் பெறுமான பொருள்களைச் செய்யலாம்.

நம் நாட்டில் இன்னும் தொடங்கப்படாத கைத் தொழில்கள் பல உள்ளன. பல்வேறு இயந்திர வகைகள்,

தொடர் வண்டி எஞ்சின்கள், மோட்டார் வகைகள் போன்ற பெரிய தொழில்கள் இன்னும் இங்குத் தொடங்கி நடத்தப்படவில்லை. இங்கு இரயில்கட்கும் இராணுவத்திற்கும் வேண்டும் எல்லாப் பொருள்களையும் செய்தற்குரிய தொழிற்சாலைகள் பல நிறுவப்படுதல் வேண்டும். இப்பொழுது அமைக்கப்பட்டுள்ள நெசவுத் தொழிற்சாலைகள் நம் நாட்டின் தேவைக்குப் போதிய அளவு ஆடைகளை உற்பத்தி செய்யக் கூடியனவாக இல்லை. ஆகவே, அவையும் பெருகுதல் வேண்டும். இத் தகைய தொழில்களுள் சிலவற்றைச் செல்வர் பலர் சேர்ந்து கூட்டு முறையில் நடத்துதல் கூடும். சிலவற்றை அரசாங்கத்தாரே ஏற்றுக்கொண்டு நடத்துமாறு செய் தல் வேண்டும்.

இவை யாவினும் முக்கியமாக நாம் செய்ய வேண்டு வது மற்றொன்று உண்டு: அது, நாட்டில் உள்ள பல் கலைக் கழகங்கள் ஏட்டுக் கல்வி ஒன்றையே பரப்புவ தோடு அமையாது தொழில் துறையிலும் கருத்தைச் செலுத்துமாறு செய்வதாகும். அவை பழைய முறைகளைக் கைவிட்டுப் புதிய முறைகளைக் கைக்கொள்ள வேண்டும். மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய உணவு, உடை, இருத்தற்குரிய இடம் முதலியவற்றைப் பெறுதற் குரிய வழிகளை மாணுக்கர்கட்குப் போதிக்க வேண்டுவது பல்கலைக் கழகங்களின் கடமைகளுள் தலையாயது ஆகும். கலாசாலைகளிற் பயிலும் மாணவர்கட்கு, அவர்கள் தம் படிப்பை முடித்துக்கொண்டு வெளியேறினதும் ஏதே னும் ஒரு தொழில் துறையில் இறங்குதற்கு உதவியாகத் தக்க அளவில் சில தொழில்களிலேனும் பயிற்சியளிக்க முன்வரல் வேண்டும்.

இவ்வளவும் நேர்பட்டுவிடின், சில ஆண்டுகளுக் குள் நம் நாட்டை உலகில் உள்ள மற்றைய கைத்தொழில் நாடுகள் யாவினும் சிறந்து விளங்குமாறு செய்தல் எளி தில் இயலும்; செல்வம் செழித்து இன்பம் பெருகச் செய்

தல் அமையும்; பெருமை மிகுந்து தலைமை எய்துமாறு செய்தல் கூடும். ஆயின், சுதந்திரம் இன்றி இவை நேர் படுவது எங்ஙனம் கூடும்? நம் நாட்டு அரசாங்கம் நம் மவர் கையில் இல்லாதவரை அது கனவே ஆகும்.

கேள்விகள்

1. நாகரிக நாடுகள் கைத்தொழிலையே முதன்மையானதாகக் கருதுவது ஏன்?
2. கைத்தொழிலால் உயர்ந்த நாடுகள் எவை?
3. எந்நிலையில் நம் நாட்டுப் பொருள் நம்மிடையே நிற்கும்?
4. நம்மை உயர்த்திக் கொள்வதற்குரிய வழி யாது?
5. கைத்தொழில் வகைகள் யாவை? அவ் வகைகட்குரிய தொழில்கள் எவை?
6. மக்கள் வறுமை நீங்கி வளமுற வாழ்வதற்குச் செய்ய வேண்டுவது யாது?
7. கைத்தொழிலைத் தொடங்கி நடத்துவதற்குமுன் நாம் செய்ய வேண்டுவன யாவை?
8. கைத்தொழில் சிறப்பாக நடைபெறுவதற்குரிய சாதனங்கள் யாவை?
9. கைத்தொழில் வளர்ச்சிக்கு முக்கியமாக நாம் செய்ய வேண்டுவது என்ன?
10. கைத்தொழில் வளர்ச்சிக்குப் பல்கலைக் கழகங்களும் அரசாங்கமும் செய்ய வேண்டும் உதவிகள் எவை?
11. இவை யாவும் எந்நிலையில் நேர்படுவனவாகும்?

பயிற்சி

1. ஆண்பால் வினைமுற்றைப் பெண்பால் வினைமுற்றாகவும், பெண்பால் வினைமுற்றை ஆண்பால் வினைமுற்றாகவும் மாற்றி எழுதுக:—வந்தான், அறியாள், துணிந்தாள், முனைந்தாள், மாற்றினான், திகழ்ந்தான்.
2. பெண்பால் கூறுக:—அவன், ஒருவன், சிறுவன், தம்பி, கணவன், மகன், அண்ணன், தலைவன்.
3. கைத்தொழில்—அதன் அவசியம்—அதனைப் பெருக்குதற்குரிய முறை—இக்குறிப்புகளைக் கொண்டு கைத்தொழிலைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

17. வள்ளல் ஆய் - அண்டிரன்

(ஒரு செந்தமிழ் நாடகம்)

திரு. சிவ. குப்புசாமிப் பிள்ளையவர்கள்

நிலமகட்கு அணி முகமாகும் நம் தமிழகம், பண்டு முடியுடை வேந்தர்களானும் பல குறுநில மன்னர்களானும் ஆளப்பட்டு வந்தது. குறுநில மன்னர்களுள் ஒரு சிலர் கொடுப்பதிற் பின்வாங்காத கொடைத்திறனும், அஞ்சாது போர் புரியும் தோள் வன்மையும் வாய்க்கப் பெற்றுப் புலவர் பாடும் புகழுடையோராய், தம் குறுநிலத்தைப் பெருமையுறப் புரந்து வந்தனர். அத்தகையவருள் **வள்ளல் ஆய் - அண்டிரன்** என்பவனும் ஒருவன் ஆவான்.

ஆய் அண்டிரன் கடையெழு வள்ளல்களுள் ஒருவன்; **பொதிய** மலையைச் சார்ந்த **ஆய்** என்னும் செழிப்பு மிக்க நாட்டைப் பெற்றவன்; **கவிர** மலைக்குக் காவலன்; வேளிர் குடிக்குத் தலைவன்; முடியுடை வேந்தர்க்குப் பெண் கொடுத்தற்குரிய உழுவித் துண்ணும் வேளாளர் மரபினன். இவன், இளமை தொட்டுக் கல்வி கேள்விகளில் சிறந்தவனாய், வில், வாள் முதலிய படைக்கலப் பயிற்சிகள் மிகுதியும் பெற்றுப் பெரியோரைப் பணிந்து, எளியோரைப் பேணி, யாவரும் போற்ற இனிது வாழ்ந்து வந்தான்.

இஃதறிந்த கொங்கு மன்னன், இவன்பால் அழுக்காறுற்றான்; தனது நாற்படைகளையும் திரட்டினான்; ஆய் வேள்மீது கொடுஞ்சமர் முறுக்கக் கருதினான்; தன் அமைச்சர்களையும் படைத் தலைவர்களையும் கூட்டினான்; ஆய் அண்டிரன்மீது போர் தொடங்குவது பற்றி அவர்களோடு சூழனிற்றான்; இந்நிலையிலேயே மேல் வரும் கதை தொடங்குகிறது.

இயல்—1. காட்சி—2.

இடம் :—கொங்கு மன்னனது அவைக்கூடம்.

காலம் :—முற்பகல்.

உறுப்பினர் :—கொங்கு வேந்தன், பெருங்குடிலன், நல்லாயன், வீரநாதன், வச்சிரமுடியான், காவலன்.

[கொங்கு மன்னன் தனது படையெடுப்பைப்பற்றி அமைச்சர், படைத்தலைவருடன் ஆய்தல்]

கொங்கு வேந்தன் :—(அமைச்சனை நோக்கி) பெருங்குடில! என் உள்ளம், ஆய் நாட்டுப் படையெடுப்பில் ஆழ்ந்து கவல்கின்றது. ஆய் மன்னன் அண்டிரன் தன் இளமை தொட்டுத் தக்கவரை அடுத்துக் கல்வி கேள்விகளிற் சிறந்து, உலகியல் முறைகளையும் போர் இயல் நுணுக்கங்களையும் செவ்வனே உணர்ந்துளானும். மேலும் கற்றவர் துணை சூழ என்றும் இருத்தலோடு, எவரும் எளிதிற் கொள்ள முடியாதவாறு, தனது அரசிருக்கையை நால்வகை அரணும் பொருந்துமாறும் அமைத்துள்ளானும். இவைபற்றிய நின் கருத்தென்ன ?

பெருங்குடிலன் :—கொங்கின் கோவே! தாங்கள் எதற்கும் அஞ்சற்க. நெருநல்தான் நம் ஒற்றரின் வழியே அவனது நிலைகள் பலவும் உணர்ந்தேன். ஆய் அண்டிரனுக்குப் பொதியம் முழுவதும்கூட உரியதன்று. அவ் வரையின் ஒருபாலுள்ள ‘கவிரம்’ என்ற சிறுமலையும் அதனோடு சார்ந்த நிலனுங் காடுமே அவனுக்காகும். மேலும் அண்டிரனது அரசிருக்கையாகிய ஆய்குடி தக்க அரண்களும் படைகளும் சூழப் புரக்கப் பெறினும், நம் திறன் மிக்க, கூற்று மஞ்சக் கொடுஞ் சமர் புரியும் படையின் முன் அவை யாவும் நீரால் அவியுறும் நெருப்புப்போல் ஒழியும்.

நல்லாயன் :—அரசர் பெரும! நம் முதலமைச்சர் மொழிந்தன யாவும் உண்மையே. எனினும், எதையும் நன்கு ஆய்ந்தே நாம் முயலுதல் முறையாம். போர் எனக்

கூறுமுன், நாம், நம் பொருள்நிலை, படைவலி, துணைநலம் இவற்றை நம் மாற்ருன் கொண்டுள்ளனவோடு ஒத்து நோக்கவேண்டும். நாம் பெற்றவை நம் மாற்ருனினும் மிகுத்து முனைக்குமாயின், போர்க்கெழுவது அறிவுடைமையாகும். நெருநல் இவண் போந்த ஒற்றனை, யானும் சிறிது உசாவ நேரிட்டது. அவன் கூறியவற்றுள் ஒரு சில, என்னை மிகவும் அச்சுறுத்தின. ஆய் மன்னன் தென் பாண்டி நாட்டின் ஒரு பகுதிக்கே தலைவன் தான். தாங்கள் அந் நாட்டினும் நான்கு மடங்கு பரந்துள்ள இக் கொங்கு நாட்டின் இறைவர் என்பதிலும் ஐயமின்று. எனினும், இந்நிலப் பெருக்குமட்டும் வெற்றிக்குப் பற்றுக்கோடாகாது. ஆய் நாடு நில அளவில் சுருங்கினும் பொருள் நிலை, படைத்திறன் இவற்றுள் நம்மினும் மிக்கதென வெள்ளிடை மலையென விளங்குகின்றது. இன்னும் வேள் ஆயைப் பாடிச் செல்வார்க்கு அவன் யானையை மற்றைப் பொருள்களினும் மிகுத்து வழங்குகின்ருன் என்ற செய்தியொன்றே, அவன் நாட்டின் களிற்றுப் பெருக்கை உணர்த்துவதால், அவன் மிகுந்த யானைப் படையுடையவன் என்பதூஉம் அறியலாகும். ஆதலால் தாங்கள் எளியனது புல்லுரையைச் சிறிது உளங்கொண்டு உன்னவேண்டும்.

பெருங்குடிலன் —(அசட்டுச் சிரிப்புடன்) பெரும! இந் நல்லாயன் என்றும் முற்போக்கின் முட்டுக்கட்டைதான். விரைந்த அறிவெழுச்சி அற்றவன். எத்தகைய சிறந்த யானைப் படையும் பொருள் வலிமையும் நம் கொங்கின் கொடும்படை முன் என்னவாகும் என்பதை இவன் இன்னும் ஓர்ந்திலன். தாங்கள் ஆணை தரின் நம் படைத் தலைவன் வீரநாதனை ஈண்டு அழைக்கின்றேன். அவன் வழியே நம் நிலைமையைத் தாங்கள் எளிதில் உணரலாகும்.

கொங்கு வேந்தன் :—நன்று முதலமைச்ச! நம் துணை அமைச்சர் நல்லாயனுர் சற்று மெதுவுள்ளவர்தான். அவரது கருத்து ஈண்டுற்ற செயலுக்குப் பொருந்தாது

என்பதே எனது துணிபு. நீவிர் அவ் வீரநாதனை இவண் விரைவிற் கொணர்க.

பெருங்குடிலன் :—இறைவ! இதோ அழைக்கின்றேன். (பணியாளனை நோக்கி) காவல! நீ சென்று நம் தானைத் தலைவர் வீரநாதனை இவண் கடிதிற் கொணர்க.

பணியாளன் :—(வணங்கி) தங்கள் திருவுளப்படியே! (ஓடுகின்றான்.)

வீரநாதன் :—(வணக்கத்துடன்) கொங்குப் பெரு வேந்தே! எளியனின் வணக்கம் தங்கள் திருவடிக்குரிய தாகும்! அடியேனைத் தாங்கள் எண்ணியதெதற்கோ? அறிகிலேன். பொறுத்தருள்க.

கொங்கன் :—வீரநாத! நம் படையெடுப்பின் ஏற் பாடு எவ்வாறுளது? ஒருக்கணமும் வீண் போக்காது நம் படைத் திறனைப் பெருக்கக் கருதினேமே! நம் போர்ப் படைகள் யாவும் இதுபோது செவ்விதின் அணி வகுக்கப் பெற்றனவா?

வீரநாதன் :—பெரும! இதில் ஏன் தங்கட்கு ஐயம்? வீரநாதன் இருக்குமளவும் காலம் வீணாகுமா? நம் நாற் படைகளும், தாங்கள் இதுபோது கருதின் உழுந்து உருளு முன் இவண் கூடும். இங்கு நிற்கும் நம் அணித் தலைவன் வச்சிர முடியான், நமது படைகட்கு ஓயாமல் அல்லும் பகலுமாகக் கொடுத்திருக்கும் பயிற்சி சொல்லும் தரத் தன்று. சுருங்கக் கூறின் நம் படையின் வளர்ச்சி கண்டு, முடியுடை மூவேந்தருள் ஒருவராய சேரமானே தளர்ச்சி பெற்றார் எனில் இக்குறுநிலனாய ஆய் எம்மாத்திரமாவன்?

பெருங்குடிலன் :—வீரநாத! நன்று கழறினாய்! (மன்னனை நோக்கி) பெரும! இப்போதாயினும் தங்கள் ஐயப் பாடு தெளிவுறலாகுமென நம்புகிறேன். நம் படைத் தலைவன் வீரநாதனும் அணித்தலைவன் வச்சிரமுடியானும் ஒரு படைக்குத் தலைமை பூண்டால் வெற்றியும் புகழும் வேறு எங்குத்தான் செல்லுதற்கியலும்? பெரும! நம்

வச்சிர முடியானின் வாயுரைக்கும் தாங்கள் அருளுடன் செவி சாய்த்திடுக.

வச்சிர முடியான் :—கொங்கு வள நாட்டின் கோவே! எளியேன் அடிபணிகின்றேன். அடியேன் இயன்றவரையில் நமது நாற் படைகளும் தத்தம் நெறியில் குறைவிலாது பணியாற்றப் பயிற்சி அளித்துள்ளேன். ஒவ்வொரு படையும் நம் நாட்டின் உயர்வுக்கும், தங்களது தகைமைக்கும் நம் குடி மக்களது வாழ்விற்கும் எத்தகைய இடர்ப்பாடும் வராத வழி, தம்முயிர் போமளவும் முன் வைத்த காலைப் பின் வைக்காது, கடுஞ் சமர் புரியும் பேராற்றல் வாய்ந்தது. நமது காலாட் படைஞர் நான்கு திசைகளினும் பருந்துகள் வட்டமிடுமாறு புலால் மணக்கும் கொடிய நீண்ட வேல் படையைக் கையில் தாங்கியுளர். எமனது சிவந்த நாக்குப்போல, நாளும் பகைவரது குருதியைக் குடித்தும் வேட்கை தணியாது அலைகின்ற உடை வாளை அவர்களதும் உறையினிலிட்டு அசைத்துக்கொண்டுளர். காற்றினும் கடுகிச் செல்வனவும் காலன் பற்களினும் கூரியனவுமாய அம்புகளை மிகுதியாகத் தங்கள் தூணிகளில் நிரப்பியுளர். இன்னும் அவர்கள் தங்களது வில்லின் நாணை இழுத்து இடிபோன்ற பேரொலியை எழுப்பி, கண்டவர் அஞ்சுந் தோற்றமுற்றுளர். நமது குதிரைகள் யாவும் தம் இரும்புக் கடிவாளங்களைப் பற்களினுல் நெரித்துக்கொண்டு, விரைவு மிக்க கரிய குளம்புகளால் நிலத்தை உதைத்துப் புழுதியெழுப்பி உதடு துடிக்க, போர்க்கு ஆயத்தமாயுள. மும்மதங்களைப் பொழியும் முகில் கூட்டம் போன்ற நமது யானைகள், தங்கள் தங்களது நிழலையே பகைவராகக் கருதி, தமது புலால் வீசும், வளைந்த பிறைமதி போன்ற கொம்புகளை அசைத்துக்கொண்டு சினந்து நிற்கின்றன. பண்டொரு நாள் உக்கிர பாண்டியனுக்கு ஆற்ருது புறமுதுகிட்டு ஓடி, இந்திரனின் கையிற் சிக்கிக்கொள்ளாது, கடற்குள் மறைந்து நின்ற உயர்ந்த மைந்நாக மலைபோல நம் அழகிய

உயர்ந்த தேர்கள் தங்களது பரந்த சிறகுகளை விரித்து, 'வீரப் பெரு மக்களே! விரைவில் வாருங்கள்! இம் மென்று கூறுவதற்குள் யாம் அவ் இந்திரனுலகும் செல்வேம்' எனக் கூறுவன போலத் தம் கொடிகளை அசைத்து நிற்கின்றன. பெரும! இவை யாவும் தாங்கள் நேரிற் காணில் நன்கு விளங்கும்.

கொங்கு வேந்தன்:—போர்ப் படைத் தலைவரே! நாற் படையாளரே! யாம் பெரிதும் மகிழ்ந்தேம். நும் போன்ற வீரர்களைப் பெற்ற எமக்கு இனி யாது குறையுளது? தாங்கள் யாவரும் பெரும் பேறுடையவர்கள். உங்களது கொங்கின் தேவி இக்குறை கடல் சூழ் ஞாலத்தைத் தன் ஒரு குடை நிழற்கீழ் ஆளுதற்காக நீங்கள் ஒவ்வொரு வரும் ஒற்றுமை குறையாது, தாயினுஞ் சிறந்த, அவளது அன்பு பெருகிய உளம் மகிழுமாறு, உங்கள் நெஞ்சம் அடக்க இயலா வெய்துயிர்ப்பு அடைய, கண்கள் தீப் பறக்க, புருவங்கள் நெற்றிமேற் செல்ல, மீசைகள் துடிக்க, பற்கள் பொடிபடக் கடித்துச் சினத் தீயை எழுப்பிப் போர் புரிவீர்கள். ஆதலால் நும்மினும் பெரும்புகழ் படைத்தார் யாவருளர்? நீங்கள் தான், கொங்குதேவியின் கொழுவிய குழந்தைகளாவீர். உங்கள் நலங்கருதி அவள் பவானியாகவும் அமராவதியாகவும் நம்மிடை அசைந்து நடந்து, நமக்கு நல்லமுது சுரக்கின்றாள். வீரக் குடிப் போர்ப் படைஞரே! உங்கட்கு என்றும் வெற்றி மிளிர்க! வாழ்வு பெருகுக!!

வீரநாதன்:—வாழிய பெரும! வணக்கம். தங்களது உப்பும் சோறும் உண்டு பெருத்த எங்களது உடல் தங்கட்கு உயர்வும் பெரு வாழ்வும் தோன்றத் தொழிற்படாதொழி யின் அதனினும் கடைப்பட்ட வேறு ஒரு பொருளைக் காணக் கூடுமோ? மேலும் அவ்வுடலுடன் பொருந்திய உயிர், மறுமையில் நன்றி கொன்ற மக்கள் படும் துன்பத் துள் மூழ்கி, வெளிவர வியலாது வாடுமே. நாங்கள் போரின்கண் பெறும் புண்கள் யாவையும் புகழ் அறிவிக்

கும் கண்களென்னக் கொள்வேம். 'போர்க்குறிக் காயமே புகழ்க் குறிக்காயம்' என்பதை எங்களில் ஒவ்வொருவரும் உணர்ந்து வினைவழித் தொழிற்படும் பெற்றியர். பெரும! புண்படாது உலகில் புகழ் பெறலாகுமா? உலகத்தில் ஒவ்வொரு கணப்பொழுதினும் எத்தனையோ நூறுயிரங் கோடிப் பிறவிகள் தோன்றியும் மறைந்தும் ஒழிகின்றனவே? அவை யாவும் கருதுதற்கு உரியனவோ? ஆதலால் எங்கள் படை யாவும் தம் உயிர்க்கண் அன்பின்றி, தங்கள் நாட்டின் பெருமைக்காக வருந்தி உழைத்து அதனுல் எய்தப்பெறும் பேற்றையே மகிழ்ந்து பெறும் சிறப்புடையதாகும். தலைவ! இதுபற்றிய ஐயம் இங்கு எவர்க்கும் இனி வேண்டுவதில்லை. தாங்கள் அருள்கூர்ந்து இதுபோது நம் பாடிநகர்க்கு எழுந்தருளின் இவை யாவற்றையும் எளிதில் அறியலாகும்.

பெருங்குடிலன்:—மன்னர் பெரும! அதுவே நன்று: தங்கட்குத் திருவுளமிருப்பின் யாம் இன்றுமாலை அவண் சென்று நம் படைகளைப் பார்வையிடலாம்.

கொங்கு வேந்தன்:—நல்லது குடில! அதற்கு வேண்டுவன யாவும் இன்னே புரிக. இன்று மாலை யாம் அவண் வருவோம்.

பெருங்குடிலன்:—வீரநாத! நம் மன்னர் பெருந்தகை நம் பாடிநகர்ச் சோதனைக்கு வருமுன்னர் வேண்டுவன யாவும் சிறப்பாகத் திட்டஞ் செய்யக்கடவீர். விரைந்து சென்று ஆவன புரிமின்.

வீரநாதன்:—அவ்வாறே பெரும! (கும்பிட்டு நின்று) எளியேனுக்கு விடையருளவேண்டும்.

பெருங்குடிலன்:—சென்று வருக.

வீரநாதன்:—வணக்கம் (பணிந்து செல்லுகிருன்.)

காட்சி—2 முடிவு.

அரும்பொருள்

அரசிருக்கை - தலைநகரம். நால்வகை அரண் - நில அரண், நீர் அரண், காட்டரண், மலையரண். அஞ்சற்க - அஞ்சவேண்டா ; எதிர்மறை வியங்கோள் வினைமுற்று. நெருநல் - நேற்று. ஒற்றர் - வேவு பார்ப்போர். பொதியம் - பொதியமலை. கவிரம் - பொதிய மலையின் அருகில் உள்ளதொரு மலை. கூற்று - யமன். மாற்றான் - பகைவன். முனைக்குமாயின் - விஞ்சுமாயின். இவண் - இங்கு. உசாவ - வினவ. பற்றுக்கோடு - ஆதாரம். புல்லுரை - அற்ப வார்த்தை. முட்டுக்கட்டை - தடை செய்பவன். ஓர்ந்திலன் - அறிந்திலன் ; இறந்தகால எதிர்மறை வினைமுற்று ; ஓர்ந்தனன். ஆணை - கட்டளை. துணிபு - உறுதி. செவ்விதின் - செவ்வையாக. கழறினாய் - சொன்னாய். தகைமை - தன்மை. புலால் மணக்கும் - புலால் (மாமிச) நாற்றம் நாறும். வேட்கை - ஆசை. தூணி - அம்புக்கூடு. முகில் - மேகம். ஞாலம் - பூமி. வெய்துயிர்ப்பு - பெருமூச்சு. கொழுவிய - கொழுத்த. சுரக்கின்றான் - மிகுதியாகப் பெருக்குகின்றான். இன்னே - இப்பொழுதே.

பயிற்சி

1. இப்பாடத்தில் வந்துள்ள வியங்கோள் வினைமுற்றுகளை எடுத்து எழுதுக.

2. தன்மை, முன்னிலை வினைமுற்றுகளை எடுத்து எழுதுக.

3. உடன்பாடு, எதிர்மறை முற்றுவினைகளையும் எச்சவினைகளையும் எடுத்து எழுதுக.

4. தெரிநிலை, குறிப்பு முற்றுவினை, எச்சவினைகளை எடுத்து எழுதுக.

5. தொகைநிலைத் தொடர்களையும் தொகாநிலைத் தொடர்களையும் எடுத்து எழுதுக.

6. வாக்கியங்களில் அமைத்து எழுதுக :—பிற்போக்கு, பண்டுதொட்டு, பண்பட்ட, கைத்திறமை, அழகொழுகும், மிகையாகாது, பாய்ச்சலாதாரம், பெருமானமுள்ள, அள்ளிக்கொடுத்து, ஒத்துழைத்து.

7. பிரித்துப் புணர்ச்சி இலக்கணம் கூறுக :—படையெடுப்பு, உணர்ந்துளானும், புரக்கப் பெறினும், ஐயமின்று, புல்லுரை, போர்ப்படைகள், நாற்படைகள், படைகளைப் பார்வையிடலாம், பெருந்தகை.

8. அயற்கூற்று வாக்கியங்களை **நேர்க்கூற்று** வாக்கியங்களாக மாற்றுக :—

(i) குடிலன், 'தங்கட்குத் திருவுளம் இருப்பின் யாம் இன்று மாலை அவண் சென்று நம் படைகளைப் பார்வையிடலாம்' என்றான்.

(ii) கொங்கு வேந்தன், 'அதற்கு வேண்டுவன யாவும் இன்னே புரிக. இன்று மாலை யாம் அவண் வருவோம்' என்றனன்.

9. **அயற்கூற்று** வாக்கியமாக மாற்றுக :—

கொங்கு வேந்தன், தம் துணையமைச்சர் நல்லாயனார் சற்று மெதுவுள்ளவர்தானென்றும், அவரது கருத்து ஆண்டுற்ற செயலுக்குப் பொருந்தாது என்பதே தனது துணிபு என்றும் அவர் அவ்வீரநாதனை அவண் விரைவிற் கொணர வேண்டும் என்றும் கூறினான்.

10. எழுவாய் பயனிலை செயப்படு பொருள்களையும் அவற்றின் அடைமொழிகளையும் முறைப்படி எழுதுக :—

"ஆய்மன்னன் அண்டிரன் தன் இளமை தொட்டு, தக்கவரை அடுத்துக் கல்வி கேள்விகளிற் சிறந்து, உலகியல் முறைகளையும் போரியல் நுணுக்கங்களையும் செவ்வனே உணர்ந்துளானும்."

11. மேலே தரப்பட்டுள்ள வாக்கியத்தில் இருக்கும் சொற்களுக்குச் சொல்லிலக்கணம் கூறுக.

12. இப்பாடத்தில் வந்துள்ள உவமைத் தொடர்களை எடுத்து எழுதுக.

13. தொடர்களை எடுத்து எழுதி, இன்ன தொடர் என்பதையும் குறிக்க :—

'வேள் ஆயைப் பாடிச் செல்வார்க்கு அவன் யானையை மற்றைப் பொருள்களினும் மிகுத்து வழங்குகின்றான் என்ற செய்தி ஒன்றே அவன் நாட்டின் களிற்றுப் பெருக்கை உணர்த்துவதால் அவன் மிகுந்த யானைப் படையுடையன் என்பதூஉம் அறியலாகும்.'

I. வாழ்த்து

1. கடவுள் வாழ்த்து

அருள்பழுத்த பழச்சுவையே ! கரும்பே ! தேனே !
ஆரமிழ்தே ! என்கண்ணே ! அரிய வான
பொருள்அனைத்தும் தரும்பொருளே! கருணை நீங்காப்
பூரணமாய் நின்றஒன்றே! புனித வாழ்வே !
கருதரிய கருத்ததனுள் கருத்தாய் மேவிக்
காலமுந்தே சமும்வகுத்துக் கருவி ஆதி
விரிவினையும் கூட்டிஉயிர்த் திரளை ஆட்டும்
விழுப்பொருளே! யான்சொலும்விண் ணப்பம் கேளே.

—தாயுமானுர்

2. தமிழ்த்தாய் வாழ்த்து

பல்உயிரும் பலஉலகும்
படைத்தளித்துத் துடைக்கினும்ஓர்
எல்லைஅறு பரம்பொருள்முன்
இருந்தபடி இருப்பதுபோல்,
கன்னடமும் களிதெலுங்கும்
கவின்மலையா ளமும்துளுவும்
உன்உதரத் துதித்தெழுந்தே
ஒன்றுபல ஆயிடினும்,
ஆரியம்போல் உலகவழக்(கு)
அழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே.

—சுந்தரம் பிள்ளை

ஆசிரியர் வரலாறு

1. கடவுள் வாழ்த்தைப் பாடியவர் **தாயுமானவர்**. இவர் கி. பி. 17-ஆம் நூற்றாண்டினர். இவர் திருச்சிராப்பள்ளி மலையில் உள்ள 'தாயுமானவர்' என்னும் பெயர்பூண்ட சிவபிரான் அருளாற் பிறந்தவர்; ஆதலின் **தாயுமானவர்** என்றே பெயர் பெற்றார்.

இவர் தம் தந்தையாரைப் போலவே விஜயரகுநாத சொக்கலிங்க நாயக்கர் சமஸ்தானத்தில் கணக்கராகவே இருந்தார்; பின் திருச் சிக்கு வந்த **மௌன குரு**வினிடம் உபதேசம் பெற்றுத் துறவு மேற் கொண்டார். இவர் பாடிய பாக்கள் கடவுள் இயல்பை நன்கு விளக்குவன; பக்தியை உண்டாக்குவன; பொருள் ஆழமும் அழகும் உடையன.

2. **சுந்தரம் பிள்ளை** என்பவர் திருவனந்தபுரம் அரசர் கல்லூரி யில் பேராசிரியராக இருந்தவர்; எம். ஏ. பட்டம் பெற்றவர்; தமிழ் ஆராய்ச்சி மிக்குடையவர்; **மனேன்மணீயம்** என்னும் சிறந்த நாடக நூலை இயற்றியவர்; பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி யுள்ளனர். இவர் கி. பி. 1897-ல் காலமானர்.

அரும்பொருள்

1. புனித - தூய. வாழ்வே - வாழ்வாக இருக்கும் கடவுளே. கருதரிய - நினைத்தற்கு அருமையான. கருத்ததனுள் - நினைப் பிற்குள். கருத்தாய் - நினைப்பாய். மேவி - பொருந்தி. ஆதி - முதலிய. விரிவினை - உலகப்படைப்பை விரிவாக்கி. திரள் - கூட்டம். ஆட்டும் - 'யான், எனது' என்னும் மாயையை உண் டாக்கி ஆட்டி வைக்கும். விழுப்பொருள் - மேலான பொருள். விண்ணப்பம் - முறையீடு.

2. அளித்து - காத்து. துடைத்தல் - அழித்தல். எல்லை அறு - முடிவற்ற. பரம் - மேலான. கடவுள் - பிரமன், திருமால், சிவனுக மாறி முத்தொழில்களைச் செய்யினும், அதனல் தனது முழுத்தன்மைக்குப் பங்கம் இன்றி என்றும் ஒரே தன்மையாக இருத்தல்போல, தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு வம் முதலிய மொழிகளைத் தோற்றுவித்தும் தன் எழிலும் இளமை யும் குன்ருமல், ஆரியம்போல் பேச்சு வழக்கில் இறவாமல் இருக் கின்றது. களி - களிப்புக்குரிய. கவின் - அழகிய. உதரம் - வயிறு. ஆரியம் - சம்ஸ்கிருதம். செயல் மறந்து - செய்வகை அறியாது. வாழ்த்துதும் - வாழ்த்துவோம்.

கேள்விகள்

1. தாயுமானவர் வரலாறு யாது?
2. அவர் கடவுளை எப்படிச் சிறப்பிக்கிருர்?
3. சுந்தரம் பிள்ளை வரலாறு யாது?

4. பரம்பொருளுக்கும் தமிழ் மொழிக்கும் உள்ள ஒருமைப்பாடு யாது?

5. ஆரியத்துக்கும் தமிழுக்கும் உள்ள வேறுபாடு யாது?

6. கடவுள் வாழ்த்துப்பாவின் பொருளை 10 வரிகளில் எழுதுக.

7. தமிழ்த்தாயின் சிறப்பை 8 வரிகளில் எழுதுக.

II. நீதி

1. திருக்குறள்

1. கற்றதனுல் ஆய பயன் என்கொல் வால்அறிவன்
நற்ருள் தொழாஅர் எனின்?

2. செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்க லாதார்.

3. அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.

4. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்;
ஆகுல நீர பிற.

5. அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

6. இனிய உளவாக இன்னுத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று.

7. காலத்தி னுற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

8. சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொரு
கோடாமை சான்ருேர்க் கணி. [பால்

9. அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை
ஆர்இருள் உய்த்து விடும்.

10. யாகாவார் ஆயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு.

11. ஒழுக்கம் விழுப்பம் தரலால், ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

12. அழுக்கா றெனஒரு பாவி திருச்செற்றுத்
தீஉழி உய்த்து விடும்.

13. புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின், சாதல்
அறம்கூறும் ஆக்கம் தரும்.

14. தீயவை தீய பயத்தலால், தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

15. ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேர்அறி வாளன் திரு.

16. தன்னைத்தான் காக்கில் சினம்காக்க ; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

17. பிறர்க்கின்னா முற்பகல் செய்யின், தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்.

18. தோன்றிற் புகழொடு தோன்றுக ; அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று.

ஆசிரியர் வரலாறு

திருக்குறளைச் செய்தவர் **திருவள்ளுவர்.** இவரது வரலாறு உங்கள் உரைநடைப் பகுதியில் 17-ஆம் பாடத்தில் வந்துள்ள தன்றோ ?

அரும்பொருள்

1. வால் அறிவன் - மெய்யுணர்வினை உடையவன். கொல் - அசைச்சொல். பிறவிப் பிணிக்கு மருந்தாகலின் 'நற்றாள்' என்றார். கடவுளைத் தொழுதலே கல்வியறிவிற்குப் பயன் என்பது கருத்து. தொழாஅர் - **அளபெடை.**

2. அரிய - அருமையான செயல்கள். செய்கலாதார் - செய்யமாட்டாதவர்.

3. அந்தணர் - அம் + தண் + அர் : அழகிய குளிர்ச்சி (அருள்) உடையார். பூண்டு - விரதமாகக் கொண்டு. செந்தண்மை - செவ்விய அருள். உயிர்கள்மேல் அருள் உடையராய முனிவரே அந்தணர் ஆவர்.

4. ஆதல் - ஆக. பிற - சொல்லும் வேடமும். ஆகுலம் - ஆரவாரம். நீர - தன்மை உடையன. அனைத்து அறன் - அதுவே அறம் எனப்படும்.

5. எல்லாம் - எல்லாப் பொருளாலும். என்பு - உடம்பாலும். தமக்கு - தமக்கே. ததீசி முனிவர் முதுகெலும்பை இந்திரனுக்குக் கொடுத்தார்; சிபி தன் உடல் இறைச்சியைப் பருந்திற்குக் கொடுத்தார்.

6. இனிய - நல்ல சொற்கள். இன்னாத - தீய சொற்கள். கவர்ந்தற்று - கவர்ந்ததுபோலாகும். இனிய × இன்னாத. கனி × காய்.

7. காலத்தினால் - காலத்தில். நன்றி - உதவி. ஞாலத்தின் - உலகத்தினும். காலத்தை நோக்கி நன்றியை உணர வேண்டுமே அன்றிப் பொருளை நோக்கலாகாது.

8. கோல் - தராசு. கோடாமை - ஒரு பக்கம் சாயாமை. சான்றோர் - நற்குணங்களால் நிறைந்தவர். அணி - அழகு.

9. அமரர்உள் - தேவர் வாழும் உலகத்தில். உய்க்கும் - செலுத்தும். இருள் - நரகம், **தானியாகுபெயர்.**

10. யா - அஃறிணைப்பன்மை வினாப்பெயர். சோகாப்பர் - துன்புறுவர். இழுக்கு - குற்றம். காக்க - **வியங்கோள் வினைமுற்று.**

11. விழுப்பம் - சிறப்பு. ஓம்பப்படும் - பாதுகாக்கப்படும். உயிரினும் - உயிரைவிட.

12. அழுக்காறு - பொறாமை, கொடுமை பற்றிப் 'பாவி' எனப்பட்டது. திரு - செல்வம். தீஉழி - நரகம். செற்று - அழித்து. செறு - பகுதி.

13. புறம் கூறுதல் - காணாத போது இகழ்ந்து கண்ட போது புகழ்தல். அறம் - அறநூல்கள், **ஆகுபெயர்.** ஆக்கம் - மறுமை இன்பம். புறங்கூறிப் பொய் வாழ்வு வாழ்தலினும் இறத்தல் நல்லது.

14. உடனே சுடுவது அல்லாது, மற்றொரு காலத்தும் மற்றோர் இடத்தும் மற்றோர் உடம்பிலும் சென்று சுடுதல் தீக்கு இல்லை ஆதலின் 'தீயினும் அஞ்சப்படும்' எனப்பட்டது.

15. ஊர் உணி - ஊரார் உண்ணத் தக்க நீரையுடைய குளம். ஊர் - **இடவாகுபெயர்.** உணி - உண்ணி, **தொகுத்தல் விகாரம்.** அவாம் - அவாவும், விரும்பும். உலகு - உலகத்தார், இடவாகு

பெயர். பேர் அறிவாளன் - பிறர்க்கு உதவும் நல்லறிவு படைத்தவன். இது **உவமை அணி** கொண்ட செய்யுள்.

16. கொல்லும் - கடுந்துன்பங்களைத் தரும்.

17. இன்னா - தீயவற்றை. முற்பகல் × பிற்பகல். 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்'—**பழமொழி**.

18. புகழ் - புகழுக்குக் காரணமாகிய குணங்கள், **ஆகுபெயர்**. புகழுக்கு உரிய குணங்களோடு பிறவாதார் விலங்காய்ப் பிறத்தல் நன்று.

கேள்விகள்

1. திருவள்ளுவர் வரலாறு யாது?
2. திருக்குறளின் சிறப்பு யாது? (முதல் பாடத்திலிருந்து விடை கூறுக.)
3. கற்றவர் கடமை யாது?
4. பெரியர், சிறியர்—வேறுபாடு யாது?
5. 'அந்தணர்' யாவர்? எப்படி?
6. அறம் எனப்படுவது யாது? பிற—யாவை?
7. 'கனிஇருப்பக் காய் கவர்தல் போலும்.'—எது?
8. 'ஞாலத்தின் மாணப் பெரிது'—எது? எப்படி?
9. சான்றோர்க்கு அணி யாது?
10. அடக்கம், அடங்காமை—வேறுபாடு என்ன?
11. 'நாகாக்க'—ஏன்?
12. ஒழுக்கம் தருவது யாது? அதனால் நாம் என்ன செய்ய வேண்டும்?
13. அழுக்காறு செய்யும் தீமை யாது?
14. சாதல் நல்லது—எதைவிட? ஏன்?
15. எவை தீயினும் அஞ்சப்படும்? ஏன்?
16. பேரறிவாளன் திரு எது போன்றது? எப்படி?
17. 'சினம் காக்க'—ஏன்?
18. 'தன்வினை தன்னைச் சுடும்'—இப் பழமொழி கொண்ட குறள் யாது?
19. 'தோன்றாமை நன்று'—யார்? ஏன்?
20. அன்பிலார், அன்புடையார்—வேறுபாடு என்ன?

2. நாலடியார்

பொறுமை

1. வேற்றுமை இன்றிக் கலந்திருவர் நட்டக்கால்
தேற்ரு ஒழுக்கம் ஒருவன்கண் உண்டாயின்,
ஆற்றும் துணையும் பொறுக்க ; பொருணயின்
தூற்ருதே தூர விடல்.

பெரியவர்—சிறியவர் நட்பு

2. பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும் ;—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலும் தேயுமே
தானே சிறியார் தொடர்பு.

நட்பு ஆராய்தல்

3. யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும் ;—யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் ; எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்.

4. கோட்டுப்பூப் போல மலர்ந்துபின் கூம்பாது
வேட்டதே வேட்டதா நட்பாட்சி ;—தோட்ட
கயப்பூப்போல் முன்மலர்ந்து பின்கூம்பு வாரை
நயப்பாரும் நட்பாரும் இல்.

5. கடையாயார் நட்பிற் கமுகனையர் ; ஏனை
இடையாயார் தெங்கின் அனையர் ;—தலையாயார்
எண்ணரும் பெண்ணைபோன்(று) இட்டஞான் றிட்ட
தொன்மை உடையார் தொடர்பு. [தே

6. நாய்க்கால் சிறுவிரல்போல் நன்கணியர் ஆயினும்
ஈக்கால் துணையும் உதவாதார் நட்பென்னும் ?
சேய்த்தானும் சென்று கொளல்வேண்டும் செய்வினை
வாய்க்கால் அனையார் தொடர்பு. [க்கும்

நட்பில் பிழை பொறுத்தல்

7. நல்லார் எனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லார் எனினும் அடக்கிக் கொளல்வேண்டும்;
நெல்லுக்(கு) உமியுண்டு; நீர்க்கு நுரையுண்டு;
புல்இதழ் பூவிற்கும் உண்டு.

கயவர்—சான்ஞேர் இயல்பு

8. ஒருநன்றி செய்தவர்க்(கு) ஒன்றி எழுந்த
பிழைநூறும் சான்ஞேர் பொறுப்பர்;—கயவர்க்கு
எழுநூறு நன்றிசெய்(து) ஒன்றுதீ தாயின்
எழுநூறும் தீதாய் விடும்.

கணவனைக் கொல்பவர்

9. எறிஎன் றெதிர்நிற்பாள் கூற்றம்; சிறுகாலை
அட்டில் புகாதாள் அரும்பிணி;—அட்டதனை
உண்டி உதவாதாள் இல்வாழ்பேய்; இம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை.

உலக அறியாமை

10. குலம்தவம் கல்வி குடிமைமூப்(பு) ஐந்தும்
விலங்காமல் எய்தியக் கண்ணும்—நலம்சான்ற
மையறு தொல்சீர் உலகம் அறியாமை
நெய்யிலாப் பால்சோற்றின் நேர்.

ஆசிரியர் வரலாறு

இவற்றைப் பாடியவர் சமண முனிவர் பலராவர். இந்நூல் நீதி நூல் ஆதலாலும், சிறப்புடை நூல் ஆதலாலும், நாலடி வெண்பாக்களால் ஆனதாலும், '**நாலடியார்**' என 'ஆர்' விகுதி பெற்று வழங்கலாயிற்று. இதன் காலம் கி. பி. 6-ஆம் நூற்ருண்டு என்னலாம். இந்நூல் 400 வெண்பாக்களை உடையது; அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது.

அரும்பொருள்

1. **கலந்து** - மனம் கலந்து. **நட்டக்கால்** - நேசித்த இடத்து. **நள்** - பகுதி. **தேற்ரு** - தெளிய முடியாத. **ஆற்றும் துணையும்** -

பொறுக்கும் அளவும். பொறுக்க - பொறுக்கக்கடவன். தூற்ருதே - பழியாமல். விடல் - நட்பை விடக்கடவன்.

2. நந்தும் - வளரும். கேண்மை - நட்பு. வான் ஊர் - வானில் ஊர்ந்து செல்லும். வைகலும் - நாள்தோறும். தொடர்பு - நட்பு.

பெரியவர் நட்புக்கு வளர்பிறை உபமானம்.

சிறியார் தொடர்புக்குத் தேய்பிறை உபமானம்.

3. நட்பு ஆராய்தல் - நண்பரைத் தேர்ந்தெடுத்தல், **ஓரீஇ** - நீக்கி. **கெழீஇ** - தழுவி, இவை **அளபெடைகள்.** அறிந்தறிந்தும் - பலகால் பழகியும், **அடுக்குத் தொடர்.** மெய்யதா - உடம்பில்பட்ட நிலேயிலும். யானே போன்றவர் நட்பைக் கொள்ளாதே, நாயனேயார் நட்பை நாடுக.

4. கோடு - மரக்கிளே. கூம்பாது - குவியாமல். வேட்டதே ....ஆட்சி - முதலில் விரும்பிய முறையே என்றும் விரும்பி நிற்பது நட்பைக் காத்தலாகும். தோட்ட - இதழ்களே உடைய. கயம் - குளம். நயப்பார் - விரும்புபவர். நட்பார் - நட்புச் செய்பவர்.

5. கமுகு - பாக்கு மரம். **தெங்கு** - தென்னே மரம், இச் சொல் வழக்கு மலேயாள நாட்டில் உண்டு. பெண்ணே - பனே மரம். கமுகினேக் கடைசிவரை நீரிட்டுப் போற்றி வளர்க்க வேண்டும்; அதுபோன்ற நண்பரும் உளர். தெங்கினேச் சில நாட்களுக்கு ஒரு முறையேனும் அவ்வாறு போற்ற வேண்டும்; அத்தகைய நிலேயில் நண்பர் அமைதலும் உண்டு. ஆனல் பனே நீர் எதிர்பாராதே பயனேத் தரும்; ஆதலின், நமது உதவியை எதிர்பாராமல் நமக்கு நன்மை செய்யும் நண்பரையே நாடிக் கொள்க. தொன்மை - பழமை. உடையார் - பாராட்டுபவர். தொடர்பு - நட்பின் இயல்பு.

6. அணியர் - நெருங்கியவர். துணேயும் - அளவும். என் ஆம் - என்ன பயன் தரும்? சேய்த்தானும் - தொலேவில் உள்ள தானலும். செய் - கழனி. ஈக்கால் - சிறிய அளவைக் குறிக்க வந்தது.

7. நனி - மிக, **உரிச்சொல்.** அல்லார் - நல்லவர் அல்லாதவர், தீயவர். அடக்கி - பிழை பொறுத்து. கொளல் - சேர்த்துக் கொள்ளல். புல் இதழ் - தாழ்ந்த இதழ், புற இதழ். பிழை பொறுத்தலே நட்பிற்கழகு.

8. கயவர் - கீழோர். நூறு, எழுநூறு என்பன எண்ணின் மிகுதியைக் குறித்து நின்றன, பல.

9. கூற்றம் - யமன், உயிரை உடலிலிருந்து கூறுபடுப்பவன், **காரணப் பெயர்.** கூற்றம், பிணி, பேய், படை - **உவமை ஆகுபெயர்கள்.** படை - கொல்லுதலையுடையது, ஆயுதம்.

10. கண்ணும் - இடத்தும். சான்ற - பொருந்திய. மை - குற்றம். அறு - அற்ற. தொல்சீர் - பழமையான புகழ். நேர் -சமானம்.

கேள்விகள்

1. 'நாலடியார்'—பெயர்க் காரணம் யாது?

2. இதன் ஆசிரியர் யார்? காலம் யாது? உட்பிரிவுகள் எவை?

3. நண்பனது ஒழுக்கக் கேட்டைக் கண்டபின் என்ன செய்ய வேண்டும்?

4. வளர்பிறை, தேய்பிறை—இவை குறிக்கப்பட்ட சந்தர்ப்பம் என்ன?

5. யானை, நாய்—இவற்றின் இயல்பு என்ன?

6. கோட்டுப்பூ, குளத்துப்பூ—உபமேயங்கள் எவை?

7. கமுகு, தெங்கு, பெண்ணை—இவற்றின் இயல்பு என்ன? இவற்றுக்கு உபமேயங்கள் என்ன?

8. நாய்க்கால், ஈக்கால், வாய்க்கால்—இவை எவற்றை விளக்க வந்தன?

9. 'நெல்லுக்கு உமியுண்டு'—இதன் கருத்து யாது? இஃது ஏன் கூறப்பட்டது?

10. சான்றோர், கயவர்—இவர்தம் மனப்பான்மை என்ன?

11. கொண்டானைக் கொல்பவர் யாவர்? எப்படி?

12. 'நெய்யிலாப் பால் சோற்றின் நேர்'—எது?

3. பழமொழி

கல்விச் சிறப்பு

1. ஆற்றவும் கற்றார் அறிவுடையார்; அஃதுடையர்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை;—அந்நாடு
வேற்றுநா டாகா தமவேயாம்; ஆயினால்,
ஆற்றுணா வேண்டுவ தில்.

அறிவே சிறந்தது

2. அறிவினுல் மாட்சிஒன் றில்லா ஒருவன்
பிறிதினுல் மாண்ட தெவனும்? — பொறியின்
மணிபொன்னும் சாந்தமும் மாலையும் இன்ன
அணிஎல்லாம் ஆடையின் பின்.

முதலில் தம்மை உணர்க

3. தங்குற்றம் நீக்கலர் ஆகிப் பிறர்குற்றம்
எங்கேனும் தீர்த்தற் (கு) இடைப்புகுதல்—எங்கும்
வியன்உலகில் வெள்ளாடு தன்வளி தீரா (து)
அயல்வளி தீர்த்து விடல்.

குலவித்தை கல்லாமல் வருதல்

4. உரைமுடிவு காணுன் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன்; குலவிச்சை
கல்லாமல் பாகம் படும்.

கல்லாரிடம் உபதேசித்தல் பொல்லாது

5. கல்லா தவரிடைக் கட்டுரையின் மிக்கதோர்
பொல்லாத தில்லை ஒருவற்கு—நல்லாய்!
இழுக்கத்தின் மிக்க இழிவில்லை; இல்லை
ஒழுக்கத்தின் மிக்க உயர்வு.

தன்வாயால் தானே கெடுதல்

6. பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்;—நல்லாய்!
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலும்தன் வாயால் கெடும்.

கெட்டார்க்கு நட்டார் இல்லை

7. முட்டின் (று) ஒருவர் உடைய பொழுதின்கண்
அட்டிற்றுத் தின்பவர் ஆயிரவர் ஆபவே;
கட்டலர்தார் மார்ப! கலிஊழிக் காலத்துக்
கெட்டார்க்கு நட்டாரோ இல்.

தான் உயரத் தானே காரணம்

8. எமக்குத் துணையாவார் வேண்டுமென் றெண்ணித்
தமக்குத் துணையாவார் தாம் தெரிதல் வேண்டா ;
பிறர்க்குப் பிறர்செய்வ துண்டோ ? மற் றில்லை ;
தமக்கு மருத்துவர் தாம்.

அற்பரிடம் அதிகாரம் கொடார்

9. உடைப்பெருஞ் செல்வத் (து) உயர்ந்த பெருமை
அடக்கமில் உள்ளத்தன் ஆகி—நடக்கையின்
ஒள்ளியன் அல்லான்மேல் வைத்தல் குரங்கின்கைக்
கொள்ளி கொடுத்து விடல்.

தம் வலிமை இல்லார் புகழ் எய்தார்

10. வன்சார்(பு) உடையர் எனினும், வலிபெய்து
தம்சார்(பு) இலாதாரைத் தேசுன்றல் ஆகுமோ ?
மஞ்சுசூழ் சோலை மலைநாட ! யார்க்கானும்
அஞ்சுவார்க் கில்லை அரண்.

ஆசிரியர் வரலாறு

இதனை இயற்றியவர் **முன்றுறை அரையனுர்** என்பவர். இவர் பாண்டிய நாட்டில் உள்ள முன்றுறை என்னும் ஊரின் அரசர் ; சமண சமயத்தினர். இவர் காலம் ஏறக்குறைய கி. பி. 6-ஆம் நூற்ருண்டு என்னலாம். ஒவ்வொரு பழமொழியை ஈற்றில் பெற்ற நானூறு வெண்பாக்களை உடைய நூல் **பழமொழி** எனப் பெயர் பெற்றது. இது பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்று.

அரும்பொருள்

1. ஆற்றவும் - மிகவும். வேற்று - வேறு. ஆற்று - வழி. உணு - உணவு. தமவே - தம்முடையனவே.

‘ கற்ருேர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு ’ என்பது பழமொழி.

2. மாட்சி - பெருமை. மாண்டல் - சிறத்தல், **மாண்** - பகுதி. எவன் - என்ன பயன் ? பொறித்தல் - அழகு பெறச் செய்தல். மணி - இரத்தின நகை. பொன் - பொன் நகை. சாந்தம் - சந்தனம். அணி - நகை.

3. நீக்கலர் - நீக்காதவர், எதிர்மறை **வினையால் அணையும் பெயர்.** இடைப் புகுதல் - செல்லுதல். வியன் - பெருமை. வளி - வாத நோய். வெள்ளாட்டுப் பால் வாத நோய்க்கு ஏற்றது.

4. உரை முடிவு - உரைத்துக்கொண்ட வழக்கினது முடிவை. காணுன் - காணமாட்டாதவன். இளமையோன் - இளைஞனை கரிகாலன். உவப்ப - மகிழும் வகை. சொல்லால் - அவர்கள் சொற்களைக் கொண்டே. முறைசெய்தான் - நியாயத் தீர்ப்பு உரைத்தான். சோழன் - கரிகாலன். விச்சை - வித்தை. பாகம் படும் - செவ்வையாக அமையும்.

5. கட்டுரை - உறுதிச் சொல். இழுக்கம் × ஒழுக்கம். நல்லாய் - விளிவேற்றுமை. நல்லாய் - **மகடூஉ முன்னிலை.**

6. துயர்ப்படுக்கும் - துன்பத்தில் அகப்படுக்கும். நுணல் - தவளை. வாயால் - தன் குரலைக் காட்டித் தன் வாயாலே (தன்னைப் பகைவர்க்கு அகப்படுத்தும்.)

7. முட்டு - குறைவு. உடைய - செல்வமுடைய. அட்டிற்று - சமையல் செய்த உணவு. ஆயிரவர் - பலர். கட்டு அலர்தார் - கட்டிய பூமாலை. கலியூழி - கலியுகம். நட்டார் - நண்பர்.

8. தெரிதல் - தேடல், ஆராய்தல். மருத்துவர் - வைத்தியர்.

9. உடைப் பெருஞ் செல்வம் - உடைமை மிக்க செல்வம். நடக்கையின் - ஒழுக்கத்தால். ஒள்ளியன் - சிறந்தவன். அல்லான் - அல்லாதவன்.

10. வன்சார்பு உடையர் - வலியாரைத் துணைக் கொண்டவர். பெய்து - உண்டாக்குவித்து. தம் சார்பு - தம் பலம். தேசு - புகழை (உண்டாக்கும் செயல்). மஞ்சு - மேகம். 'தம் பலம் கொண்டு அம்பலம் ஏறவேண்டும்' என்பது பழமொழி. மஞ்சு... மலைநாட !—**ஆடூஉ முன்னிலை.**

கேள்விகள்

1. கல்வியுடையார் சிறப்பு யாது?
2. கல்வி அறிவே சிறந்தது—எதனால்?
3. வெள்ளாடு குறிக்கப்பட்ட சந்தர்ப்பம் யாது?
4. சோழன் எங்ஙனம் முறை செய்தான்?
5. கெட்டார்க்கு நட்டார் இல்லை—இதனை நன்கு விளக்குக.
6. நுணல் என்ன செய்யும்? இதற்கு உபமேயம் என்ன?
7. கல்லார்க்கு உபதேசித்தல் தவறு—ஏன்?

8. தமக்கு மருத்துவர் தாம்—இதன் கருத்து யாது?

9. குரங்கின்கைக் கொள்ளி கொடுத்துவிடல்—இதற்கு உபமேயம் யாது?

10. 'தேசு ஊன்றல் ஆகுமோ'—யாரை? ஏன்?

11. இப்பகுதியில் மகடூஉ முன்னிலை, ஆடூஉ முன்னிலை வந்துள்ள பாக்கள் எவை?

12. 'பழமொழி'—பெயர்க் காரணம் யாது?

13. ஆசிரியர் வரலாறு யாது?

14. மஞ்சு, அரண், தேசு, சார்பு, ஒள்ளியன், நட்டார், அலர், தார், தமவே, மாட்சி, வளி, முறைசெய், இழுக்கம், நுணல், அட்டிற்று—பொருள் கூறுக.

4. அறநெறிச் சாரம்

அறத்தின் இயல்பு

1. மெய்ம்மை பொறையுடைமை மேன்மை தவம்அடக்கம்
செம்மைஒன் றின்மை துறவுடைமை - நன்மை
திறம்பா விரதம் தரித்தலோ டின்ன
அறம்பத்தும் ஆன்ற குணம்.

அடக்கம்

2. 'பலகற்றோம் யாம்'என்று தற்புகழ வேண்டா;
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும்;
சிலகற்றார் கண்ணும் உளவாம் பலகற்றார்க்கு
அச்சாணி அன்னதோர் சொல்.

உயர் குணங்கள் மூன்று

3. தூயவாய்ச் சொல்லாடல் வன்மையும், துன்பங்கள்
ஆய பொழுதாற்றும் ஆற்றலும், - காய்விடத்து
வேற்றுமை கொண்டாடா மெய்ம்மையும் இம்மூன்றும்
சாற்றுங்கால் சாலத் தலை.

ஊழ்

4. இறந்த பிறப்பில்தாம் செய்த வினையைப்
பிறந்த பிறப்பால் அறிக ; - பிறந்திருந்து
செய்யும் வினையால் அறிக இனிப்பிறந்(து)
எய்தும் வினையின் பயன்.

உற்ருர் உறவினர்

5. நல்லறம் எந்தை, நிறைஎம்மை, நன்குணரும்
கல்விஎன் தோழன், துணிவெம்பி ; - அல்லாத
பொய்ச்சுற்றத் தாரும் பொருளோ? பொருளாய
இச்சுற்றத் தாரில் எமக்கு.

ஆசிரியர் வரலாறு

இதன் ஆசிரியர் **முனைப்பாடியார்**. இவர் காலம் கி. பி. 13-ஆம் நூற்ருண்டு என்பர். சமயம் - சமணம். இந்நூல் காட்சி, ஒழுக்கம், ஞானம் என்னும் மூன்று பகுதிகளை உடையது ; 226 வெண்பாக்களைக் கொண்டது.

அரும்பொருள்

1. செம்மை - நடுவுநிலைமை. ஒன்று இன்மை - தனக்கென ஒரு பொருளையும் வைத்திராமை. நன்மை - நற்செயல். திறம்பா - மாறுபடாத, ஈறுகெட்ட எதிர்மறைப் **பெயரெச்சம்**. ஆன்ற - மேலான.

2. அச்சாணி அன்னதோர் சொல் - அச்சாணி போன்ற உறுதியான (அவசியமான) சொல்.

3. தூயவாய் - (சொல்லிலும் பொருளிலும்) சுத்தமாய். ஆற்றும் - தளராதிருக்கும். காய்வு இடத்து - தம்மை வெறுப்பவர் இடத்து. காய்வு, வெறுத்தல், வெறுப்பவர், **தொழில் ஆகு பெயர்**.

4. இறந்த - முன். அறிக - **வியங்கோள் வினைமுற்று**. எய்தும் - அடையும்.

5. நல்+அறம் - நல்லறம். எந்தை - எம் அப்பன். எம்மை - எம் அம்மை. துணிவு - துணிச்சல். எம்பி - எம் பின்னவன்.

கேள்விகள்

1. அறம் பத்து எவை?

2. 'பல கற்ரேம் யாம்' என்று தற்புகழ வேண்டா—ஏன்?

3. உயர்குணங்கள் மூன்று எவை?

4. இறந்தகால—நிகழ்கால நிகழ்ச்சிகளால் அறியத் தக்கவை யாவை?

5. மெய்ச் சுற்றத்தார் யாவர்?

6. ஆசிரியர் வரலாறு யாது?

7. நூலின் உட்பிரிவுகள் எவை? காலம் யாது?

8. அச்சாணி, தற்புகழ், பிறந்திருந்து, துணிவெம்பி, நல்லறம், பொழுதாற்றும், துறவுடைமை—பிரித்துக் காட்டுக.

III. கதை

குசேல உபாக்கியானம்

கண்ணனும் குசேலனும் ஓர் ஆசிரியரிடம் பயின்றவர். குசேலன் தன் மனைவி மக்களுடன் காட்டில் தவம் செய்து வந்தான். கண்ணன் துவாரகைக்கு அரசனாக இருந்தான். வறுமை மிகுதிப்பட்டதால் குசேலன் மனைவி தன் கணவனைக் கண்ணனிடம் சென்று பொருள் பெற்று வரும்படி வேண்டினாள். குசேலன் கண்ணனுக்குச் சிறிது **அவல்** முடிந்துகொண்டு துவாரகை சென்ருன்.

குசேலன் கண்ணனைக் கண்டது

1. வருந்தும்ஓர் மிடியன் சேம
 வைப்பெதிர் கண்டாற் போலும்,
அருந்துண(வு) இழந்தோன் விண்ணோர்
 அமுதெதிர் கண்டாற் போலும்,
பரிந்துவெப்(பு) உழலு வோன்கற்
 பகம்எதிர் கண்டாற் போலும்,
சரிந்தபற் றினன்மெய் ஆசான்
 தனைஎதிர் கண்டாற் போலும்,

2. எண்ணனைக்(கு) இலங்கு மார்பம்
ஈந்தருள் பிரானை, நீல
வண்ணனை, திகிரி சங்கம்
வலம்இடம் உறக்கொண் டானை,
மண்அனைத் தும்பு ரக்கும்
வாசுதே வனை,ம ணக்கும்
கண்ணனை துளவத் தாமக்
கண்ணனைக் கண்ணிற் கண்டான்.

கண்ணன் உபசாரம்

3. 'வழிநடந் திளைத்த வேஇம்
மலரடி இரண்டும்!' என்று
கழிமகிழ் சிறப்ப மெல்ல
வருடினன் கமலக் கண்ணன்;
பழியில்பல் உபசா ரங்கள்
பண்ணவும், தெரியா னகி
ஒழிவறு தவக்கு சேலன்
ஒன்றும்பே சாதி ருந்தான்.

கண்ணன் குசேலனை விசாரித்தல்

4. 'நின்னுடைய மனைக்கிழத்தி
நிரம்புபெறு நீர்மையளே?
மன்னுடைய சொற்காத்துச்
சோர்விலா மாண்பினளே?
தன்னுடைய உயிராய்நின் -
றனைப்பேணும் தன்மையளே?
உன்னுடைய வருவாய்க்குத்
தக்கசெல வுஞற்றுவளே?

5. சொன்னகா ரியமனைத்தும்
சொன்னபடி இயற்றுவளே?
என்னமிடி வரினும்வெளி
எடுத்தியம்பா இயல்பினளே?

தன்னமும்நா யகன்பழிதூற்
றுதமையத் தக்கவளே?
பன்னருமா மறைஉணர்ந்த
பளகறுநற் குணக்குன்றே!

6. ‘பைங்குதலை வாய்மைந்தர்
பலர்பிறக்க வேண்டுமே?
எங்கும்அரும் புகழ்உடையாய்!
எத்தனைமைந் தர்கள்பிறந்தார்?
அங்கவரைப் பேரவையோர்
அணிதரச்செய் செயலனைத்தும்
சிங்கலறப் புரிந்தனையே?
செய்தனையே உபநயனம்?

குருகுல நினைவுகள்

7. இருவேமும் முன்னாளில்
இலங்குசாந் தீபமுனி
வருகாமர் அடிவணங்கி
மாமறைகற் றுணர்ந்திடுநாள்
பெருகார்வத் தொடும்பேசிக்
கொண்டிருந்த பேச்செல்லாம்
திருகாரா வுளத்துநினைத்
திருக்கின்று யோசிறப்ப?

8. கொள்ளைமறை உணர்ச்சிமிகு
குருராயன் பத்தினியாம்
தள்ளைநமைப் பார்த்‘தமுது
சமைப்பதற்கிந் தனம்இன்றின்(று)
எள்ளருநன் மைந்தர்காள்!
கொடுவாரும்’ எனஏவ,
விள்ளருமோர் பெருங்காட்டுள்
விறகொடித்துத் திரிந்தனமே.

கண்ணன் சிற்றுண்டி கேட்டல்

9. 'பந்தனை அகன்ற மேலோய்!
பற்பல நாட்குப் பின்பு
வந்தனை ; எனக்கென் கொண்டு
வந்தனை ? அதனை இன்னே
தந்தனை யாயின் நன்று ;
தருசுவைப் பக்க ணத்தென்
சிந்தனை நின்ற(து)' என்றான்
தெரிவரும் வஞ்சக் கள்வன்.

கண்ணன் அவல் தின்னல்

10. மலிதரும் அன்பின் வந்த
வண்பொதி அவிழ்த்து நோக்கி,
வலிதரும் அவற்றுள் 'நன்று
வாய்த்தது நமக்கீ' தென்று,
ஒலிதரும் கழற்கால் ஐயன்
ஒருபிடி அவலைக் காதல்
பொலிதர எடுத்து வாயில்
போகட்டுக் கொண்டான் மாதோ.

ஆசிரியர் வரலாறு

இதன் ஆசிரியர் வல்லூர் **தேவராசப்பிள்ளை** என்பவர். இவர் காலம் கி. பி. 19-ஆம் நூற்றாண்டு. இவர் மஹாவித்வான் **மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை** அவர்கள் மாணவர்.

அரும்பொருள்

1. மிடியன் - ஏழை. சேமவைப்பு - சேர்த்த பணம். அருந்து - உண்ணும். பரிந்து - உபசரித்து. வெப்பு - வெயிற் கொடுமை. கற்பகம் - குளிர்ந்த மரம். சரிந்த பற்றினன் - ஆசை அழிந்தவன். ஆசான் - குரு. கண்ணன் 'இன்னவரைக் கண்டாற்போலக்' குசேலனைக் கண்டான் என்பது பொருள்.

2. எண்ணனை - எட்டுத்தேவியர். எண் - எட்டு. அனைக்கு - அன்னையர்க்கு, தாய்மார்க்கு. தசஅவதாரங்களில் உடன் இருந்த

தேவியார் எண்மர். திகிரி - சக்கரம். புரக்கும் - காக்கும். கண்ணனை =கள் நனை - தேனில் நனைந்த. உற - பொருந்தும்படி. கண்ணன் - கிருஷ்ணன்.

3. மலரடி - உவமைத்தொகை. இளைத்த - **பலவின்பால் வினைமுற்று.** கழி - மிக்க, உரிச்சொல். கமலக்கண் - உவமைத்தொகை. குசேலன் - கந்தை அணிந்தவன்.

4. மனைக்கிழத்தி - மனைக்கு உரிமையுடையவள் × கிழவன்- உரிமையுடையவன். கிழவன் × கிழவி - இவை வேறு. நிரம்பு பெறு நீர்மையளே - மன அமைதி கொண்டவளோ? ஏ - வினா எழுத்து. மன் - கணவன். மாண்பினள் - பெருமையுடையவள். பேணும் - காக்கும். உஞற்றுவளே - செய்பவளோ?

5. மிடி - வறுமை. தன்னமும் - சிறிதேனும். பன் - சொல். பளகறு - குற்றமற்ற. குணக்குன்று - குணமலை. இவ்விரு பாக்களிலும் **உத்தம மனைவியின்** இயல்புகள் கூறப்பட்டுள்ளன.

6. பைங்குதலை - பசுமை + குதலை. குதலை - மழலைச்சொல். பேரவையோர் - அறிஞர். அணிதரச்செய் செயல் - அறிஞரை நெருங்கும் தகுதிக்குரிய கல்வி. சிங்கல் - குறைவு. ஏகாரங்கள் - வினா எழுத்துகள். இப் பாட்டில் தந்தை மக்கட்குச் செய்ய வேண்டும் கடமை கூறப்பட்டுள்ளது.

7. சாந்தீபமுனி - குருவின் பெயர். காமர் - அழகிய. திருகு - வஞ்சகம். ஆரா - இராத.

8. **தள்ளை** - தாய், இது குடநாட்டுச்சொல், தெலுங்கர் **தல்லி** என்பர். தமிழர் **தாய்** என்பர். தள்ளை - குரு மனைவி. இந்தனம் - விறகு. எள் - இகழ். விள்ளரு - அடர்த்தி மிக்க. திரிந்தனம் - தன்மைப் பன்மை வினைமுற்று.

9. பந்தனை - உலகப்பற்று. இன்னே - இப்பொழுதே. பக்கணம் - பக்ஷணம், சிற்றுண்டி. சிந்தனை - கவனம். தெரிவரும் - நம் போன்றோர் அறிதற்கு அருமையான (மாயவன் கண்ணன்).

10. அன்பின் வந்த - குசேலன் அன்போடு கொணர்ந்த. வண்பொதி - வளப்பம் மிகுந்த அவல் மூட்டை. என்று - என்று. கழல் - வீரச் சதங்கை. ஐயன் - மேலோன், கண்ணன். காதல் பொலிதர - அன்பு மேலிட. போகட்டு - போட்டு. மாதோ - அசைச்சொல்.

கேள்விகள்

1. நூலாசிரியர் யார்? காலம் யாது?
2. இப்பகுதியின் முன்தொடர்பு யாது?
3. குசேலனைக் கண்ணன் கண்டது எவரைக் கண்டது போல் இருந்தது?
4. எத்தகைய கண்ணனைக் குசேலன் கண்டான்?
5. கண்ணன் செய்த உபசாரம் யாது?
6. கண்ணன் குசேலன் குடும்பம் பற்றி என்னென்ன விசாரித்தான்?
7. உத்தம மனைவியின் இலக்கணம் என்ன?
8. தந்தை மக்கட்குச் செய்யும் கடமை யாது?
9. குருகுலத்தில் மாணவர் வாழ்க்கை எப்படி இருந்தது?
10. கண்ணன், குருகுல வாழ்க்கையில் நடந்த எவற்றைக் குசேலனுக்கு நினைவூட்டினன்?
11. கண்ணன் குசேலனை என்ன கேட்டான்?
12. கேட்டபின் யாது செய்தான்?
13. கண்ணன் நிலைமை யாது? குசேலன் நிலைமை யாது? இவர்கள் முதுமையிலும் அன்புடன் இருந்தனர்—எதனால்?
14. நீ இப் பாடப் பகுதியால் அறியும் படிப்பினை யாது?
15. கண்ணனைப்பற்றி வரும் வருணனையை விளக்குக.

IV. பலசுவைப் பகுதி

1. தனிப்பாடல் திரட்டு

சீதக்காதியின் கொடைச் சிறப்பு

1\. ஓர்தட்டி லேபொன்னும், ஓர்தட்டி
லேநெல்லும் ஒக்கவிற்கும்
கார்தட் டியபஞ்ச காலத்தி
லே,தங்கள் காரியப்பேர்
ஆர்தட் டினும்தட்டு வாராம
லேஅன்ன தானத்துக்கு
மார்தட் டியதுரை மால்சீதக்
காதி வரோதயனே.

2. ஈயாத புல்லவர் இருந்தென்ன ?
போயென்ன ? எட்டிமரம்
காயா திருந்தென்ன ? காய்த்துப்
பலன்என்ன ? கைவிரித்துப்
போயா சகம்என் றுரைப்போர்க்குச்
செம்பொன் பிடிபிடியாய்
ஓயாமல் ஈபவன் மால்**சீதக்**
காதி ஒருவனுமே.

சீதக்காதி இறந்தபோது பாடியவை

பூமா திருந்தென்ன ? புவிமா திருந்தென்ன ? பூதலத்தில்
நாமா திருந்தென்ன ? நாமிருந் தென்ன ? நல் நாவலர்க்குக்
கோமான், அழகமர் மால்**சீதக் காதி** கொடை மிகுந்த
சீமான் இறந்திட்ட போதே புலமையும் செத்ததுவே.

உடன் பிறந்தோர் ஒற்றுமை

செஞ்சுடரின் மைந்தனையும் தென் இலங்கை வேந்தனையும்,
பஞ்சவரில் பார்த்தனையும் பாராதே ;—விஞ்சு
விரதமே பூண்டிந்த மேதினியை ஆண்ட
பரதனையும் ராமனையும் பார்.

2. கலிங்கத்துப் பரணி

நாற்படை நடத்திய போர்

5. எறிகடல் ஓடுகடல் கிடைத்தபோல்
இருபடை களும்எதிர் கிடைக்கவே,
மறிதிரை ஓடுதிரை மலைத்தபோல்
வருபரி ஓடுபரி மலைக்கவே.

6. கனவரை ஓடுவரை முனைத்தபோல்
கடகரி ஓடுகரி முனைக்கவே,
இனமுகில் ஓடுமுகில் எதிர்த்தபோல்
இரதமும் இரதமும் எதிர்த்தவே.

3. கம்ப ராமாயணம்

சுமித்திரை வீரவுரை

[இராமனும் சீதையும் காடு செல்வதை அறிந்த சுமித்திரை தன் மகனை இலக்குவனைப் பார்த்து இவ்வீரவுரை விளம்பினாள்.]

7. 'ஆகாத தன்றால் உனக்கவ் வனம்இவ் வயோத்தி ;
மாகாதல் இராமன் நம்மன் னவன் ; வையம் ஈந்தும்
போகா உயிர்த்தா யர்நம்பூங் குழல்சீதை என்றே
ஏகாய் ; இனிஇவ் வயின்நிற் றலும்ஏதம்' என்றாள்.

பின்னும் பகர்வாள், 'மகனே ! இவன் பின்செல் ; தம்பி
என்னும் படியன்(று) ; அடியா ரின்ஏவல் செய்தி ;
மன்னும் நகர்க்கே இவன்வந் திடில்வா ;அ தன்றேல்
முன்னம் முடி 'என் றனள்வார் விழிசோர நின்றாள்.

4. புற நானூறு

கடமை

9. ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே ;
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே ;
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே ;
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே ;
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கி,
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.'

இன்ப வாழ்க்கை

10. 'யாண்டுபல ஆக நரைஇல ஆகுதல்
யாங்கா கியர்?' என வினவுதிர் ஆயின்,
மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர் ;
யான்கண் டனையர்என் இளையரும் ; வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் ; அதன்தலை
ஆன்றவிந்(து) அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே.'

ஆசிரியர் வரலாறு

1. முதல் மூன்று பாக்களைப் பாடியவர் **படிக்காசுப்புலவர்.** இவர் தொண்டை நாட்டுக் களத்தூரினர்; செங்குந்த மரபினர்; சைவ சமயத்தினர்; **படிக்காசு** பெற்றதால் இப் பெயர் பெற்றவர். இவர் சேது சமஸ்தான வித்வானாக இருந்தவர். இவர் கி. பி. 18-ஆம் நூற்றாண்டினர். இவர் போன்ற புலவர் பலர் பாடிய தனிப்பாடல்கள் 'தனிப்பாடல் திரட்டு' என்னும் நூலில் உள்ளன.

2. நான்காம் பாடல் அதிவீர ராம பாண்டியனது தாயார் பாடியது. தம் மக்கள் இருவர் பகைமை பாராட்டிய போது இவர் இதனைப் பாடி அவரது பகைமை நீக்கினராம். இவர் காலம் 16-ஆம் நூற்றாண்டு.

3. கலிங்கத்துப் பரணியைப் பாடியவர் **ஜயங்கொண்டார்** என்பவர். இவர் முதற் குலோத்துங்க சோழன் காலத்தவர்; அஃதாவது கி. பி. 11, 12-ஆம் நூற்றாண்டினர். இவர் அவ் வரசன் கலிங்க நாட்டின்மீது கொண்ட வெற்றியைச் சிறப்பித்து இந் நூலாகப் பாடிப் பரிசு பெற்றார். இவர் 'பரணி' (போர்ப் பாடல்) பாடுவதில் சமர்த்தர் எனப் பெயர் பெற்றவர்.

4. இராமாயணம் பாடியவர் **கம்பர்.** இவர் சோழ நாட்டினர்; மூன்றாம் குலோத்துங்க சோழன் அவைப் புலவராக இருந்தவர்; கி. பி. 12-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இருந்தவர். இவர் **கவிச் சக்கரவர்த்தி** என்னும் பட்டம் பெற்றவர். இவர் பாடிய இராமா யணப் பாக்களின் தொகை 10,500. இவர் வேளாளர் என்பர் பலர்; வைணவர்.

5. 9-ஆம் செய்யுளைப் பாடியவர் **பொன்முடியார்** என்னும் பெண் புலவர். இவர் அவரவர் கடமைகளை இப் பாவில் நன்கு விளக்கியுள்ளார்.

6. 10-ஆம் பாடலைப் பாடியவர் **பிசிர் ஆந்தையார்.** இவர் சங்கப் புலவர்; எனவே, 1800 ஆண்டுகட்கு முற்பட்டவர்; பாண் டிய நாட்டில் உள்ள 'பிசிர்' என்னும் ஊரினர். இவரைச் சிலர், 'நீர் வயதாகியும் நரை இன்றி இருக்கிறீரே, காரணம் என்ன?' என்று கேட்ட போது சொன்னதே இப்பாட்டு. இப் பாடல்கள் இரண்டும் **புறநானூறு** என்னும் நூலில் இருப்பவை. புறநானூற் றைப்பற்றி நீங்கள் முதல் பாடத்தில் படித்தீர்கள் அல்லவா?

அரும்பொருள்

1. ஒக்க - சமமாக. கார் - மழை. காரியப் பேர் - காரியஸ்தர். தட்டினும் - தடுத்தாலும். தட்டு - கஷ்டம். மார்தட்டிய - முன்வந்த. மால் - சிறந்த. சீதக்காதி - இவர் பெயர் **சையத் காதர்** என்பது. இது சிறிது சிறிதாக மாறி இறுதியில் **சீதக்காதி** என வந்தது, **மரூஉமொழி**. இவர் ஒரு **முஸ்லிம் வள்ளல்**; சிறந்த கொடையாளி; தமிழை வளர்த்த பெரியார்; ஊர் - தாமிரபரணி கடலொடு கலக்கும் இடத்திற்கு அருகில் உள்ள **காயல் பட்டினம்** என்பது. துரை - சிறந்தவன். வரோதயன் = வர + உதயன் - **குணசந்தி** பெற்ற வடமொழித்தொடர், வரத்தால் பிறந்தவன்.

2. புல்லர் - அற்பர். எட்டி - கசக்கும் காயையுடைய மரம். யாசகம் - பிச்சை. பிடிபிடி - அடுக்குத்தொடர்.

3. பூமாது - இலக்குமி. புவிமாது - நிலமகள். நாமாது - சரஸ்வதி. கோமான் - தலைவன். புலமை - புலவர் அறிவு.

4. செஞ்சுடரின் மைந்தன் - சுக்கிரீவன் (சூரியன் மகன்). இலங்கை வேந்தன் - விபீடணன். பஞ்சவர் - பாண்டவர். பார்த்தன் - அருச்சுனன். பாராதே - அவர்களைப் பின்பற்றாதே. விஞ்சு - மிகுந்த. முதல் இருவர் பகைவரோடு சேர்ந்து சகோதரத்ரோகம் செய்தவர்; அருச்சுனன் ஒரு சமயம் தருமனையே பழித்தவன்; கன்னனைக் கொன்றவன். பின்னிருவரும் கடுஞ் சோதனைக் காலத்தும் அன்பு மாறாமல் இருந்தவர்.

5. இதிலும் அடுத்த பாடலிலும் வரும் 'ஒடு'-க்கள் எல்லாம் மூன்றாம் வேற்றுமை உருபுகள். எறிகடல் - அலை வீசும் கடல். கிடைத்த - போரிட்டன. கிடைக்க - சண்டையிட. மறி - மறிந்து செல்லும். திரை - அலை. மலைத்த - சண்டையிட்டன. பரி - குதிரை.

6. கன - பருத்த. வரை - மலை. முனைத்த - போரிட்டன. கடகரி - மதயானை. முகில் - மேகம்.

7. 'உனக்கு இராமன் வனமே அயோத்தி; இராமனே தசரதன் (தந்தை); சீதையே உன் தாய்மார். இங்ஙனம் எண்ணிக் கொண்டு இராமன் பின் செல். இங்கு நில்லாதே' என்றாள்

சுமித்திரை. குழல் - கூந்தல். ஏதம் - தவறு. ஏகாய் - **ஏவல் வினைமுற்று**. மா - சிறந்த. காதல் - அன்பு. வையம் - உலகம்.

8. 'நீ தம்பி என்னும் முறையில் செல்லாதே; ஏவலனைப் போலச் சென்று வேலை செய்; இவன் மீண்டு வரின் நீயும் வா; இன்றேல், இவனுக்கு முன் இற' என்று கூறி அன்பினால் கண்ணீர்விட்டு நின்றாள். செய்தி - செய்வாய், **ஏவல் வினைமுற்று**. முடி - இற. வார் - பெரிய. சோர - நீர் சோர.

9. புறம் தருதல் - ஜனசமூகத்துக்குக் கொடுத்தல். தலை - சிறந்த. சான்றோன் - கல்வி கேள்விகளிற் சிறந்தவன். வடித்து - செய்து. நன்னடை - நற்பழக்கம். ஒளிறு - பிரகாசிக்கும். சமம் - போர். முருக்கி - செய்து. களிறு - ஆண்யானை. எறிந்து - கொன்று. பெயர்தல் - மீளுதல். காளை - வீரன் (மகன்), **உவமை ஆகுபெயர்**.

10. யாண்டு - வருஷங்கள். யாங்காகியர் - எப்படி முடித்தீர்? வினவுதிர் - கேட்பீர். மாண்ட - மாட்சிமைப்பட்ட. நிரம்பினர் - அறிவும் ஒழுக்கமும் நிரம்பியவர். இளையர் - ஏவலர். யான் கண்டனையர் - என் சொற்படி நடப்பவர்; அல்லவை - தீயவை. செய்யான் - செய்யாமல். அதன் தலை - அதற்கு மேலாக. ஆன்று - கற்கவேண்டியவற்றைக் கற்று. அவிந்து - ஆசைகளை விட்டு, அடங்கிய - புலன்களை அடக்கிய. சான்றோர் - பெரியோர்.

'(1) மனைவியும் மக்களும் அறிவு நிரம்பியவர்; (2) ஏவலர் சொற்படி நடப்பவர்; (3) அரசன் செங்கோலான்; (4) ஊரில் பலர் சான்றோர். முதல் இருவரால் இல்லற இன்பமும், சான்றோரால் சமூக இன்பமும், அரசனால் நாட்டு இன்பமும் நிலைத்திருத்தலால் யானும் இன்பமே அறிவேன். எனவே, நரையும் மூப்பும் இல்லை' என்றார்.

கேள்விகள்

1. சீதக்காதி யார்? அவர் காலம் யாது?

2. படிக்காசுப் புலவர்—பெயர்க் காரணம் யாது? வரலாறு யாது?

3. சீதக்காதி—இஃது எதன் மரூஉ மொழி?

4. சீதக்காதியின் கொடைச் சிறப்பு யாது?

5. சீதக்காதிக்குப் பின் யார் யார் இருந்தும் பயனில்லை? ஏன்?

6. ‘பாராதே’ யாரை? ஏன்? ‘பார்’—யாரை? ஏன்?

7. ‘பார்-பாராதே’ என்று பாடியவர் யார்? ஏன் இதைப் பாடினர்?

8. பரணி பாடியவர் யார்? ஏன் இதைப் பாடினர்? இவர் காலம் யாது?

9. நாற்படைகட்கும் உவமைகள் யாவை?

10. கம்பர் வரலாறு யாது? காலம் என்ன?

11. சுமித்திரை வீரவுரை யாது?

12. பொன்முடியார் யார் யார் கடமைகளைக் கூறியுள்ளார்? கடமைகள் யாவை?

13. பிசிர் ஆந்தையார் வரலாறு யாது?

14. அவர் நரை இல்லாமைக்குக் கூறும் காரணங்கள் எவை?